# மனம் உருகிடுதே தங்கமே!



ரமணிசந்திரன்

# மனம் உருகிடுதே தங்கமே!

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

“பிரேமிதா, உன் நோட்டுப் புத்தகங்கள் எல்லாவற்றையும் எடுத்து வா!” என்று சற்று அதட்டலாக பவதி உத்திரவிட்டாள்.

உத்திரவிட்டாளே தவிர, உள்ளூர சற்று உதைப்புதான்!

சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள். எல்லோருமே பணம் என்கிற கொம்பு முளைத்தவர்கள். கூடவே இந்த வயதிலேயே அதை அறிந்து வைத்தும் இருக்கிறவர்கள்.

இங்கே மாணவமணிகளை அதட்டுவது பெரும்பாவம்! ஆபத்தானதும் கூட!

படிக்க அனுப்பினால் பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டுமே ஆசிரியர்களின் கடமை. அதை விட்டுவிட்டுத் தப்பு செய்வதற்கெல்லாம் திட்டினால் பிள்ளைகளின் மனநலம் கெட்டுவிடாதா?

இப்படியெல்லாம் நினைப்பது சற்று அதிகப்படியாக இருக்கலாம். ஆனால், பொதுவாக மாணவர்களிடம் இதமாகப் பேசிப் புரிய வைக்கும்படியாகத்தான் அங்கே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதாவது இதமாகப் பேசித்தான் புரியவைக்க வேண்டும்.

அதில் பிரச்சினையும் பவதிக்கு அதிகம் வந்தது கிடையாது. சட்டென்று கோபப்படுவது அவளுக்குப் பழக்கமில்லை என்பதோடு, அதற்கு அவசியமும் நேர்ந்தது கிடையாது.

அன்பான பெற்றோர், பிரியமான தங்கை. கையைக் கடிக்காத வருமானம் உள்ள குடும்பம்.

இதில் குறைப்படவோ கோபப்படவோ என்ன அவசியம் நேரப் போகிறது?

தங்கை வாசந்தி சில சமயங்களில் கேலியும் கிண்டலுமாக வெறுப்பேற்ற முயற்சி செய்வாள். அக்கா தங்கையாக இருவரும் சற்று நேரம் காச் மூச்சென்று கத்திக் கொள்வார்கள். ஆனால் உடனேயே அந்தக் கோபம் தணிந்து போகும்.

ஒருவருக்கொருவர் ஆன்லைனில் ஏதாவது ஆர்டர் பண்ணிப் பரிசளித்து சமாதானப்படுத்தி விடுவார்கள்.

படிப்பதில் கூட இன்னதுதான் படிக்க வேண்டும் என்று பெற்றோர் அவர்களைக் கட்டாயப்படுத்தியது கிடையாது.

பெரியவள் மனித வள மேம்பாடு பற்றிப் படித்தாள். நாட்டையே உயர்த்தப் போகிறாளாம்! ஆனால் படித்து முடித்ததும் ஒரு பெரிய

கல்வி நிறுவனத்தில் இளம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் வாய்ப்புக் கிடைக்க அதில் ஆர்வம் கொண்டு பிள்ளைகளின் திறமையை வளர்ப்பதில் ஈடுபட்டாள்.

அடுத்தவளோ சைக்காலஜி படித்தாள்.

எல்லோரின் மன ஆழத்தில் புதைந்து கிடக்கும் ரகசியங்களை எல்லாம் வெளிக் கொண்டு வந்து விடுவாளாம்! அதைக் கொண்டு துப்பறியும் தொழிலில் கொடி கட்டிப் பறக்கப் போகிறாளாம்!

“முதலில் உன் அம்மாவின் மன ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஆசைகளைக் கண்டு பிடி. அவள் என்னவோ உங்கள் இருவருக்கும் சீக்கிரமே திருமணத்தைச் செய்து வைத்துப் பேரன் பேத்திகளைத் தூக்கிக் கொஞ்சப் போகிறாளாமே!”

“என்னா . . தூ . . .?” என்றனர் இரு பெண்களும். “வெறும் நாற்பத்தைந்தே வயது! சேர்ந்து சென்றால் அக்காவா என்று கேட்கிறார்கள்! அதற்குள் பாட்டியாகும் ஆசையா? முதலில் தலைமுடி பாதியேனும் நரைக்கட்டும் .அப்புறம் பார்ப்போம்!” என்று ஒருத்தி சொன்னால், “ஆமாம் ஆமாம்” என்பாள் அடுத்தவள்.

“நாங்கள் இரண்டு பேரும் வேலை செய்து சம்பாதித்து, அவரவர் காலில் நிற்கிறபோதுதான் கல்யாணப் பேச்சை எங்களிடமே எடுக்கலாம். அதுவரை அந்தப் பேச்சுக்கே பெரிய தடாவாக்கும்!”

“நீங்களே சம்பாதிக்க விரும்புவது எல்லாம் சரிதான், தெளிவாகப் புரிகிறது. ஆனால் உங்கள் காலில் நிற்பது என்றால் என்னது? இப்போதும் நீங்கள் இரண்டு பேரும் அவரவர் காலில்தானே நிற்கிறீர்கள்? என்ன பவதிப்பா, நீங்களே சொல்லுங்கள். நான் சரியாகத்தானே கேட்கிறேன்? இரண்டும் இப்படி மிரட்டி முழிக்கிறதுகள்!” என்று அப்பாவி போலக் கண்களை விரித்து பத்மாவதி கேட்க, “மா . . !” என்று பெண்கள் பல்லைக் கடிப்பார்கள்!

“எப்படிம்மா தத்ரூபமாகப் பேக்கு மாதிரியே கண்ணை விரிக்கிறீர்கள்?” என்று பெரியவள் பவதி கேட்பதுண்டு.

“அக்கா, ஏமாறாதே! அம்மா பேக்கு மாதிரி நடிக்கவில்லை. நிஜமாகவே அப்படித்தான்.” என்று சின்னவள் வாசந்தி சிரியாமல் கூற, சற்று நேரம் வீட்டில் ஒரே கலகலப்பாக இருக்கும்!

இப்படித்தான் பவதி கல்வி கற்பிக்கும் துறையைத் தேர்ந்தெடுத்து வேலையிலும் அமர்ந்து விட்டாள்.

ஈசிஆர் ரோடில் ஒரு பெரிய பள்ளி. பெரிய பள்ளி என்றால் மாணவர்களின் எண்ணிக்கையினால் மட்டும் என்று சொல்ல முடியாது. ஆனால் பெரும் புகழ் வாய்ந்த பள்ளி.. அதில் இடம் கிடைப்பதே அரிது என்று கூறப்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்கள்

எல்லோருக்குமே பெரும் வசதிகள் செய்து தரப் பட்டிருந்தன. நவீன சாதனங்கள், பள்ளி முழுவதும் ஏசி, தளங்களுக்கு லிஃப்ட் இன்னும் எல்லா வசதிகளுமே.

இன்னும் முக்கியமாக ஊதியமும் அதீ . . கம்!

பத்திரிகையில் தேவை விளம்பரத்தைப் பார்த்துவிட்டு பவதி விண்ணப்பிக்க நேர் முகத் தேர்வில் உடனே வேலையும் கிடைத்தது.

ஏழெட்டு வயதுச் சிறுமிகளுக்குக் கற்றுத் தருவது மிகவும் இனிமையாகவே அவளுக்கு இருந்தது. வகுப்பிலும் பதினைந்தே சிறுவர் சிறுமிகள்.

ஒவ்வொரு பிள்ளையிடமும் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே மாணவர் எண்ணிக்கை குறைவாக . .பதினெட்டுக்கும் குறைவாகவே வைத்திருப்பதாக தலைமை ஆசிரியை ஒரு தரம் கூறி அவள் கேட்டிருக்கிறாள்.

அதே போல அவளது வகுப்பில் இருந்த பதினைந்து பிள்ளைகளையும் பவதியால் தனித்தனியாகக் கவனிக்கவும் முடிந்தது.

பெருமளவுக்கு.

ஓர் ஆசிரியரின் கடமை கனிவும் கண்டிப்புமாக மாணவர்களை வழி நடத்துவது என்று அவள் கற்பனை செய்தது போல அங்கே நடந்து கொள்வதுதான் சற்றுக் கடினமாக இருந்தது.

கனிவும் அதிகமாகத் தெரிந்துவிடக் கூடாது. உடனே அது குறிப்பிட்ட யாரிடமாவது பாரபட்சம் காட்டுவதாக ஆகி விடும். அதே போலக் கண்டிப்பதும் எதிரிடையான அபிப்பிராயத்தை உருவாக்கி விடும்.

இப்படிப் பிரின்சியின் பலவாறான வழிகாட்டுதல்களுக்கு ஏற்றவாறு பவதியின் ஆசிரியப் பணி பெரிதும் நல்ல விதமாகத்தான் சென்று கொண்டிருந்தது. அப்போதுதான் அந்தப் பெண் பிரேமிதாவின் பிரச்சினை தலையெடுத்தது.

பப்பி ஃபேட் முழுதாக மறையாத குளுகுளுவென்ற உருவம். எப்போதும் புன்னகையோடு கூடிய இனிய முகம். ஓரளவு நன்றாகப் படிக்கிற பெண்தான். பொதுவாக அவளது மதிப்பெண்கள் எண்பதுகளில் இருக்கும். சந்தோஷமான சிறுமி.

ஆனால் கடந்த இரு மாதங்களில் அவளது தோற்றம், படிப்பு குணம் எல்லாவற்றிலும் பெரும் மாற்றம் தெரிந்தது.

வரவரப் படிப்பில் மிகவும் மந்தமாகிக்கொண்டே போகலானாள். வீட்டுப் பாடம் கொடுப்பது எதையும் செய்வது

இல்லை. அவ்வப்போது வைக்கும் வகுப்புத் தேர்வுகளில் மதிப்பெண் வேகமாகக் குறைந்து கடைசியாக ஒற்றை இலக்கத்துக்குப் போய் விட்டது.

எண்பதுகளில் இருந்தது இப்படிக் குறைவானேன்?

முகத்தில் இருந்த சிரிப்பும் காணாமல் போயிருந்தது.

தனியாக ஒரு மாணவியை நேரடியாகத் தண்டிப்பது அந்தப் பள்ளியில் கடினம். எனவே, தன்னை வந்து பார்க்கும்படி பிரேமிதாவுடைய பெற்றோருக்குக் கடிதம் ஒன்றைச் சிறுமியிடம் பவதி கொடுத்து அனுப்பினாள். அனுப்புகிறாள். பெற்றோரிடம் விவரத்தைச் சொன்னால் அவர்கள் கவனித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை.

ஒரு நாள் ஒன்றும் நடக்கவில்லை. அன்று பொறுத்துப் பார்த்தால், மறுநாளும் கடிதம் பிரிக்கப் படாமலேயே திரும்பி வரவும் அனுப்பியவளுக்கு எரிச்சல் வந்தது.

கடிதத்தைப் பற்றிப் பெற்றோரிடம் பிரேமிதா தெரிவித்தாளா இல்லையா?

கேட்டால் பெரிய விழிகளில் கண்ணீர் ததும்ப நின்றாள் அவள்.

யோசித்து, அடுத்த முறை அனுப்பிய கடிதத்தில் பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வருமாறு பிரேமிதாவிடம் கூறினாள்.

மறுக்காமல் வாங்கிச் சென்றவள் மறுநாள் வந்து கடிதத்தை அப்படியே திருப்பிக் கொடுத்தாள். அப்பா, அம்மா ரெண்டு பேரும் இப்போ பார்க்க நேரமில்லை என்று சொல்லி விட்டார்கள் என்று தரையைப் பார்த்தவண்ணம் சிறுமி கூறினாள்.

பொய்யாக இருக்குமா?

“நிமிர்ந்து என்னைப் பார்த்துப் பேசு” என்று கண்டிப்புடன் கூற வாயைத் திறந்த பவதி ஒன்றும் சொல்லாமலே வாயை மூடிக் கொண்டாள். ஏனெனில் அதற்குள் தரையில் இரண்டு பெரிய சொட்டுக் கண்ணீர் விழுந்து சிதறியிருந்தது.

ஆசிரியை கண்டிப்பாளோ என்று அஞ்சி அழுகிறாளோ?

“சரிசரி. போய் உட்கார்.” என்று சிறுமியை அனுப்பிவிட்டு பாடத்தை எடுத்து நடத்தத் தொடங்கினாள் அவள்.

பிரச்சினை என்னவென்றால் அந்த வகுப்பு கணக்குப்பாடமாக இருந்தது. வகுப்பில் “எல்லோரும் ஜாமெட்ரி பாக்சை எடுத்து மேஜை மீது வையுங்கள்.” என்றால், ப்ரேமிதாவின் அருகே இருந்த பெண் எழுந்து, “மிஸ், பிரேமிதா ஜாமெட்ரி பாக்ஸ் கொண்டு வரவில்லை.” என்று உற்சாகத்தோடு கத்தி அறிவித்தாள்.

இனிக் கேளாமல் தீராது.

கேட்டால், “ஆயா எடுத்து வைக்கவில்லை, மிஸ்.” என்று மறுபடியும் தலையைத் தோங்கப் போட்டுக் கொண்டாள் சிறுமி.

இவளை என்ன செய்வது?

முன்னொரு தரம் இதே போன்ற சம்பவம் ஒன்று நடந்தது.

“இதற்கு ஆயா எதற்கு? அட்லசை நீ எடுத்து வருவதற்கு என்ன?” என்று ஒரு மாணவியிடம் கேட்டதற்காக அந்தச் சிறுமியுடைய தாய் ஆத்திரமாக வந்து பிரின்சியிடம் புகார் செய்து ஒரே களேபரமாகிவிட்டது.

அந்த மாணவியுடைய தாயைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டுப் பிரின்சி  புத்தி சொன்னதும் ஆசிரியைக்கே. அதாவது அவளுக்கே.

“பாரம்மா, இவர்கள் எல்லாம் சாப்பிடச் சோறு இல்லை என்றால் பீட்சா வரவழைக்க வேண்டியதுதானே என்று கேட்கிற வர்க்கம். அன்றன்று புத்தகப்பை எடுத்து வைக்க ஓர் ஆள், வீட்டுப்பாடம் பார்க்க இன்னொருவர் என்று வீட்டில் இருப்பார்கள். அந்த மட்டும், தேர்வு எழுத இன்னொருவரை அனுப்பவில்லையே என்று நாம் சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டும்.

“கவனிம்மா, இது கோடீசுவரப் பிள்ளைகள் படிக்கும் பள்ளி. வகுப்புக்கு இருபதுக்கும் குறைவாகப்  பிள்ளைகள் என்பதைக் கவனித்தாயா? தங்கள் பிள்ளைகளிடம் தனிக் கவனம், இந்தப் பள்ளி செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிற பெற்றோரின் நன்கொடைதான் பள்ளி இவ்வளவு சிறப்பாக நடக்கக் காரணமே. பள்ளியே அரசு நிதி வாங்காமல் தனிப்பட்டோரே சேர்ந்து நடத்துவது. அவர்களை நாம் எதிர்க்க முடியாது. முடிந்தவரை ஒத்துப் போய்விடு. முடியாதபோது நீதான் ஒதுங்கிக் கொள் என்றார் தலைமை.

மனம் பொறுக்காமல், “அந்தப் பிள்ளைகளுக்கே இது நல்லதில்லையே மேடம்?”  என்று கேட்டாள் பவதி.

“அவர்களது பணத்தால் பிள்ளைகளுக்கு வேண்டிய நல்லதை அவர்களே செய்து கொள்வார்கள். ஊதியம் நிறையத் தருகிறார்கள் அல்லவா? வேறு இடங்களில் இதில் பாதி கிடைக்குமா? மகிழ்ச்சியோடு இரு.”  என்று அவளுக்குத்தான் நீளமாகப் புத்தி சொன்னார் பிரின்சி.

இப்போதும் அதுவேதானே நடக்கும்?

எனவே எரிச்சலை அடக்கிக்கொண்டு, “அப்படியானால் பாடத்தை நன்கு கவனி. அடுத்த வகுப்புக்குஞாபகமாக எடுத்து வா. “

என்று கரும்பலகைப் பக்கம் திரும்பிய பவதியை ஏதோ உறுத்தியது.

திரும்பிப் பார்த்தால், வழக்கமான இரண்டாம் வரிசை நடு இடத்தை விட்டுக் கடைசியில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள் அந்தப் பிரேமிதா.

வகுப்பில் பாடத்தை நன்கு கவனிக்கச் சொன்னால் மூலையில் போய் உட்கார்ந்து கொள்கிறாளா? பார்வை கூட மேஜை மேல்தான் இருந்தது.

பாடத்தில் ஆர்வமும் இல்லை. ஆசிரியை சொல்லுக்குப் பணிவுமில்லை.

இப்படியே விடுவது சரியில்லை. இது தொத்தாக மற்ற மாணவமாணவிகளுக்கும் பரவலாம். ஒரு நல்ல ஆசிரியையாகப் பணி புரிய விரும்பும் அவளால், யாரும் எப்படியும் போகட்டும் என்று விட்டுவிட முடியாது!

எனவே, இன்னொரு கடிதம் சற்றுக் கடுமையாக எழுதி அனுப்பினாள் அவள்.

பெண்ணைப் படிக்க வைக்கும் ஆர்வம் இருக்கிறதா இல்லையா? இப்படியே போனால், தேர்வில் வெற்றி பெற்று மேல் வகுப்புக்குப் போக முடியாது. அத்தோடு இது பற்றிப் பிரின்சியிடம் போக நேரும் என்று எழுதி அந்தப் பெண்ணிடம் கொடுத்துக் கட்டாயம் பதில் வாங்கி வரவேண்டும் என்று சற்று அழுத்தத்துடனே கூறினாள்.

ஆனால், அவர்கள் முந்திக்கொண்டு பிரின்சியிடம் போய்விட்டால்?

பொறுக்க மாட்டாமல் கடிதத்தை அனுப்பிவிட்டு உள்ளே பதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் பவதி.

என்ன வரப் போகிறது? அவளுக்குப் பதிலா? அல்லது வேலை நீக்க உத்திரவா?

பிரேமிதா வீட்டுக்குப் போய் என்ன செய்தாளோ?

யாரோ அலுவலக உதவியாளர் போல ஒருவர் மறுநாள் வந்தார்.

வந்து, “பிரேமிதாப் பொண்ணுக்கு ஏதானும் வாங்கணுமானால் என்னை வாங்கிக் கொடுக்கச் சொன்னார்கள்.” என்றார்.

“ஒன்றும் வாங்க வேண்டாம். இந்தப் பெண் பிரேமிதாவைப் பற்றி அவள் மேல் அக்கறை உள்ள யாரிடமாவது பேச வேண்டும். அப்படி யாராவது இருந்தால் அவர்களை உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்.” என்றாள் கறார்க் குரலில் பவதி.

அடுத்த இரண்டு நாட்களுக்கு ஒன்றுமே நடக்கவில்லை. பிரேமிதா வழக்கம் போல சோகமாக முகத்தை வைத்துக்கொண்டு தன் மூலை இடத்தில் உட்கார்ந்து பொழுதைப் போக்கினாள்.

யாருடனும் பேசுவதில்லை விளையாடுவது இல்லை. கூடவே பாடத்தையும் கவனிப்பது இல்லை. வாரத் தேர்வுகள் அத்தனையிலும் கிட்டத்தட்ட சீரோ!

எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட முடியாமல் பவதிக்கு மனம் உறுத்தியது.

இந்தச் சிறுமிக்குத்தான் என்னதான் ஆயிற்று? வேறு என்ன ஆகக் கூடும்? ஒரேயடியாகச்  சாக்கலேட்டாக முழுங்கக் கூடாது., இன்றிலிருந்து ஐந்து பாருக்குப் பதில் நாலுதான் தரப்படும் என்று வீட்டில் சொல்லியிருப்பார்கள். இளவரசிக்கு உலகம் இடிந்து போயிற்று!

ஆனால் அது பற்றி அவளுக்கு என்ன வந்தது? அன்றன்றையப் பாடத்தை வரட்டு வரட்டென்று கத்திவிட்டு, ஊதியத்தை வாங்கிக்கொண்டு போய்க் கொண்டே இருப்பதை விட்டுவிட்டு இந்த முயற்சி எதற்கு? அந்தச் சிறுமி படித்தாலோ, படிக்காவிட்டாலோ அவளுக்கு என்ன வந்தது?

தனக்குத்தானே அறிவுறுத்திக்கொண்டு சலிப்புடன் எழுந்து நடந்தால், வகுப்பறையின் வாசலை எட்டும்போது வெளியே செல்ல வழியின்றி இரு நீளக் கால்கள் அவளது வழியை மறைத்து நின்றன.

சிறு திகைப்புடன் பார்த்தால், வகுப்பிலிருந்து கடைசியாகக் கிளம்பிய பிரேமிதாவிடம் அவன் ஏதோ சொல்லிக்கொண்டு இருந்தான்.

“ப்ரேம், நீ போய்க் காரில் உட்கார். உன் ஆசிரியையிடம் பேசிவிட்டு மாமா இதோ வந்துவிடுகிறேன்.” என்று அவன் சொல்ல, “சரி மாமா!” என்று பணிவுடன் கூறினாள் சிறுமி. கூடவே அவள் முகத்தில் பல நாட்களாகக் காணாத சிறு மலர்ச்சி!

அதாவது, வந்திருக்கிறவன் சிறுமியுடைய மாமன். கூடவே பிரியமான உறவினன்!

கிளம்புகிற நேரத்தில் வந்திருக்கிறானே என்று பவதிக்குச் சிறு சிணுக்கம்தான். ஆனால் அந்தச் சிறுமி விஷயம் சீர்ப்பட வேண்டும். அதற்கு அவளது வீட்டினரிடம்  சொல்லியே ஆக வேண்டும்.

“சற்று நில் பிரேமிதா!” என்று குனிந்து பிரேமிதாவின் பள்ளிப் பையில் இருந்த ஒரு நோட்புக்கை எடுத்துக்கொண்டு “இதை உன் மாமாவிடம் அனுப்புகிறேன்.” என்று கூறி அவளைப் போகச் சொன்னாள் பவதி.

“ம். போய்க் காரில் உட்கார், செல்லம். மாமா இதோ வந்து விடுகிறேன். ஆனால் காரை விட்டு நகராதே.” என்று கூறி அனுப்பினான் அந்த உறவினன்.

பரவாயில்லை. அந்த அளவு அக்கறை இருக்கிறதே!

அவளாக உள்ளே வந்து உட்காரச் சொல்லி அழைக்குமுன், அவனே வகுப்பு அறையின் உள்ளே சென்றபடி உள்ளே வருமாறு அவளுக்கு சைகை செய்தான்.

என்ன இது? அவளது வகுப்பறைக்குள் அவள் செல்லுமாறு இவன் என்ன உத்திரவிடுவது?

எனக்கு நேரமாகிவிட்டது நாளை வாருங்கள் என்று சொல்லலாம்தான். அவளைக் குற்றம் சொல்ல முடியாது. ஆனால் அந்தச் சிறுமி?

இரண்டு  மாதங்களாக முயன்று, போகட்டும் அதற்குக் கடவுள் விட்ட வழி என்று நம்பிக்கை இழந்து இருக்கும்போது, கிடைத்திருக்கும் ஏதோ ஒரு வெளிச்சம்!

அதற்குள் அவன் வகுப்பறையின் உள்ளே சென்று ஒரு மேஜை மேல் சாய்ந்தபடி நின்று அவளது வருகைக்காகக் காத்திருந்தான். கைக்கடிகாரத்தை ஒரு பார்வை வேறு.

வகுப்புக்குத் தாமதமாக வந்து போல உணர்ந்த பவதிக்குத் தன் மீதே கோபம் வந்தது. உள்ளே சென்று வேண்டுமென்றே அறை நடுவில் தன் நாற்காலியில் அமர்ந்து, “நீங்களும் உட்காருங்கள்.” என்றாள்.

“பரவாயில்லை சொல்லுங்கள். பிரேமிதா காத்துக் கொண்டிருப்பாள்.”

வார்த்தைகள் தெளிவாக விழுந்தபோதும் ஒரு வேகம். நேரம் பொன்னானது என்று தெரியவில்லையா என்று அவளிடம் சொல்லாமல் சொல்வது போல!

சிறு பெருமூச்சை உள்ளடக்கி எழுந்து, மாணவியின் நோட்டுப் புத்தகத்தை   அவனிடம் பிரித்துக் காட்டினாள் பவதி.

“நீங்களே பாருங்கள்.” என்று அவள் கூற, அவனும் நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தான்.

“பாருங்கள் இரண்டு மாதம் முன்பு வரை எப்படி இருக்கிறது? ஒழுங்காக எழுதி இருக்கிறாள். அப்புறமாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து,வகுப்பில் கற்றுக் கொடுப்பதை இப்போது பிரேமிதா எழுதுவதே இல்லை. இ.து மாதிரிக்காக நான் காட்டும் ஒரு நோட்டுப் புத்தகம் மட்டுமே. எல்லாப் பாடங்களிலும் இப்படியேதான்

இருக்கிறாள். வீட்டுப் பாடம் செய்வதே இல்லை. மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவது இல்லை. யாருடனும் பேசுவதே இல்லை. இன்னும் . ."

அவன் மிக லேசாகக் கையைச் சரித்து மணியைப் பார்க்கவும், பவதிக்கு ஆத்திரம் உண்டாயிற்று.

அவள் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தவள், வீட்டுக்குப் போய் அம்மா செய்து வைத்திருக்கும் சுவையான சிற்றுண்டி காஃபியை ரசித்து உண்ண வேண்டியவள், அவன் வீட்டுக் குழந்தைக்காக நின்று பேசிக் கொண்டிருக்கிறாள்! அவனானால், எப்போது முடிப்பாள் என்று மணியைப் பார்க்கிறானாக்கும்!

சினமுற்று, "சார், உங்களுக்கு நேரம் பொன்னானது என்று தெரிகிறது. நீங்கள் நிமிடத்துக்கு நூறாயிரம் சம்பாதிப்பவராக இருக்கலாம். ஆனால் அதை விட இந்தப் பெண் முக்கியம் என்றால் நான் சொன்னதைப் பற்றி யோசியுங்கள். பிரச்சினை தீர வழி தேடுங்கள். இல்லை என்றால் உங்கள் இஷ்டம்." என்று படபடத்துவிட்டு உள்ளே மீண்டும் வரும்போது மேஜைமேல் வைத்த கைப்பை சாப்பாட்டுப் பை முதலியவற்றை எடுக்கலானாள்.

ஆனால், "சாரி!" என்று அவளது வழியை மறைத்து நின்றான் அவன்.

"பாருங்கள் மிஸ் . . ." என்றவாறே பின் பண்ணியிருந்த அவளது பெயரைப் படித்து "பவதி, எனக்கு நேரம் முக்கியம்தான் ஆனால் இவளை விட அல்ல. சொல்லுங்கள், இன்னும் பிரேம் பற்றி நான் அறிய வேண்டியது வேறு ஏதாவது இருக்கிறதா?" என்று விசாரித்தான். சற்று நிதானமாக.

அவளும் ஒரு மூச்செடுத்துத் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டாள். "இது மட்டுமல்ல. அந்தந்த வாரப் பரீட்சைகளிலும், இப்படித்தான் பிரேமிதாவின் மதிப்பெண்கள் குறைந்துகொண்டே போகின்றன. எண்பதுகளில் வாங்கியவளின் மதிப்பெண் இப்போது ஒற்றை இலக்கத்துக்குப் போய்விட்டது. இப்படியே போனால் , அவளது படிப்பு என்ன ஆவது? நான் அவளுடைய வகுப்பின் ஆசிரியை. அவளது கல்வி என் பொறுப்பு. அது சீர்ப்பட வேண்டும். எனக்கு இதுதான் முக்கியமான விஷயம். என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள். இவளுடைய பெற்றோரிடம் இந்த விவரத்தைச் சொல்லி, என்ன வேண்டுமோ, அதை விரைவாகச் செய்யச் சொல்லுங்கள்." என்று தெளிவும் வேகமுமாகக் கூறி முடித்தாள்.

இதற்கு மேல் அவர்கள் பாடு! அவர்களாகட்டும். அவர்கள் வீட்டுப் பெண்ணாகட்டும். எப்படியோ போகட்டும்!

இதோ ஓயாமல் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கும் இவனும் தன் நூறாயிரம் ரூபாய் வருமானத்தைத் தேடிச் செல்லட்டும்.

இன்னமும் வழியிலேயே நின்றவனைச் சுற்றிக்கொண்டு அவள் செல்ல முயன்றால், “சற்று நில்லுங்கள், பவதி.” என்று அவன் அவளை மறுபடியும் தடுத்தான்.

அவள் கேள்வியாய் ஏறிட்டு நோக்கவும் “நீங்கள் சொன்னது . . .ஆனால் அதுதான் பெரிய பிரச்சினை!” என்றான் அவன் எங்கோ பார்த்தபடி.

# அத்தியாயம் -2

இது என்ன பதில்? ஒரு மாணவிக்குப் பிரச்சினை என்றால் வீட்டில் உள்ளவர்களிடம் சொல்லித்தானே சீர் செய்ய வேண்டும்? அதை விட்டு, அதுதான் பிரச்சினை என்று இவன் எதைச் சொல்கிறான்?

“நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.” என்றாள் பவதி சுருக்கமாக.

மெய்யாகவுமே அவளுக்குச் சற்றும் புரியவில்லைதான். ஒருவேளை பிரேமிதாவுடைய பெற்றோர் இந்த நாட்டிலேயே இல்லை என்றால் கூட, இன்றைய விஞ்ஞான யுகத்தில் ஒரு வீடியோ கால் போட்டு அவர்களிடம் கூறலாமே? அவர்களும் மகளோடு பேசலாம். அது கூட முடியாது என்று இந்தக் காலத்தில் எப்படிக் கூற முடியும்?

“அதாவது . . .அது என்னவென்று  . . .” என்று மறுபடியும் மணியைப் பார்த்துவிட்டு மீண்டும் தோளைக் குலுக்கினான் அவன். இப்போது தோல்வியை ஒத்துக் கொள்கிற விதமாக சிறு சோர்வுடன்.

அவளது பார்வையில் இருந்த கேள்வி மாறவில்லை. அதற்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லையே!

ஒரு பெருமூச்சுடன் தோளைக் குலுக்கினான் அவன். “எதையுமே சொன்னால்தான் புரியும் அல்லவா? நீங்கள் சொன்னீர்களே, “பெற்றோரிடம் சொல்லி” என்று  அதுதான் இப்போது பிரச்சினையே.” என்றவன் மீண்டும் பெரியதாக ஒரு மூச்சை இழுத்து விட்டான்.

தொடர்ந்து, அவளை நேராகப் பார்க்காமலே பேசினான். “இப்போது கூட என் அவசரத்தின் காரணமும் அதுவே. பிரேமிதாவுடைய தந்தையைத்தான் விரைந்து சென்று நான் சந்திக்க வேண்டியிருந்தது. ஏனென்றால் அவரும் என் சகோதரியும் . .பிரேமுடைய பெற்றோர் நிரந்தரமாகப் பிரிந்து விடப் போகிறார்கள். விவாகரத்து!” என்றான் வேதனையான ஒரு தலையசைப்புடன்.

அதிர்ந்து நிமிர்ந்தாள் பவதி. அவள் அதை எதிர்பார்க்கவில்லையே! எட்டு வயதுச் சிறுமி! அவளால் எப்படித் தாங்க முடியும்?

அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

“பெற்றோரின் பிரிவு . . பிரிவது நிச்சயமாகிவிட்டது. அதுதான் ப்ரேமிதாவை இப்படிப் பாதித்தும் இருக்கிறது. ஒரே குழந்தை என்பதால் அவள் இருவருக்குமே செல்லம்! அங்கே வீடே  . . குறைந்த

பட்சமாக என் சகோதரி இடி விழுந்த மாதிரி இருக்கிறாள். அப்படி . .அந்த அளவு அதிர்ச்சி. அது பற்றி இன்று அத்தானிடம் பேச வருவதாகச் சொன்னேன். ஆனால் . . பேசிப் பயன் இருக்கும் என்று நம்பிக்கை சிறிதும் இல்லை. எதையும் அவர் பேச முன்வருவார் என்றும் தோன்றவில்லை. பிரிந்துவிட அவர் முடிவு செய்துவிட்டார். எனவே அவருடன் பேச முயற்சிப்பது, எடுத்துச் சொல்வது எல்லாம் வீணே. தோல்வி என்று தெரிந்த பிறகும், எதற்காக அந்தப் பயனற்ற முயற்சி செய்வது? அதை விட மிஸ் பவதி, நீங்களே ஒரு யோசனை சொல்லுங்களேன். இப்போது நாங்கள் மித்தி . . பிரேமிதாவுக்காக என்ன செய்யலாம்? வேறு என்ன செய்யக் கூடும்?" என்று அவள் பக்கம் திரும்பிக் கேட்டான் அவன்.

இப்போது பவதி ரொம்பவே திகைத்துப் போனாள்.

இது பற்றி அவளுக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாமல் அவள் என்ன யோசனை சொல்ல முடியும்?

"இஇது உங்கள் குடும்ப விஷயம். இதில் . .நாநான் என்ன . . சொல்ல முடியும்?" என்று அவள் தடுமாற்றத்துடன் கூறும்போதே அவன் குறுக்கிட்டுப் பேசினான். "அப்படியில்லை மிஸ் பவதி. நீங்கள் ஆசிரியை. சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் எடுக்கிறீர்கள். அவர்களுடனேயே பழகுகிறீர்கள். அவர்களது மனநிலை பற்றி உங்களுக்கு இன்னும் அதிகம் தெரியுமல்லவா? எங்களுக்கு . .எனக்கும் மதுவுக்கும் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரி இருக்கிறது . .. உங்களுக்கு நல்லதென்று தோன்றுவதைக் கூறுங்கள், ப்ளீஸ்! " என்று வேண்டிக் கேட்டான் அவன்.

"கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்ட மாதிரி"! உண்மையிலேயே அது போன்ற நிலையில் அவன் இருப்பது பவதிக்குப் புரிந்தது.

மற்றபடி அவனைப் பார்த்தால் மூன்றாம் வகுப்புக்குப் பாடம் எடுக்கும் ஆசிரியையிடம் ஆலோசனை கேட்கக் கூடியவனாகத் தெரியவில்லை. நிச்சயமாக இல்லை!

ஆனால், உன் வீட்டுப் பிரச்சினையை நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உதறிவிட்டுப் போய்விடவும் அவளால் முடியவில்லை. என்ன செய்வது?

சைக்காலஜி படிக்கும் வாசந்தி இதற்கு என்ன விடை அளிக்கக் கூடும்?

யோசித்துவிட்டு, "சாரி சார். வவந்து . . பிரேமிதா வீட்டில் இப்படி நிலைமை என்று எனக்குத் தெரியாது . வீட்டில் நடப்பது அவளை ரொம்பப் பாதித்து விட்டது என்று தோன்றுகிறது. நீங்கள் . ..

யாராவது ஒரு நல்ல சிறுவர் சைக்கிரியாட்டிஸ்டிடம் அவளைக் கூட்டிப் போகலாம். அது . .அதுதான் ரொம்ப நல்லது. இந்த நிலைமையில் என்ன செய்யலாம் என்று அதற்காகப் பயின்ற அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அத்தோடு, தாய் தந்தை யாரானாலும் பிரேமிதா யாரோடு இருக்கப் போகிறாளோ, அவர்களை அவளிடம் அதிக அன்பு காட்டச் சொல்லுங்கள். கூடவே பிரிகிறவரைத் தவறாகப் பேச வேண்டாம். அது வலியை அதிகப்படுத்திவிடக் கூடும். ஏதாவது விளையாட்டு அவளோடு. . . நிநிறைய நேரம் செலவழியுங்கள்." என்று அவளுக்குத் தோன்றியதைக் கூறினாள் பவதி.

ஆனால் அதுவே அவனுக்குப் பெரிதாகத் தோன்றியது போலும். அவளுக்குப் பெரிதாக நன்றி தெரிவித்தான். "ரொம்பத் தாங்க்ஸ் மிஸ் பவதி. முடிந்த அளவு உங்கள் யோசனையைப் பின்பற்றுகிறேன். ஆனால், மி . .பிரேமிதாவுடைய அம்மா, அப்பா விஷயம்தான் எப்படி சாத்தியப்படும் என்று தெரியவில்லை. ஏனெனில் அத்தான் ஒதுங்கிக் கொள்ள மட்டுமே முயற்சிக்கிறார். அக்கா . . அவளது கண்ணீரோ வற்றும் போலவே தெரியவில்லை. ஆனால் சரி. என்னால் என்ன முடிகிறதோ பார்க்கிறேன். வருகிறேன். " என்று கிளம்பியவன் நின்று, "பாருங்கள், என் மொபைல் எண்ணைப் பதிவு பண்ணிக் கொள்கிறீர்களா? இது போலத் தேவை நேர்ந்தால் நேரே என்னையே கூப்பிடுங்கள்." என்று அவனது மொபைல் எண்ணைக் கொடுத்தான்.

அவளுடையது தானாக அவன் மொபைலில் பதிவாகிவிடுமே என்று தோன்றியபோதும், பிரேமிதாவுக்குத் தேவை என்றால் பயன்படட்டுமே!

அவள் தன் பொருட்களை மீண்டும் எடுக்கும்போதே, அவன் மறுபடியும் நன்றி உரைத்துவிட்டு வேகநடையுடன் கார் நிற்கும் இடத்துக்கே சென்றுவிட்டான்.

பவதி வெளியே சென்று பார்த்தபோதோ, அரை வட்டமாக அமைக்கப் பட்டிருந்த பாதை தாண்டிக் கார் வெளியேயே சென்றுவிட்டிருந்தது.

உயர் ரகக் கார்தான். சத்தமின்றி வேகமாக அது செல்லும்போது பாதையில் உல்லாசமாக வழுக்கிக்கொண்டு செல்வது போலத் தோன்றிற்று. ஆனால் உள்ளே இருப்பவர்களின் மன நிலைக்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு!

யோசனையோடு நடக்கும்போது அழைக்கும்குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

உடன் பணி புரிகிறவர்கள்தான். ஒருவருக்கொருவர் நல்லிணக்கம் இருந்தது. கிடைக்கும் தருணங்களில் கலகலவென்று

சந்தோஷமாகப் பேசிக் கொள்வார்கள்.

புன்னகையோடு நின்றால் அருகில் வந்ததும், “யார் பவதி அது? படு ஸ்மார்ட்டாக இருக்கிறாரே! உனக்கு உறவா? தெரிந்தவரா? மீண்டும் வருவாரா?” என்று நாலாம் வகுப்பு ஆசிரியை பாலா ஆவலாக வினவினாள்.

“உற . . .ஐயோ, அதெல்லாம் இல்லைப்பா! என் வகுப்பில் ஒரு பெண் படிப்பில் மோசமாகிக் கொண்டிருக்கிறாள்., கடிதம் அனுப்பினேன் என்று அன்று சொன்னேனே, அவளுடைய உறவினர், அவளைப் பற்றிப் பேச வந்தார். அவளது படிப்பைப் பற்றிப் பேசி அனுப்பினேன்.” என்றாள் பவதி.

“ப்பூ இவ்வளவுதானா?” என்றாள் இன்னொரு வகுப்பு ஆசிரியை. “ஆனாலும் நீ லக்கிப்பா. அன்றைக்கு என் வகுப்புப் பையனை பற்றிப் பேச அவனுடைய அப்பா வந்தாரே, தொந்தியும் தொப்பையுமாக! பேசக் கூட முடியாமல் மூச்சு இரைக்கிறது. அப்போதும் எதையோ கொறித்துக் கொண்டேதான் பேசினார்!

“என் மாணவிக்கு அப்பா என்று ஒருவர் வந்தார். காற்று பலமாக அடித்தால் தூக்கிக்கொண்டு போய்விடும்!” என்று இன்னொருத்தி அபிநயத்தோடு கூற எல்லோரும் சிரித்தபடியே வீட்டுக்குக் கிளம்பினர்.

செல்லும்போதே பிரேமிதாவுடைய மாமாவின் தோற்றம் பவதியின் மனதில் வந்து போயிற்று.

ஆள் பரவாயில்லைதான்! சக ஆசிரியைகள் சொன்ன மாதிரி, நல்ல உருவம்தான். நன்றாக உடல்பயிற்சி செய்வார் போல! ஆனால் சகோதரி மகளுக்காகவும் ஏதாவது செய்தால் நன்றாக இருக்கும்! செய்வாரா?

அன்று சனிக்கிழமை. முதல் சனிக்கிழமை என்பதால் பள்ளி இருந்தது.

பேசாமல் சனிஞாயிறு இரண்டு நாட்களுமே விடுமுறை விட்டால் என்னவாம்? அதிலும் ஒரு சனிக்கிழமை விடுமுறை விட்டு, அடுத்த சனியன்று வேலை நாளாக்கி . . படுக்கையை விட்டு எழவே பவதிக்கு மனம்வரவில்லை.

ஆனால் பள்ளிக்குப் போய்த்தானே ஆக வேண்டும்?

சிரமப்பட்டுச் சோம்பலை உதறும் முயற்சியாக இப்படியும் அப்படியுமாகப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள் அவள்.

பல் துலக்கிவிட்டு வந்த தங்கை வாசந்திக்குத் தமக்கையைப் பார்த்துச் சிரிப்பு வந்தது.

“அம்மா, எனக்கு இன்று விடுமுறை நாள். நான் நன்றாகத் தூங்கப் போகிறேன். ஹைய்யா, ஜாலி! ஜாலி! இன்றைக்கு நான் நன்றாகத் தூங்கப் போகிறேனே! ஜாலியாக டிவி பார்ப்பேன். தூ . .ங்குவேன்!” என்று பெரியவளைச் சுற்றிச் சுற்றி வந்து உற்சாகத்துடன் ராகம் போட்டுப் பாடிப் பெரியவளைச் சீண்டத் தொடங்கினாள்.

“ஏய் சும்மாப் போடீ!” என்று அதட்டியும் வாசந்தி விடாமல் தொடரவும், “பாருங்கம்மா! எனக்கே எரிச்சலாக இருக்கிறது. இவள் வேறு கடுப்பேற்றுகிறாள்!” என்று தாயாரைத் துணைக்கு அழைத்தாள் பவதி. “இவளை வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கச் சொல்லுங்க!”

“என்ன பவி, அக்காவைத் தொல்லை பண்ணாமல் சும்மா இரு. பாவம். அவள் மட்டும் இன்று வேலைக்குக் கிளம்ப வேண்டும். “ என்று சமையல் அறையில் இருந்து பத்மாசனி மூத்த மகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தாள்.

“அம்ம்ம்மா, ஓர வஞ்சம் செய்யாதீர்கள். போன வாரம் எனக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்தபோது என்னை அக்கா கடுப்பேற்றவில்லையா? அப்போது நீங்கள் அதைக் கண்டுகொள்ளவே இல்லையே! என்னவோ இவள் மட்டும்தான் உங்கள் மகள் மாதிரி இப்போது மட்டும் என்னவாம்?” என்று தாயிடம் பாய்ந்தாள் சின்னவள்.

“அது . . . “ என்று சற்று யோசித்துவிட்டு, “ஏய், போன வாரம் ஸ்பெஷல் சாப்பாடு வேண்டும் என்றாயே என்று உனக்குத்தானேடி ஃப்ரைடு ரைஸ் செய்து கொண்டிருந்தேன். மாதுளை முத்து வேறு உதிர்த்து வைக்கச் சொன்னாயே. அதையும் செய்தே . . .” என்று பத்மாசனி சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசந்தி இடை மறித்தாள்.

“ஐயோ! போதும் போதும். பிறகு இவளும் அதே போல வேண்டும் என்று கேட்பாள். அப்புறம் இன்றைக்கு என் சப்பாத்திக் குருமாவை விட்டு விடுவீர்கள். போன வாரம் எப்போதோ முடிந்து போன கடந்த காலம். அதைப் பற்றி இப்போது பேசக் கூடாது! கப்சிப்!” என்று மிரட்டலாக மொழிந்தாள் சைக்காலஜி படிக்கிற அவள்.

பவதிக்குச் சிரிப்பு வந்தது. “ஆமாமாம். உனக்காகப் பத்து விதம் செய்தால் அது சரி. எனக்காக ஒரு வார்த்தை பரிவாகப் பேசினாலே ஓர வஞ்சனையாக்கும்! நியாய தேவதைதான்! ஜாக்கிரதைமா. இல்லாவிட்டால் யாராவது உன் கண்ணைக் கட்டிக் கையில் தராசைக் கொடுத்து நீதி மன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தி வைத்து விடப்

போகிறார்கள்!" என்று கிளுக்கி நகைத்தபடி எழுந்து காலை வேலைகளைப் பார்க்கப் போனாள் அவள்.

சும்மாவே சோம்பேறித்தனம். கூடவே தங்கையோடு வம்படிப்பு! எல்லாமாகப் பவதி பள்ளிக்குச் செல்லத் தயாராகவே சற்று அதிக நேரம் ஆகிவிட்டது.

அன்றைக்கு அரைநாள்தான் பள்ளி நேரம். மதியமே வீட்டுக்கு வந்து நன்றாக ஒரு வெட்டு வெட்டிக் கொள்ளலாம்!

இப்படி எண்ணி அரை குறையாக உண்டுவிட்டு வந்ததாலோ, மதியச் சாப்பாட்டு நினைவிலோ  பவதிக்குப் பதினோரு மணிக்கே பசியெடுக்கத் தொடங்கிவிட்டது.

எப்போதடா வகுப்பு முடியும் என்று பொழுதைத் தள்ள வேண்டியதாக இருந்தது.              கையில் எடுத்து வந்து உண்பதை விட, வீட்டுக்குப் போய் முழுதாகச் சாப்பிடலாம் என்பதால் சனிக்கிழமைகளில் சற்று அதிகப் பசி எடுப்பது போல எப்போதுமே அவளுக்குத் தோன்றும். அன்றோ பசியில் வயிறு சுருட்டி எடுத்தது.

ஒரு வழியாக வகுப்பு முடிந்து மணியடிக்கவும் பிள்ளைகளை விட வேகமாகக் கைப்பை, மற்ற போருட்களை அவள் எடுக்கும்போதே அட்டெண்டர் வந்து ஒரு குறிப்புப் புத்தகத்தை நீட்டினான்.

பார்த்தால் பிரின்சி எல்லா ஆசிரியர்களையும் அவசரமாக அழைத்திருந்தார்!              "ஐயோ" என்று எண்ணியதை வெளியே காட்டாமல் அடக்கி, வழக்கமாகக் கூட்டங்கள் நடக்கும் ஹாலுக்கு பவதி வேகமாகச் சென்றாள். அவளைப் போலவே மற்ற ஆசிரியர்களும் பொறுமையை இழுத்துப் பிடித்தவண்ணம் வந்து காத்திருந்தனர்.

பிரின்சியும் வேக நடையுடன்தான் வந்தார்.

"சரி. சரி சார்! அப்படியே செய்கிறோம்." என்று கையில் இருந்த மொபைலில் பேச்சை முடித்துவிட்டு எல்லாரையும் பார்த்து முதலில் ஒரு "சாரி!" சொன்னார்.

"எல்லோருக்கும் பயங்கரப் பசி வேளை. அதிலும் சனிக்கிழமை! எப்போதடா வீட்டுக்குப் போய் நன் . .றாகச் சாப்பிடலாம் என்று இருக்கும். அதனால் மிகவும் சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். அடுத்த மாதம் முதல் சனிக் கிழமையன்று நம் பள்ளியில் ஸ்போர்ட்ஸ் டே கொண்டாட வேண்டும் என்று டைரக்டர்கள் முடிவு பண்ணியிருக்கிறார்களாம். அவரவருக்கு என்னென்ன புது ஐடியாக்கள் வருகிறதோ . . " என்று பிரின்சி சொல்லும்போதே, "ஐயோ இப்போதா?" என்று தணிந்த குரலில் கோரஸ் கேட்டது.

ஆனால் எல்லாருமா?!

சிறு வியப்பும் கவலையுமாக எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே, “இல்லையில்லை, இப்போதில்லை.” என்று பிரின்சியின் மறுப்புக் குரல் கேட்டது. “விளையாட்டுகளோடு விழாவும் சிறப்பாக நடத்த வேண்டும். இரண்டு நாட்கள் நிதானமாக யோசித்துத் திங்களன்று வந்து ஐடியாக்களைச் சொல்லுங்கள். லீவு நாளையிலும் வேலையா என்று நினைக்காமல் நிஜமாகவே யோசியுங்கள். அவ்வளவுதான். எல்லோரும் இப்போது போகலாம்!” என்று பிரின்சி அனுப்பவே எல்லோரும் ஓட்டமும் நடையுமாக அவரவர் பொருட்களை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள்.

நழுவிய காலணியின் வெல்க்ரோவை இழுத்து மாட்டிக்கொண்டு கிளம்பிய பவதியும் கண்ணில் பட்டவர்களுக்கு பை சொல்லியபடி அவசரமாகக் கிளம்பி வந்தாள்.

அந்தப் பள்ளியில் அகலமாக அரை வட்ட வடிவத்தில் கார்ப் பாதை ஒன்றை அமைத்திருந்தார்கள். கார்கள் அந்த அரை வட்டத்தின் ஒரு புறமாக உள்ளே வந்து பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு மறு புறமாக வெளியே செல்லும். அந்த அரை வட்டப் பாதையைத் தாண்டி மதில் சுவரில் இருந்த சிறு கதவின் வழியே சென்றால் பஸ் நிறுத்தம் பக்கமாக இருக்கும்.

பல தினுசுக் காய்கறிகளைப் போட்டுக் காரக் குழம்பும் மொறுமொறுவென்று சூப்பரான சேப்பங்கிழங்கு வறுவலும் அம்மாவின் சனிக்கிழமை ஸ்பெஷல்!

பஸ் சீக்கிரமாக வந்துவிட்டால் வீட்டுக்குப் போய் ஒரு பிடி பிடித்துவிடலாம்!

நாக்கில் நீர் ஊற வேகமாக நடந்தால், கார்ப்பாதையின் ஓர் ஓரமாகப் பள்ளிச் சீருடையில் தோளில் புத்தகப் பையோடு சோர்வுடன் நிற்கும் ஒரு சிறு உருவம் . . . அது பிரேமிதா!

கடவுளே! தனியாக நிற்கிறாளே. கூட்டிப் போக ஆள் யாரும் வரவில்லையா?

சும்மா என்றால் செக்யூரிடி பார்த்துக் கொள்ளட்டும் என்று பவதி போய் விட்டிருப்பாள். அது அவர்களது பொறுப்பும்தான்.

ஆனால் சிறுமியின் வீடு இருக்கும் நிலை தெரிந்ததால், பவதியால் அது முடியவில்லை.

காரோடும் பாதையும், விளையாட்டு மைதானமுமாக அவ்வளவு பெரிய இடத்தில் தொய்ந்த தோள்களுடன் தன்னந்தனியாக நின்ற அந்தக் குழந்தைப் பெண்ணின் தோற்றம் அவளை அப்படியே உருக்கிவிட்டது!

நின்றால், இந்த நேரம் வருகிற பஸ் போய்விடும். கட்டாயமாக வீட்டுக்குச் செல்லத் தாமதம் ஆகக் கூடும். சாப்பிடவும்தான். ஆனால், இவளை இப்படியே விட்டுவிட்டுப் போனால் அவளால் எதையும் உண்ணவே முடியாதே!

எனவே, ப்ரேமிதாவை அணுகி, “என்னம்மா, இன்னும் கார் வரவில்லையா?” என்று கனிவாக வினவினாள்.

கார்கள் பள்ளிக்குள் வரும் வழியையே பார்த்தபடி சோர்வுடன் நின்ற சிறுமியிடம் வினாடிக்குள் ஒரு மாற்றம் தெரிந்தது.

மின்னல் வேகத்தில் திரும்பி, “மிஸ் . . .?” என்றாள் ஆர்வத்துடன்.

“ம். நான்தான். உன் விஷயம் என்ன ஆயிற்று? கார் வரவில்லையா?” என்று மீண்டும் பவதி வினவினாள்.

முகம் வாட, “ஆமாம் மிஸ். டிரைவர் அங்கிள் மறந்து விட்டாரோ என்னமோ தெரியலை. புது டிரைவரா? வழி தெரியாமல் போயிட்டுதோ? இன்னும் காணலை.” என்று கவலையுடன் கூறினாள் பிரேமிதா.

“ஓகோ, புது காரோட்டியா? வழிதான் தவறியிருக்கும். ஆனால் யாரிடமாவது விசாரித்துச் சீக்கிரமே வந்து விடுவார். கவலைப்படாதே.” என்றாள் பவதி ஆறுதலாக.

“அதில்லை மிஸ், எல்லாரும் போய்விட்டாங்க. நான் மட்டும் தனியா நின்றேனா? அதுதான் பயமாகிப் போச்சுது. நல்லவேளை நீங்க வந்தீங்க!”

அவளைப் பார்த்ததுமே துணை வந்துவிட்டதாக எண்ணும் இந்தச் சிறுமியைத் தனியே விட்டுவிட்டு எப்படிப் போவது?

பிரேமிதாவின் ஸ்கூல் டைரியை வாங்கிப் பார்த்து, அவளது வீட்டுக்குப் பவதி ஃபோன் செய்து பார்த்தாள். வீட்டில் எந்த எண்ணும் எடுக்கவில்லை. தாயார், தந்தை இருவரின் மொபைலும் ஸ்விட்ச் ஆஃப் என்றே வந்தது.

தாய்மாமன் என்று ஒருவன் வந்தானே, ஜெகன்! அவன் கொடுத்த எண்ணுக்கு முயற்சி செய்தால் அவனும் அப்படியே!

இதற்கு அந்த ஜெகன் அவனது எண்ணைத் தராமலே இருந்திருக்கலாம்!

செய்வது அறியாமல் பவதி நிற்கையில், பிரின்சியின் கார் வந்தது.

பவதியைப் பார்த்துவிட்டுக் காரை நிறுத்தி என்னவென்று விசாரித்தாள்.

விஷயம் அறிந்ததும், “அடடா! உனக்குத் தாமதம் ஆகிறது போல இருக்கிறதே! ஆனால் அவள் சின்னப் பெண். பாவம். சிரமத்தைப் பாராமல் சற்றுத் துணை இருந்து அவளை அனுப்பி வைத்துவிட்டுப் போம்மா. என்ன பவதி? செய்ய முடியும்தானே?” என்று கேட்டவள், பவதி பதில் கூறுமுன்பாகவே, “நன்றிம்மா.” என்று காரைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டார்.

பொறுப்பை அவரிடம் தள்ளி விடுவேனோ என்ற பயம் போல! ஆனால், “மிஸ் மிஸ்” என்று ஒட்டிக்கொண்டு நிற்கும் இந்தச் சிறுமியை அப்படி அடுத்தவர் தலையில் கட்டிவிட்டுப் பவதியால் எப்படிச் செல்ல முடியும்?

தாயார், தந்தை இருவரோடு அந்தத் தாய்மாமனின் மொபைலும் எடுக்காதபோது, வெறுமனே துணை நிற்பது தவிர, அவளும்தான் என்ன செய்ய இயலும்?

பன்னிரெண்டரைக்கு இங்கே வந்தது. மணி ஒன்றரையைத் தாண்டிக் கொண்டிருந்தது. பயங்கரமான பசியை சமாளித்தபடி, மீண்டும் மீண்டும் சிறுமியின் வீட்டு எண்களைப் பலனற்று முயற்சித்துப் பார்த்தாள்.

கடவுளே! யாராவது எப்போது வருவார்கள், இப்படி ஒரு பெண் இருப்பதையே மறந்துவிட்டார்களா?

கூடவே பிரேமிதாவின் கவனத்தை மாற்றும் முயற்சியாக ஏதோ பேச்சும் கொடுக்க வேண்டியிருந்தது.

ஆனால் அவளுக்கு மட்டுமா பசிக்கும்?

பிரேமிதாவின் கை வயிற்றைத் தடவுவதைப் பவதிக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. பாவம்.சின்னப் பெண். எப்படிப் பொறுத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்! பசிக்கிறது என்று சொல்லக் கூட வாய்வரவில்லையே, பாவம்!

வீட்டில் அம்மா சுவையாகச் செய்து வைத்திருக்கும் உணவின் நினைவை முயன்று ஒதுக்கினாள்.

நுழை வாயிலில் அமர்ந்திருக்கும் செக்யூரிடியிடம் சொல்லிவிட்டு எதிரே உள்ள ஈட்டரியில் சான்ட்விச் வாங்கிவந்து பிரேமிதாவுக்கும் கொடுத்துத் தானும் உண்டாள்.

மணி இரண்டைத் தாண்டியிருந்தது.

இதற்கு மேலும் யாரேனும் வருவார்களோ என்று இங்கேயே நின்று கொண்டிருக்க முடியாது.

“என்னோடு வருகிறாயா?” என்று சிறுமியிடம் கேட்டாள்.

என்னவெல்லாம் நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தாளோ,

உடனேயே பிரேமிதா பெரிதாகத் தலையை உருட்டிவிட்டாள்.

அதற்கு மேல் பவதி தாமதிக்கவில்லை.

பிரின்சிக்கும், அந்த ஜெகனின் எண்ணுக்கும் மாணவியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் தன் எண்ணத்தைத் தெரிவித்து, தன் வீட்டு முகவரியையும் மெஸேஜ் பண்ணினாள்.

செக்யூரிடியிடமும் சொல்லிவிட்டுச் சிறுமியை அழைத்துக்கொண்டு பஸ் நிறுத்தத்தை அடைந்தாள்.

நல்லவேளை! இப்போது ஏசி பஸ் வரும். பெரும்பாலும் உட்காரவும் இடம் கிடைக்கும். தொலைவில் பஸ்சும் வந்து கொண்டிருந்தது.

அப்பாடி என்று சற்று நிம்மதியாக மூச்சுவிடும்போதே பவதியின் மொபைல் இசைக்கத் தொடங்கியது.

அவசரமாக எடுத்து ஆன் செய்தால் அந்த ஜெகன்!

அங்கே பஸ் வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இவன் என்ன சொல்லப் போகிறான்? மருமகளுக்காகக் கார் அனுப்பாத காரணத்தை விலாவாரியாக விளக்கத் தொடங்கினால் பஸ் போய்விடுமே!

ஆனால் ஜெகனும் நேரத்தின் அருமை தெரிந்தவன். எனவே, "சாரி. முக்கியமான பிரச்சினையில் கார் அனுப்ப மறந்துவிட்டது. உடனே அனுப்புகிறேன். சிரமத்தைப் பாராமல் அதுவரை மித்தியைப் பார்த்துக்கொள்ள முடியுமா? இன்னும் கொஞ்ச நேரம் ப்ளீஸ் . . .?" என்று சுருக்கமாகவே கேட்டான்.

சரிதான். இனிமேல் , திரும்பவும் மறந்துவிடாமல் அவன் காரை அனுப்பி, அது இங்கே வந்து சேரவே ஒரு மணி நேரம் ஆகும். அதன் பிறகு அவள் எப்போது வீட்டுக்குப் போவது?

சட்டென யோசித்து "நாங்கள் பஸ்சில ஏறிவிட்டோம். என் வீட்டு முகவரி உங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவிட்டேன். காரை அங்கே அனுப்பி அவளைக் கூப்பிட்டுக் கொள்ளுங்கள்." என்றுவிட்டு அவனது பதிலுக்குக் காத்திராமலே செல்லை அணைத்தாள்.

சரியாக பஸ்சும் வந்து நிற்கவே பிரேமிதாவைக் கூட்டிக்கொண்டு பஸ்சிலும் ஏறி விட்டாள்.

# அத்தியாயம் -3

நல்லவேளையாகப் பிரேமிதாவும் “நானா? பஸ்சில் ஏறுவதா” என்று எந்த பிகுவும் பண்ணவில்லை. மறுப்பேதும் காட்டாமல், பவதியுடனேயே ஒட்டிக்கொண்டு சென்று, அவள் அருகிலேயே உட்கார்ந்தும் கொண்டாள்.

பிரேமிதாவுக்கும் சேர்த்து டிக்கட் வாங்கிய பிறகே அவள் வசதியாக அமர்ந்திருக்கிறாளா என்று பவதி கவனித்தாள். பாதாம்கொட்டை விழிகளைச் சுழற்றி சின்னவள் சுற்றுமுற்றும் ஆர்வமாகப் பார்ப்பதைக் காண, அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. நிம்மதியாகவும்.

ஆனால் அருகருகே அமர்ந்திருக்கும்போது, பிரேமிதா மெலிந்திருப்பது தெளிவாகத் தெரிந்து, அவள் மனதில் இரக்கத்தைத் தூண்டியது. சிறுமியுடைய அன்னை தந்தை மேல் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியது.

என்ன பெற்றோர் இவர்கள்? அவர்கள் பெற்ற பெண் பிரேமிதா. எட்டு வயதுச் சிறுமி! அந்தக் குழந்தை மனம் துன்புறுவது அவர்களுக்குத் தெரியவில்லையா?

அவன் என்ன சொன்னான்? மித்தி . .மித்தி மித்தாய் என்று கொஞ்சினால் மட்டும் போதுமா? மகளின் மனநலம் பேண வேண்டாமா?

பிரிவது அவர்களுக்கு மட்டும்தான் பிரச்சினையா? இந்தப் பிஞ்சு மனம் என்ன பாடு படும்?

அவரவர் பிரச்சினையிலேயே உழலும் அந்தப் பெற்றோரில் ஒருவராவது இந்தச் சிறுமியின் உணவைப் பற்றிக் கவனித்தார்களா? அந்த நினைப்பே இல்லை போலல்லவா தெரிகிறது? குறைந்த பட்சமாக இன்று இவளுக்கு நன்கு உணவளிக்க வேண்டும்! வீட்டுக்குப் போனதும் அம்மாவிடம் சொன்னால் அவர்கள் கவனித்துக் கொள்வார்கள்.

சுவையாகச் சமைப்பது மட்டுமல்லாமல் சாப்பிடுகிறவர்களின் வயிற்றைத் தேவை அறிந்து நிரப்புவதும் அவளுடைய தாயாருக்குக் கை வந்த கலை! அதிலும் சின்னப் பிள்ளைகள் என்றால் கேட்கவே வேண்டாம்!

“பையைக் கொடும்மா. நான் வைத்துக் கொள்கிறேன்.” என்று சொல்லி வாங்கி வைத்துக்கொண்டு சின்னவள் வசதியாக உட்கார வகை செய்து கொடுத்தாள் பவதி.

தன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று பிரேமிதாவுக்குச் சொன்னது போலவே, இப்படி ஒரு சிறுமியைத் தன்னோடு  அழைத்து வருவது பற்றி வீட்டுக்கும் தகவல் அனுப்பினாள்.

வீட்டில் தங்கை வாசலிலேயே நின்று வரவேற்றாள். காலையில் கடுப்பேற்றியதற்குப் பிராயசித்தம்!

பிரேமிதாவைப் பார்த்ததும், “அடேடே! இவங்கதான் இன்றைக்கு நம் வீட்டு விருந்தாளியா? வாங்க மேடம், வாங்க!” என்று சிறுமியை வரவேற்றாள்.

“ஐயே, சின்னவங்களை எல்லாம் “மேடம் வாங்க” என்று சொல்லக் கூடாது. மிஸ், இவங்கதான் உங்க தங்கச்சியா? அப்போ எனக்கு  . .அக்காவா? அக்கா என்று கூப்பிடவா?” என்று பிரேமிதா ஆவலாகக் கேட்டது எல்லோருக்குமே பிடித்துப் போயிற்று.

“ம். தாராளமாக. எனக்கும் தங்கையே இல்லையா, நீ கிடைத்தது சந்தோ . . ஷம்!” என்றாள் வாசந்தி குதூகலக் குரலில்.

“எனக்கும் வேறே அக்காவே இல்லை. நீங்க கிடைத்தது ஹேப்பி!” என்று பிரேமிதா குதித்தாள்.

“அப்போது நான்?” என்று கேட்டபடி பத்மாசனி உணவு மேஜையில் சாப்பாடு எடுத்து வைத்தாள்.

“ஆஹா . . . இவ்வளவு வயதானவர்களை என்ன சொல்வது? . .. பாட்டி என்றால் என் அம்மாவுக்குப் பிடிக்காது. ரொம்பக் கோபம் வரும். அதனால் . . .சரி. ஆன்ட்டி ஆக்கி விடலாம். பவதி உனக்கு மிஸ். நான் அக்கா. எங்கள் அம்மா ஆன்ட்டி. அப்பா அங்கிள். எல்லாம் சரிதானா? குழப்பம் இல்லையே?”

“சரி சரி மிஸ்சும் சின்னத் தங்கையும் சாப்பிட வாருங்கள். என்னம்மா சின்னவளே, நீ காரம் சாப்பிடுவாயா? அல்லது முட்டை சாதம் பிரட்டித் தரட்டுமா? முதலில் இதில் ஒரு பிடி சாப்பிட்டுப் பார்.” என்று ஒரு தட்டில் கொஞ்சமாகக் கலந்து பத்மாசனி அள்ளிக் கொடுத்தது பிரேமிதாவுக்குப் பிடித்துப் போயிற்று.

“செம்ம டேஸ்ட்! நான் இதே சாப்பிடுகிறேன் ஆன்ட்டி.” என்று தட்டின் முன் உட்கார்ந்துவிட்டாள்.

“ஏய் குட்டித் தங்கச்சி, முதலில் கை கழுவிவிட்டு வா. சாப்பிட்ட பிறகு மொத்தமாகக் கை கழுவுவது எல்லாம் இங்கே நடக்காது! ஆ . .மாம்!” என்று வாசந்தி மிரட்டுவது போல நாடக மேடைத்தனமாகக் கண்களை உருட்டி நடிக்க, கலகலவென்று சிரித்தபடியே ஓடிப் போய் அருகில் இருந்த வாஷ்பேசினில் கைகளைக் கழுவிக்கொண்டு வந்து உண்ணத் தொடங்கினாள் பிரேமிதா.

எப்போதும் இப்படி சந்தோஷமாக இருக்க வேண்டிய பெண்! இருந்தவளும்தான்!

மெச்சுதலாகத் தங்கையிடம் தலையசைத்துவிட்டு உள்ளே போய் முகம் கைகால் கழுவிக்கொண்டு வந்த பவதிக்கு அப்போது சாப்பிடப் பிடிக்கவில்லை.

நேரம் கெட்ட நேரத்தில் உண்ட சான்ட்விச்சில் பசி கெட்டு விட அவள் அசதியாகவும் உணர்ந்தாள்.

தாயிடம் மெல்ல “அம்மா, பிரேமிதாவுக்குக் கார் வந்தால் என்னை எழுப்புங்கள். அல்லது நீங்களே கூட டிரைவரை நன்றாகச் செக் பண்ணிக்கொண்டு அவளை அனுப்பி விடலாம். எனக்குத் தூக்கம் வருகிற மாதிரி இருக்கிறது.” என்று சொல்லிவிட்டு, வாசந்தியிடம் கண்ணைக் காட்டிவிட்டுப் பவதி படுக்கப் போனாள்.

கொட்டாவி விட்டபடி படுக்கும்போதே, அந்த ஜெகனிடம் இருந்து இன்னொரு கால் வந்தது.

அவள் என்ன என்று கேட்குமுன்னரே அவன் மறுபடியும் “சாரி சொன்னான்.

தொடர்ந்து காரணத்தையும் கூறினான். “பாருங்கள் மிஸ் பவதி, நான் இன்றையப் பிரச்சினை பற்றி உங்களிடம் இன்னும் சொல்லவில்லை. சொன்னால்தான் இங்கே உள்ள நிலைமை புரியும். அக்காவின் பொருட்களை எங்கள் வீட்டுக்கு இடம் மாற்றிக்கொண்டு இருக்கிறோம். இங்கே எடுப்பதும், அங்கே கொண்டுபோய்ப் பத்திரமாக வைப்பதுமாக இதற்கிடையே அக்கா ஒவ்வொன்றாகப் பார்த்து அழுவதுமாக . . பாவம், அவளிடம் கண்டிப்புடன் பேச முடியவில்லை. . .ரொம்ப நேரம் பிடிக்கிறது. இப்போது காரில் கொஞ்சம் விலை உயர்ந்தவைகள் இருக்கின்றன. அங்கே எங்கள் வீட்டில் இறக்கிப் பத்திரமாக வைத்துவிட்டு அங்க வருவதற்கு இன்னும் கொஞ்சம் தாமதமாகும் போல இருக்கிறது. அதுவரை பிரேமிதாவை . . . மறுபடியும் ரொம்ப சாரி. உங்களை ரொம்பத் தொந்திரவு செய்கிறேன்.” என்று வருத்தத்துடன் கூறியவனின் குரல் கனத்திருந்தது.

தமக்கையோடு சேர்ந்து அழுதானோ? அல்லது கண்ணீரை அடக்கத் தவித்ததில் நேர்ந்ததோ? எதுவானாலும் பவதியின் மனம் உருகிப் போயிற்று.

எனவே, “பரவாயில்லை ஜெகன் சார். இங்கே பிரேமிதாவுக்கு வித்தியாசமான ருசி என்பதால் எங்கள் வீட்டு உணவு பிடித்த மாதிரித் தெரிகிறது. அவள் நல்லபடியாகச் சாப்பிட்டுவிட்டாள். அதனால், நீங்கள் எவ்வளவு தாமதமாக வந்தாலும் பிரச்சினை இல்லை. உங்கள்

வேலை முடிந்த பிறகே வாருங்கள்." என்றாள் இதமாக.

ஒரு கணத் தாமதத்தின் பின், "ரொம்ப நன்றி மிஸ் பவதி!" என்றது அவனது சற்றுக் கரகரத்த குரல்.

ஹாலுக்குப் போய் விஷயத்தைச் சொன்னதும் "ஹைய்யா!" என்று பிரேமிதா துள்ளிக் குதித்தாள். "அப்போ, அது வரைக்கும் நான் இங்கேயே இருப்பேனே!" என்றவளைத் திடீரென்று சந்தேகம் உலுக்கிவிட, "இருக்கலாமில்லையா மிஸ்?" என்று கவலையுடன் கேட்டாள்.

"கட்டாயம்!" என்றன மூன்று குரல்கள்.

தன்னைத் தவிர வேறு யார் என்று பவதி ஆச்சரியமாகப் பார்த்தால் அவளுடைய தாயும் தங்கையும்.

"நாங்கள் சீட்டு விளையாடப் போகிறோம்., நெயில் ஆர்ட் பண்ணப் போகிறோம். நிறையத் திட்டங்கள் போட்டாயிற்று. இந்த என் இந்தச் சின்னத் தங்கை இல்லாமல் அதெல்லாம் எப்படி முடியும்?" என்றாள் வாசந்தி.

"நான் கூட இவளுக்குப் பிடிக்கும் என்று சொன்னதால் மாலை டிஃபனுக்கு உருளைக் கிழங்கு பஜ்ஜி பண்ணப் போகிறேன். அதைச் சாப்பிடப் பிரேமிதா கட்டாயம் இருக்க வேண்டும்!" என்றாள் தாயார் உறுதியோடு.

வசுவோடு பிரேமிதா போய்விடத் தொடர்ந்து "பாவம்டி. பிள்ளை என்னமா மெலிந்து கிடக்கிறது! சின்ன வயசில் நீ சாப்பிடாமல் கொலைப் பட்டினி கிடந்து ஒல்லியாக இருப்பாயே! குச்சி மனுசி என்போமே, அப்போதுள்ள நல்ல உடைகளை வாசனையெல்லாம் போட்டுப் பத்திரமாக வைத்திருந்தேன். ஒன்றை இவளுக்குப் போட்டுவிட்டால் அளவு சரியாக இருக்கும். பாவம் எவ்வளவு நேரம் யூனிஃபார்மிலேயே இருப்பாள்?" என்று முடித்தாள்.

கை மறைவில் கொட்டாவியை வெளி விட்ட பின், "சரிம்மா, ஏதோ செய்யுங்கள்.. நான் ஒரு மணி நேரமாவது தூங்கப் போகிறேன்." என்று அறைக்குள் சென்றாள் பவதி.

"தூங்கி விழித்ததும் சாப்பிட்டுவிடு. உனக்குப் பிடித்த குழம் . ." என்ற அன்னையின் குரல் படுக்கை வரை அவளைத் தொடர்ந்தது.

தூங்கி விழித்து உணவருந்தி முடித்தபோது பவதிக்குப் பழைய உற்சாகம் திரும்பியிருந்தது.

வாசந்தியின் அறையில் சத்தம் கேட்டது. பிரேமிதாவோடு ஏதோ விளையாட்டு. தானும் கலந்து கொள்ளலாமா என்று பவதிக்குச் சிறு ஆசை ஒன்று லேசாகத் தோன்றியது.

ஆனால், ஆர்வக் கோளாறில் அதைப் பிரேமிதா பள்ளியில் பெருமையாகப்  பேசினால் அது பிரச்சினையாக உருவெடுக்கக் கூடும்.

தனியாக நின்ற மாணவியைப் பொறுப்போடு வீட்டுக்குக் கூட்டிப் போய்ப் பத்திரமாக வைத்திருப்பது வேறு. ஆட்டம் பாட்டம் என்று கலந்து மகிழ்வது வேறு.

பிரேமிதாவை அழைத்துச் செல்வதற்கு ஜெகன் வந்தபோது ஏழு மணிக்கு மேல் ஆகி விட்டது. அக்கா மகளைக் கூட்டி வர டிரைவரை அனுப்பாமல் அவனே நேரில் வந்திருந்தான்.

ஆனால் ஆள் மிகவும் சோர்ந்து தெரிந்தான். அன்று படு கம்பீரமாகப் பள்ளிக்கு வந்தவனா என்று இருந்தது பவதிக்கு.

அறிமுகம் முடியும்போதே அவசரமாக உள்ளே சென்ற பத்மாசனி விரைவிலேயே காஃபியோடு வந்தாள். “உட்கார்ந்து குடியுங்கள், தம்பி.” என்று உபசரித்தாள்.

ஒரு மிடறு அருந்தியதுமே கண் மூடித் திறந்து “மிகவும் ருசியாக இருக்கிறது ஆன்ட்டி. ரொம்பத் தாங்க்ஸ்.” என்றான் அவன். “அதை விடவும் பிரேமிதாவைப் பார்த்துக் கொண்டதற்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை எனலாம்.”

வெறும் உபசார வார்த்தைகளாக இல்லாமல் உணர்ந்து சொல்வது நன்றாகத் தெரிந்தது. “மித்தியால் தொந்திரவு இல்லையே?” என்று பவதியைப் பார்த்துக் கேட்டான்.

இல்லை என்பது போல அவள் தலையசைக்கும்போதே மகளை ஒரு பார்வை பார்த்துவிட்டு பத்மாசனி மறுபடியும் சமையல் அறைக்குச் சென்றாள்.

ஜெகன் பவதியைப் பார்த்து, “      முதலில் இந்த எண்ணைப் பதிவு செய்து கொள்ளுங்கள், பவதி. இது என் தனிப்பட்ட எண். உடனே எடுத்துவிடுவேன். முன்பு தந்தது நான் அலுவலகத்தில் எல்லோருக்கும் கொடுக்கிற எண். நீங்கள் அழைத்ததை முக்கியமாக எண்ணாமல், ஏதோ அலுவலகக் கால் என்று சரியாகப் பார்க்காமலே விட்டுவிட்டேன். பிறகு மெஸேஜைப் பார்த்த பிறகுதான் புரிந்தது. சாரி.  . . “ என்றவன் லேசாக முறுவலித்து, “உங்களிடம் “சாரி” சொல்வதே எனக்கு வேலையாகப் போய்விட்டது. அதற்கு இன்னொரு சாரி.” என்றான்.

பெரும் வேதனையை அடக்கி அவன் இயல்பாகப் பேச முயற்சிப்பதைப் பார்க்கையில் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல், “பரவாயில்லை. விடுங்கள். சில தருணங்களில் இப்படியும் நேர்ந்து விடுவதுதான். உங்கள்

சகோதரி பரவாயில்லையா?” என்று மெல்லக் கேட்டாள்.

“இல்லை.” என்று தலையசைத்தான் அவன். “உங்களுக்குத்தான் பிரச்சினை என்னவென்று தெரியுமே, பவதி. இன்றிலிருந்து அந்த வீட்டை விட்டுக் கிளம்பி அக்கா எங்கள் வீட்டுக்கு வருகிறாள். திருமண ரத்துக்காக அத்தானும் அவளும் பிரிந்து வாழ்வது தொடங்குகிறது. சாமான்களை எடுத்து பாக் பண்ணி முடிக்குமுன் பெரும் பாடாகிவிட்டது. அது அப்போது வாங்கியது, இது இப்படி நினைத்துச் செய்யச் சொன்னேன் . .. என்று ரொம்ப வேதனைப்பட்டு விட்டாள். இதில் வழக்கமான டிரைவர் வேலுவை வேறு அத்தான் கூட்டிப் போய்விட்டார். அவர் இருந்திருந்தால் மித்தியை மறக்காமல் கூட்டி வந்திருப்பார். எல்லாமாக . . போகட்டும். ரொம்பத் தாங்க்ஸ். நீங்கள் இல்லாமல் சமாளித்திருக்கவே முடியாது.” என்று தணிந்த குரலில் கூறியவன் “மி . .வந்து பிரேமிதா எங்கே?” என்று பார்வையால் தேடினான்.

பார்த்தால் ஹாலின் ஒரு மூலையில் இருந்த சாப்பாட்டு மேஜை முன் அமர்ந்து, அவள் இட்டிலியை உண்டுகொண்டு இருந்தாள்.

வைத்துக் கொடுத்தது வாசந்தி.

இவர்கள் பார்வையைக் கவனித்து, “சற்றுப் பொறுங்கள் சார். பிரேமிதா சாப்பிட்டுவிட்டு வரட்டும்.” என்றாள் அவள்.

மருமகள் சாப்பிடுவதைப் பரிவோடு பார்த்தான் ஜெகன்.

என்னவோ தோன்ற, “நீங்கள் சாப்பிட்டீர்களா?” என்று பவதி விசாரித்தாள்.

வருத்தமாக முறுவலித்து, “சாப்பாடா? அது யாருக்கு நினைவு இருந்தது?” என்றான் அவன் அசட்டையாக.

சூடாக அடுத்த செட் இட்டிலியைக் கொண்டு மேஜையில் வைத்துக் கொண்டிருந்த பத்மாசனி அதைக் கேட்டுவிட்டு, “வாருங்களேன் தம்பி. நீங்களும் சாப்பிட்டு விட்டே போகலாம்.” என்று கூப்பிட்டாள்.

பெயருக்குக்கூட மறுக்காமல் எழுந்து சென்ற ஜெகன், உணவு மேஜையின் அருகில் இருந்த வாஷ்பேசினில் கையைக் கழுவிகொண்டு சாப்பிட உட்கார்ந்து விட்டான்!

அவ்வளவு பசியா?

தாயார் பரிவாகப் பரிமாற, உள்ளே சென்று இட்லி மிளகாய்ப் பொடியை எடுத்து வந்தாள் பவதி.

ஜெகன் சாப்பிடுவதைப் பார்த்துவிட்டு, “உங்கள் சகோதரி . . . அவள் சாப்பிட்டாளா?” என்று குடும்பத் தலைவி கேட்டாள்.

“இல்லை. எங்கள் வீட்டில் அம்மாவும் அப்பாவும் வீட்டில் இல்லை. வெளிநாடு போயிருக்கிறார்கள். . . .அதனால் அவளும் . .ஆனால் விடுங்கள் ஆன்ட்டி. அவளுக்கு நான் ஏதாவது வாங்கிப் போய்விடுவேன்.” என்று எழுந்து சென்று கை கழுவினான் அவன்.

“இல்லை. கொஞ்சம் தருகிறேன். எடுத்துப் போங்கள். “ என்று ஒரு சின்ன அடுக்கில் இட்டிலியும் சட்டினியும் எடுத்து வைத்துக் கொடுத்தாள் அன்னை.

வாயில் வரை சென்று வழியனுப்பும்போது, “பிடிக்காவிட்டால் வழியில் யாருக்காவது கொடுத்து விடுங்கள். உணவு கொடுக்கும் விஷயத்தில் எங்கள் அம்மாவைத் தடுக்க முடியாது.” என்றான் பவதி மெல்லிய குரலில்.

வியப்புடன் பார்த்து, “பிடிக்காமல்? நன்றாகத்தானே இருந்தது?” என்றான் ஜெகன்.

அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல், பிரேமிதாவுக்கு பை சொல்லி அனுப்பிவிட்டு பவதி உள்ளே சென்றால் வாசந்தி தாயிடம் கத்திக் கொண்டிருந்தாள்.

“என்னம்மா நீங்கள்! அவர்கள் வீட்டில் பீட்சா, பர்கர் என்று அதிலும் விலை உயர்ந்த வகை ஆர்டர் பண்ணி வீட்டுக்கே வரவழைத்துச் சாப்பிடுவார்கள். நீங்கள் இந்த ஆதி காலத்து இட்டிலியை இங்கே சாப்பிடக் கொடுத்தது போதாது என்று வீட்டுக்கும் அனுப்பி விட்டீர்களே! கேவலம்! போகிற வழியிலேயே வீசி எறிந்துவிடப் போகிறார்!” என்றாள் அவள்.

“எனக்கும் கொஞ்சம் அப்படித்தான் தோன்றுகிறது அம்மா. எத்தனையோ “ஆப்” வந்துவிட்டது. விரும்பிய இடத்தில் இருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அதை விட்டு . . “ என்று பெரியவளும் இழுத்தாள்.

“என்னடி நீங்கள்? இங்கே சரியாகத்தானே சாப்பிட்டார்? சுவை பிடித்த மாதிரிதான் தோன்றியது!”

“பின்னே அநாகரீகமாக நன்றாக இல்லை என்றா சொல்வார்கள்? பசிக்கு ஒருவர் அப்போதைக்கு அள்ளிப் போட்டுக் கொண்டால், அதை வீட்டுக்கு வேறு அனுப்பி . . போங்கம்மா. எனக்குப்பிடிக்கவே இல்லை!” என்று சலித்துக் கொண்டார்கள் இரு மகள்களும்.

“அட போங்கடி. வீட்டிலே அவர் அக்கா பட்டினி என்றால் எப்படிப் பொறுப்பது? என்னாலே முடியாது. சாப்பிடுவதோ தூரப் போடுவதோ அவர்கள் விருப்பம்!” என்று முடித்தாள் தாய்.

ஊர்க்காரர்கள் கூட்டத்துக்குப் போய்விட்டுத் தாமதமாக வந்த

தந்தையிடமும் பெண்கள் புகார் கூறிக் கொண்டார்கள்.

“சரி. சரி, விடுங்கள். அதிருஷ்டம் இருந்தால் அம்மா கைப் பக்குவம். இல்லாவிட்டால் வெளிச் சாப்பாடு. கொடுத்து வைத்தது கிடைக்கும். இப்போது நேரமாகிறது போய்ப் படுங்கள். பத்மா, நாளைக்குக் கல்யாணத்துக்குப் போக வேண்டுமே. பிள்ளைகளுக்கு ஏதாவது சமைத்து வைத்துவிட்டு அதன் பிறகுதான் வருவேன் என்று அது வேறு சீக்கிரமே விழித்து வேலை செய்வாய். இப்போதேனும் சீக்கிரமாகத் தூங்கு.” என்றார் சிவகுரு பரிவாக.

“ஆறு மணிக்கே கிளம்ப வேண்டும் என்றீர்களே. அதனால் எல்லாம் இப்போதே தயார் பண்ணி ஆயிற்று. அடுப்பில் பத்தே நிமிஷ வேலை. பிரச்சினை இல்லை . .” என்றபடியே கணவரைப் பின் தொடர்ந்தாள் பத்மாசனி.

பிற்பகலில் தூங்கியதாலோ என்னவோ, பவதிக்குச் சட்டென உறக்கம் வரவில்லை. மனதில் பிரேமிதா வீட்டுப் பிரச்சினை ஓடிக் கொண்டிருந்தது.

அந்த ஜெகனின் வீட்டிலும் வேறு யாருமில்லை. பெற்றோர் வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார்கள் என்றான். மகளின் வாழ்வு தலைகீழாகி இருக்கிறது. இப்போது எப்படி அவர்களால் தூர இருக்க முடிகிறது?

பெற்ற மகளான பிரேமிதாவையே கவனித்துக் கொள்ளமுடியாத அளவு சோகம். ஆனால் அந்த சோகம், பிரேமிதாவுடைய அன்னையைப் பெற்றவர்களைப் பாதிக்கவில்லையா?

ஆனால் ஜெகனும் அவனுடைய பெற்றோரைக் குறை கூறவில்லை!

சற்று யோசித்துவிட்டு, அவரவர் நியாயம் அவரவருக்கு. தெரியாத விஷயம் பற்றிக் குழம்பக் கூடாது என்று கண்ணை மூடிக்கொண்டு உறங்க முயன்றாள்.

ஆனால் அந்த ஜெகனும் அவனுடைய சகோதரியும் சற்றேனும் கண்ணயர்நது இருப்பார்களா என்று மனம் யோசித்தது. தூங்கினாலாவது துக்கம் தெரியாது.

தன்னால் தூங்க முடியாது போலத் தோன்றவே, பவதி எழுந்து சென்று அலமாரியில் இருந்த லைப்ரரி புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

சற்று நேரம் படித்தால் ஏண்டா இந்தப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினோம் என்று ஆகிவிட்டது. சைக்காலஜி படிக்கிற தங்கையை லைப்ரரிக்கு அனுப்பினால், இப்படிப்பட்ட சைக்கோ பயங்கரங்களைத்தான் எதிர்பார்க்க வேண்டும் போல! ஆனால்

புத்தகத்தைத் தூக்கி எறியவும் பவதியால் முடியவில்லை. சைக்கோ கொலைகாரனை இன்னமும் பிடிக்கவில்லையே!

மணி பன்னிரண்டுக்கும் மேலே!

மேலே படிக்கவும் பிடிக்காமல், மூடி வைக்கவும் முடியாமல் பவதி திணறிக்கொண்டு இருந்தபோது, அவளது மொபைல் பாடத் தொடங்கியது.

இந்த நேரத்தில் யார் என்று யோசனை ஒருபுறம் ஓட, அப்பாடி ஒரு சாக்கு என்று புத்தகத்தை மூடி வைத்துவிட்டு மொபைலை எடுத்தாள் அவள்.

எடுத்துப் பார்த்தால் ஜெகன்! இந்த நேரத்தில் என்னவாக இருக்கும்?

சட்டெனப் பதறி, “என்ன ஜெகன், என்ன? யாயாருக்கும் ஒன்றுமில்லையே?” என்று கவலையுடன் கேட்டாள்.

“அடடா! பயந்துவிட்டீர்களா? ரொம்ப லேட்தானில்லையா? இந்த நேரத்தில் நான் கூப்பிட்டிருக்கக் கூடாது. ஆனால் மித்தியை சமாதானப்படுத்தவே முடியவில்லை. உடனே உங்களிடம் கேட்கிறேன் என்று ப்ராமிஸ் பண்ணிய பிறகுதான் அமைதியாக இருக்கிறாள். வந்து . . “

“சின்னப் பிள்ளைகளுக்கு நேரம் பற்றித் தெரியாது. சொல்லுங்கள். பிரேமிதா என்ன கேட்கச் சொன்னாள்?”

ஒரு கணம் தயங்கிய பிறகே அவன் சொன்னான். “சாரி. இந்த உதவி உங்களிடம் கேட்பதும் சரியில்லை. ஆனால் கேட்கிறேன் என்று அவளிடம் சொன்ன பிறகு வேறு வழியில்லை. பவதி, நாளை ஞாயிற்றுக்கிழமைக்காக நீங்கள் வேறே ஏதேதோ திட்டமிட்டிருப்பீர்கள். .. “

அவன் தயங்கித் திண்டாடுவது பிடிக்காமல், “இல்லை. நாங்கள் எந்தத்  திட்டமும் போட்டிருக்கவில்லை. அவசியமற்று அதை யோசிக்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள். நாளைக்கு பிரேமிதாவுக்கு நான் என்ன செய்தால் நன்றாக இருக்கும்?” என்று பவதி நேரே விஷயத்துக்கு வந்தாள்.

அப்போதும் அவனுக்குத் தயக்கம்தான்.

“அதாவது . . பவதி, நாளைக்கு மட்டும் மித்தியை உங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள முடியுமா? கேட்பதற்கு எனக்குச் சற்றும் உரிமை இல்லை. ஆனால் இங்கே புது இடம். நாங்களுமே புதிதாக வாங்கி வந்த இடம். மித்தியின் சாமான்களும் எதுவும் பிரித்து அடுக்கி வைக்கவில்லை. பெட்டி பெட்டியாக அப்படியே கிடக்கின்றன.

ரொம்பத் தவிக்கிறாள். கூட்டிப் போய் மிஸ் வீட்டில் விட்டுவிடுங்கள் என்று கதறி அழுகிறாள். அப்படியெல்லாம் இஷ்டம் போல மிஸ் வீட்டுக்குச் செல்ல நமக்கு உரிமை கிடையாது என்றால் அவளுக்குப் புரியவில்லை. எங்களாலும் அவளைச் சமாளிக்க முடியவில்லை. அவளைப் பார்த்து அக்கா வேறு! நாளை லீவு நாள்தானாம். உங்களைத் தொல்லையே பண்ண மாட்டாளாம். உங்கள் தங்கையோடு பேசிக்கொண்டு, விளையாடிக் கொண்டு நல்ல பிள்ளையாக இருப்பாளாம். காட் ப்ராமிஸ் என்கிறாள். ஆனால் உங்களால் முடியா . . . வந்து சிறு சங்கடம் இருந்தாலும் தயங்காமல் சொல்லி விடுங்கள். ப்ளீஸ் . . . ” என்றான் அவன்.

அவளும் சற்றும் தயங்காமலே, “சங்கடம் எதுவும் கிடையாது” என்றாள்.

சாப்பாடு விஷயம் பிரச்சினை இல்லை. அம்மா அப்பா கல்யாணத்துக்குப் போகிறார்கள்தான் என்றாலும் மகள்களுக்குச் சாப்பாடு செய்து வைக்காமல் வீட்டை விட்டு தாயார் நகர மாட்டாள். அது பிரேமிதாவுக்கும் போதுமானதாகவே இருக்கும். மற்றபடியும், கொஞ்சம் சோறு பொங்கவும் முட்டை பிரட்டவும் இயலாதவர்களாக அன்னை அவர்களை வளர்த்திருக்கவில்லை.

இதே போல எதையோ யோசிப்பது போல ஜெகன் பேசாதிருக்கவும், “ஒன்றும் பிரச்சினை இல்லை ஜெகன். பிரேமிதாவைத் தைரியமாகக் கூட்டி வாருங்கள். அவளுக்கும் என் தங்கைக்கும் இடையே அருமையான புரிதல் இருக்கிறது! என் தங்கை வாசந்தி சைக்காலஜி பிஜி படிக்கிறாள். உங்கள் அக்கா மகளை அவள் திடப்படுத்தவும் கூடும். நாளை முழுதும் அவள் இங்கே இருக்கட்டும். அவளைப் பற்றிய கவலையற்று, நீங்கள் சாமான்களைப் பிரித்து அடுக்குவதைப் பாருங்கள். “ என்று முடித்தாள் பவதி.

“ரொம்ப நன்றி பவதி! மித்தியைக் காலையில் கூட்டி வருகிறேன்.” என்றான் அவன் தணிந்த குரலில்.

அவளுக்கும் மெல்ல தூக்கம் வந்தது. எழுந்து போய்ப் பழைய, உண்மையாகவே ரொம்பப் பழைய கிழிந்த ஒரு டீஷர்ட்டை எடுத்து அணிந்துகொண்டு படுத்தாள்.

தோள்ப்பக்கம் கிழிசலை இழுத்து விட்டவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

இதை அணியும் போதெல்லாம், “ரொம்பப் பழசாகிவிட்டது. பயங்கரக்கிழிசல் வேறு. பேசாமல் சமையலறைத் துணிக்குத் தந்துவிடு.” என்று அம்மா சொல்வதும், “மாட்டவே மாட்டேன். என் முதல் மாதச் சம்பளத்தில் வாங்கியது. என்ன மிருதுவாக சுகமாக இருக்கிறது தெரியுமா?” என்று பிடிவாதமாக பவதி மறுப்பதும்

கட்டாயம் நடக்கும்.

அப்போது இரண்டு கிழிசலாக இருந்தது. கடைசியாக மிஷினில் துவைத்தபோது மூன்றாகி இருந்தது. அதுவும் தோள்ப்பட்டையில்!

இப்போது இதைப் பார்த்தால் அம்மா என்ன சொல்லக் கூடும்? நல்லவேளை! காலையில் மகள்கள் எழுமுன்னரே அம்மாவும் அப்பாவும் கிளம்பி விடுவார்கள். சந்தோஷமாக யோசித்தபடியே படுத்தவள் புன்னகையுடனேயே தூங்கிப் போனாள்.

காலையில் அழைப்பு மணி ஒலியில்தான் அவளது தூக்கமே கலைந்தது.

இந்த நேரத்தில் யார் என்று கொட்டாவி விட்டபடி மணியைப் பார்த்தால் ஆறரையைக் காட்டியது! அம்மா அப்பா கிளம்பி இருப்பார்கள். இடி விழுந்தால்கூட வாசந்தி ஏழு மணிக்கு முன் எழ மாட்டாள்! விட்டால் எட்டே ஆகும்!

மீண்டும் மணி ஒலித்தது.

வேறு வழியின்றி எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தால் “குட்மார்னிங் மிஸ்!” என்று உற்சாகமாகக் கூறியபடி பிரேமிதாவும், கூடவே அவளுடைய மாமனும்!

அவசரமாகச் சாவியை எடுத்து வெளி கிரில் கதவைத் திறந்துவிட, இருவரும் உள்ளே வந்தனர். “உள்ளே வாருங்கள்.”

தோளில் இருந்து நழுவிய கிழிசல் டீஷர்ட்டை இழுத்துப் பிடித்துக்கொண்டு பவதி நிற்க, அவளை நேராக நோக்காமல் எங்கோ பார்த்தபடி ஜெகன் ஒரு பெரிய கிட்பாகை உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

சுவர்ப் பக்கமாகப் பார்த்தவாறே “நான் கிளம்புகிறேன். மித்தியைக் கூட்டிப்போக மாலையில் வருகிறேன்.” என்றவன், அவளது பதிலுக்காக நில்லாமலே விரைந்து சென்றுவிட்டான்.

பவதிக்கு உள்ளூரச் சற்று ஏமாற்றமாக இருந்தது.

உரிமையற்று உதவி கேட்கும் தயக்கத்தோடு, பலமுறை கூறும் நன்றி, சாரி எனும் வழக்கமான பேச்சு எதுவும் இல்லாமலே சென்றுவிட்டானே! சரியாகச் சொல்வதானால், தேவையற்று எதற்காக இவ்வளவு சங்கடப்படுகிறான் என்றுதான் பவதிக்குத் தோன்றும்.

ஆனால் இன்று ஒன்றுமே சொல்லாததோடு அவள் பக்கமே பாராமல் ஜெகன் சென்றது அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

பிரேமிதாவை அவளது அறைக்குக் கூட்டிப் போய் உட்கார வைத்துவிட்டுப் பல் துலக்கப் போன பவதிக்குக் கண்ணாடியில்

தெரிந்த தன் உருவத்தைப் பார்த்ததும் கூசிப் போய்விட்டது. இந்த மாதிரிக் கிழிசலையா அணிந்துகொண்டு நின்றாள்!

அவன் முகம் நிமிர்ந்து பாராதது அதிசயமே அல்ல!

மனதை மறைத்து பிரேமிதாவுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே வாசந்தியும் எழுந்து வந்து சேர்ந்தாள்.

திருமணத்திலிருந்து திரும்பி வந்த பத்மாசனிக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

தன் கிழிசல் டீஷர்ட்டை எடுத்து வந்து தாயிடம் கொடுத்து, "இதை இனிமேல் கிச்சன் துணிக்கு வைத்துக் கொள்ளுங்கள் அம்மா." என்றாள் பவதி.

பார்த்துக் கொண்டே இருந்த வாசந்தியின் கண்கள் வியப்பில் வட்டமாக விரிந்தன!

# அத்தியாயம் -4

காலை எழும்போதே பிரேமிதாவைப் பார்த்ததில் வாசந்திக்கு ஆச்சரியம் என்றாலும், தமக்கை தந்த விவரங்களால் அந்தச் சின்னப் பெண்ணிடம் பரிவும் பாசமும் கூட ஏற்பட்டிருந்தது.

எனவே, "வாங்க மேடம் வாங்க. எத்தனை நாள் தங்கப் போகிறீர்கள்? பையெல்லாம் ரொம்பப் பெரிதாக இருக்கிறதே!" என்று கலகலப்பாகப் பேசினாள்.

"ஐயோ அக்கா, நான் சாயங்காலமே போய்விடுவேன். இன்னும் இன்னும் என்று இழுக்கக் கூடாது என்று மாமா கண்ண் . . டிப்பாகச் சொல்லியிருக்கிறார்!" என்றாள் சிறுமி பாவனையோடு.

"பின்னே எதற்கு இவ்வளோ பெரிய பையில் துணிமணி வந்திருக்கிறது?"

அவள் காட்டியதைப் பார்த்துவிட்டு, பிரேமிதா சிரித்தாள். "அது எனக்கு இல்லை அக்கா. என்னோடது ஒரே ஒரு செட்தான். அப்பறம் நேற்று போட்டிட்டுப் போனேனே, மிஸ்சோடது, அதுவும் இதோ என் தோள்ப் பையிலே இருக்குது. அந்தப் பை உங்களுக்கு . .மிஸ்சுக்கும் உங்களுக்கும் கிஃப்ட்! நேற்று இங்கே இருந்தேன். இன்னைக்கும் ஜாலியாக இங்கேயே இருக்கப் போறேன். அதுக்குத்தான் உங்களுக்கு கிஃப்ட்!" என்று விளக்கினாள்.

"எனக்கு கி . .அதாவது அன்பளிப்பு! இவ்வளோ பெரிய பையில் என்ன கிஃப்ட் என்று பார்ப்போம்!" என்று வாசந்தி பையின் ஸிப்பைத் திறக்க பிரேமிதாவும் சந்தோஷமாக உள்ளே இருந்தவற்றை எடுத்துக் கடை பரப்பலானாள்.

பார்க்கப் பார்க்க, பிரேமிதா வயதுக்கு இறங்கி, வாசந்தியும் குதிக்கலானாள்.

"அக்கா இந்தச் சாக்கலேட் பார்!  உள்ளே முழுக்க பாதாமை நொறுக்கி  சாக்கலேட்டில் முக்கி வேஃபருக்குள் வைத்தது. எல்லாம் இரண்டிரண்டு பாக்கெட்டுகள். உனக்கும் எனக்கும் என்று வைத்திருப்பார் போல! ஆனால் நீ ஆசிரியை இதெல்லாம் ரொம்பச் சாப்பிடக் கூடாது மாணவர்களுக்கே எடுத்துச் சொல்ல வேண்டியவள். அதற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டியவளும் கூட.. ஆனால் நியாயமாக நடக்க வேண்டும் இல்லையா? அதனால் ருசி பார்க்க மட்டும் ஒன்று . .இல்லை பாவம், இரண்டே எடுத்துக் கொள். அப்புறம் மிட்டாய்க் குட்டி, நீ சின்னவள். ஆசை இருக்கும். அதனால் உனக்குக் கொஞ்சம் தருகிறேன். ." என்று அவள் ஆர்ப்பரித்தாள்.

“பார்த்தும்மா. ரொம்ப அநியாயத்துக்கு நியாயம் பேசாதே. அப்புறம் முன்பே எச்சரித்திருக்கிறேன். தராசைக் கையில் கொடுத்து உன்னை நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தி விடுவார்கள் என்று .” என்று கண்ணை உருட்டித் தங்கையை மிரட்ட முயன்ற பவதி தன்னை மீறிச் சிரிக்கலானாள்.

புரியாமல் விழித்தபோதும் “இது எனக்குப் புரியலை. ஆனாலும் உங்களைப் பார்த்து எனக்கும் சிரிப்பா வருது.” என்று தானும் சிரித்தாள் பிரேமிதா.

சிரித்து முடித்துவிட்டு, “இதெல்லாம் எனக்கு வீட்டிலே ஒரு செட் இருக்குது மிஸ். அதனாலே இதெல்லாம் உங்களுக்கு மட்டும்தான். மாமா கூடச் சொல்லியிருக்கிறாங்க, இதைத் தொடக் கூடாதுன்னு.” என்று தெரிவித்தாள்.

“ஐயோடா! இது பயங்கர நேர்மையாக இருக்கிறதே! நீதிமன்றத்தில் நிற்க எனக்குப் போட்டியா? ஆனாலும் இந்த நேர்மைக்குப் பரிசு கொடுக்க வேண்டாமா? சொல்லு, இதிலே எது மிகவும் நன்றாக இருக்கும்? ஒரே ஒரு ரவுண்ட் எடுத்துக் கொள்வோம்.” என்று ஒரு டப்பாவை உடைத்தாள் வாசந்தி!

ஒன்று மூன்று சுற்றுகள் முடிந்தன. “இனிமேல் போதும்பா. இதற்கு மேலே தின்றால் அப்புறம் காலைச் சிற்றுண்டிக்கு வயிற்றில் இடம் இருக்காது. செய்து வைத்ததைச் சாப்பிடாமல் மிச்சம் வைத்தால் எங்கள் அம்மாவுக்குப் பிடிக்காது.” என்று சாக்கலேட் டப்பாவை மூடி வைத்தாள் வாசந்தி.

ஏற்கனவே தன் மூன்றாவதை பவதி சிறுமிக்குத்தான் கொடுத்திருந்தாள்.

அதைக் ரசித்து உண்டபடி, “ஆன்ட்டி செய்ததுதானே? அதற்கு என் வயிற்றில் இன்னும் இடம் இருக்கிறதுக்கா.” என்று பிரேமிதா தன் வயிற்றைத் தட்டிக் காட்ட மற்ற இருவரும் நகைத்தனர்.

காலை உணவுக்கு பொங்கலும் கெட்டிச் சட்டினியும். எதற்கும் இருக்கட்டும் என்று பவதி நாலு தோசை சுட்டு வைக்க எல்லாம் காலி!

கூடச் சேர்ந்து தட்டு தண்ணீர் எடுத்து வைப்பதும் உண்ட பாத்திரங்களை எடுத்து ஸிங்க்கில் போடுவதுமாக பிரேமிதாவும் ஓடி ஓடி வேலை செய்தது இரு சகோதரிகளுக்குமே நெஞ்சை உருக்கியது.

இதெல்லாம் இந்தப் பெண் என்றேனும் செய்திருப்பாளா?

மூன்று பேருமாகச் சீட்டு  விளையாடினார்கள். எட்டு வயதுச்சிறுமிக்கு ஏற்றவாறு திருடன் விளையாட்டு. வெளியே காட்டிக் கொள்ளாமல் இருவரும் அவளுக்குக் கொஞ்சம்  விட்டுக் கொடுத்தார்கள்.

சற்று நேரத்தில் மறுநாள் வகுப்புக்கு உரிய பாடங்களைத் தயார் பண்ணவென்று பவதி எழுந்து சென்றுவிட, மற்ற இருவரும் நெயில் ஆர்ட் என்று கை கால் நகங்களுக்கு விதவிதமாகச் சாயம் பூசினார்கள்.

மதிய உணவுக்கு முன்பாகவே சிவகுருவும் பத்மாசனியும் திரும்பி வந்துவிட்டார்கள்.

பிரேமிதாவைப் பார்த்து வியந்தாலும், பவதி விஷயத்தை மெதுவே உரைக்க அவர்களும் மனம் கரைந்து போனார்கள்.

புளியோதரையும் தயிர் சாதமுமாக மதிய உணவும் தயாராக இருந்ததால், பிரேமிதாவோடு விளையாடுவதில் பத்மாசனியும் சேர்ந்து, அவளுக்குத் தாயக் கட்டம் விளையாடக் கற்றுக் கொடுத்தாள்.

எல்லோருமே சற்று நேரம் படுத்து ஓய்வெடுத்தார்கள்.

பார்த்துவிட்டு. இந்தப் பெண் எல்லோருடனும் இயல்பாகக் கலந்து கொள்கிறாளே என்று சிவகுரு ஆச்சரியப்பட்டார்.

மாலையில் அழைத்துச் செல்ல ஜெகன் வந்ததும் சற்றே முகம் வாடினாலும் பிரேமிதா பிரச்சினை ஏதும் பண்ணாமல் அவளது பொருட்களை எடுத்து வந்து வைத்தாள்.

பத்மாசனி தந்த காஃபியை அருந்தியபடி, “இந்தக் காஃபிக்காகவே மித்தியை அழைத்துப் போக நானே வந்தேன் ஆன்ட்டி் என்று மறைமுகமாகப் பாராட்டினான் அவன்.

அப்போதும் தன்னை நேராகப் பார்ப்பதை அவன் தவிர்ப்பது போலவே பவதிக்குத் தோன்றியது.

ஏன்? இப்போதும் ஏதோ கிழிசலை அணிந்து கொண்டு நிற்பாளோ என்ற பயமா? ஓர் ஆசிரியை, அதுவும் அவனுடைய மருமகளுடைய ஆசிரியை, அவளை அந்த மாதிரி நிலையில் டிரைவர் பார்த்துவிடக் கூடாது என்றுதான் அவனே வந்தானோ? இவனைப் போலப் படகு போன்ற கார்கள் இல்லாவிட்டாலும், இங்கேயும் எல்லாம் கௌரவமானவர்கள்தான்! ஏதோ சுகமாக இருந்தது என்று இரவுக்கு ஒரு பழசை அணிந்தால், அதற்காக அதுதான் வீட்டில் அவளது உடையே என்று எண்ணி விடுவதா?

சுருசுருவென்று உள்ளூரப் பொருமலாக இருந்தது அவளுக்கு.

இப்படியெல்லாம்தான் அவன் நினைத்தாக வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லை. நினைத்திருப்பான் என்று நிச்சயமும் இல்லை. பின்னே ஏன் இப்படிப் பொருமுகிறோம் என்று அவளுக்குப் புரியவும் இல்லை.

என்னவோ அவன் நிமிர்ந்து பாராமல் பேசியது அவளுக்கு உள்ளூர உறுத்தலாக இருந்தது. அது அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவன் நடந்த விதமும் பிடிக்கவில்லை. அதனால் ஏற்பட்ட அந்த உறுத்தலும் அவளுக்குப் பிடிக்கவில்லை!

இவ்வளவு நேரத்தில் வீட்டை . .குறைந்த பட்சமாக பிரேமிதாவின் அறையை அடுக்கியிருப்பார்கள். அதனால் அவள் அங்கே நிம்மதியாக இருப்பாள்.

அதாவது அவளுடைய மாணவி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிடுவாள். ஒழுங்காகப் படிப்பாள். அதற்கு மேல் ஆசிரியையான அவளுக்கு என்ன வேண்டும்? எதுவுமே கிடையாது என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் பவதி.

அவள் எண்ணியதே சரியாக, காலம் கொஞ்சம் சாதாரணமாகப் போயிற்று. பிரேமிதாவும் வகுப்பில் கவனிப்பது, வீட்டுப் பாடம் செய்வது என்று படிப்பில் ஓரளவு முன்னேறலானாள். கேள்வி கேட்டால் உற்சாகத்துடன் பதிலும் சொல்லலானாள்.

இந்நிலையில் இன்னொன்று நடந்தது.

பின் வந்த ஒரு வார இறுதியில் சனிஞாயிறு இரண்டு நாட்கள் சேர்ந்து விடுமுறையாக இருந்தது.

அந்த வெள்ளிக் கிழமை இறுதி வகுப்பில் மாணவர்கள் எல்லோருக்கும் வீட்டுப் பாடமாக அறிவியலில் ஒரு பாடம் படித்துவிட்டு வருமாறு பவதி கூறினாள். அந்தப் பாடத்தில் திங்கள்கிழமை சில கேள்விகள் கேட்கப் போவதால் கட்டாயமாக நன்றாகப் படித்திருக்க வேண்டும். வேறு எழுத்து வேலை எதுவும் கிடையாது என்றும் சொல்லி அனுப்பினாள்.

சனிக்கிழமையன்று புதிய “மால்” ஒன்றைத் திறக்கப் போவதாக எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிய விளம்பரங்கள் வந்திருந்தன. டீவி சேனல்களிலும் அதே அறிவிப்புகள் கண்களைக் கவலும் வகையில் ஓயாது ஒளிபரப்பாயின.

சிறியவர் பெரியவர் எல்லோரையும் கவர்ந்து இழுக்கும் விதமாக விற்பனைக்குப் பல பொருட்களோடு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இருப்பதாக அந்த விளம்பரங்கள் தம்பட்டம் அடித்தன. குட்டீசுக்காகப் பல சலுகைகள் வேறு!

“நாமும் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்ப்பா.” என்று வசந்தி கேட்டாள்.

“நான் வரவில்லை. எனக்கு நிறையப் பாடம் இருக்கிறது.” என்றாள் பவதி.

“படிக்கிற காலத்தில்கூட, நீ இப்படிப் பாடமும் கையுமாக இருந்தது இல்லை.” என்றாள் வாசந்தி.

“பொறுப்பும்மா, பொறுப்பு! அப்போது நான் மட்டும் படித்தேன். இப்போது பதினெட்டுப் பேரை அல்லவா படிக்க வைக்க வேண்டியிருக்கிறது!” என்று பதில் கொடுத்தாள் பவதி.

“அவர்களைப் படிக்க வைப்பதற்காக நீ புத்தகத்தைக் கரைத்துக் குடிப்பானேன்?”

“தங்கச்சிப் பாப்பா, இது உனக்குப் புரிவது கஷ்டம். ஆனால், அப்படிக் கரைத்துக் குடித்தால்தான், அடி முதல் புரிந்து, ஏழெட்டு வயதுப் பிள்ளைகள் மனதில் பதியும்படிக் கற்றுக் கொடுக்கவும் முடியும். ஆனால் உனக்கு இருக்கும் கொஞ்சூண்டு மூளைக்கு இது எட்டாது. பேசாமல் போய்க் கார்ட்டூன் படம் பார்ச் செல்லம்!” என்று கொஞ்சுவது போலப் பவதி குட்டு வைக்க, “எனக்கா கொஞ்சூண்டு மூளை? இரு இரு உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன்!” என்று கறுவினாள் தங்கை!

கடைசியில் வாசந்தி அவளுடைய சினேகிதிகளோடு போய்ச் சுற்றிவிட்டு வந்தாள். “நிறையப் பொடிப் பசங்கதான். தின்னவும் விளையாடவும் நிறைய இருந்தது. அந்தப் பொடிசுகளைக் குறி வைத்துதான் இந்த “மால்”காரர்கள் பணம் பண்ணுகிறார்கள் என்று தோன்றுகிறது.” என்றும் தெரிவித்தாள்.

ஆனால் இது பள்ளிப் பிள்ளைகளைப் பாதித்த விதம் பற்றிப் பவதிக்கு மறுநாள்தான் முழுதாகப் புரிந்தது.

அவள் வார விடுமுறையில் படித்து வரச் சொன்ன பாடம் பற்றிப் பிள்ளைகள் யாருக்கும் நினைவு இருந்ததாகவே தெரியவில்லை. ஒவ்வொருவராகக் கேட்கக் கேட்க படிக்கவில்லை., மறந்துவிட்டது, நினைவில்லை தெரியாது என்றே பதில்கள் வந்தன. முடிந்த அளவு தள்ளிப் போட்டுக் கடைசியாகக் கேட்டால் பிரேமிதாவும் படிக்கவில்லை என்றே பதில் சொன்னாள்.

என்ன செய்வது? ஓரிருவராவது படித்திருந்தால் அவர்களைப் பெரிதாகப் பாராட்டிப் பேசி மற்றவர்களின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டலாம். ஆனால் ஒருவருமே படிக்கவில்லை., ஆசிரியை சொன்னதை யாருமே மதிக்கவில்லை என்றால் அதைச் சும்மா விடுவது தவறாகும். முக்கியமாக இதை முன் மாதிரியாகக் கொண்டு, இது போல அடிக்கடி ஆசிரியை சொல்வதை அசட்டை செய்யும் தைரியம் இந்தப் பிள்ளைகளுக்கு வந்துவிடும்.

எனவே இந்தத் தப்புக்குத் தண்டனை கொடுத்தே ஆக வேண்டும் என்று பவதி எண்ணினாள்! யோசித்து, அவள் படிக்கச் சொன்ன

பாடத்தில் இருந்து ஒரு பகுதியை ஐந்து முறை இம்போசீஷன் எழுதி வரவேண்டும் என்று கடுமையான குரலில் கூறினாள். இரண்டே நாட்கள் அவகாசம் என்றாள். மொத்தமாகத் தண்டனை கொடுக்கும்போது பட்சபாதம் பார்ப்பதாகக் கூற முடியாது போகும்.

“மிஸ், ப்ளீஸ் வேண்டாம் மிஸ்!” என்று என்று எழுந்து நின்று கேட்ட சிலரை அவள் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

துரதிருஷ்டவசமாக, அப்படி நின்று கேட்ட சிலரில் பிரேமிதாவும் ஒருத்தி!

நல்லவேளையாக அடுத்த மணி நேரம் விளையாட்டு , உடல்பயிற்சிக்கு உரியதாக இருக்கவே ஸ்டாஃப் ரூமுக்குப் போய்ச் சற்று நேரம் அமைதியாக உட்கார்ந்திருக்க அவளால் முடிந்தது.

அங்கேயும் அதே பேச்சு. “பழைய காலம் போலப் பிரம்பை எடுத்து இரண்டு சாத்து சாத்தலாம் போல இருந்தது என்றாள் பாலா டீச்சர்.

பலரும் அதை ஆமோதிக்க, பவதி பேசாதிருந்தாள்.

“உனக்கு ஒப்புதல் இல்லை போலத் தெரிகிறது.” என்றாள் லக்ஷணா. “ஆனால் ஏதோ தண்டனை கொடுக்காவிட்டால் பயமே இல்லாமல் போய்விடும். அதனால் வகுப்பைச் சுற்றி ஓடச் சொன்னேன்.”

தான் அளித்த தண்டனையைச் சொல்லி, “இதில் அந்தப் பாடமும் மனதில் பதியும் அல்லவா?” என்றாள் பவதி.

“நல்ல ஐடியாதான். ஆனால், வேலையாட்களை எழுதச் சொல்லாமல் அவர்களே எழுதினால் சரி.” என்றாள் பாலா.

இரண்டு நாட்கள் ஆடிக் களித்ததாலோ என்னவோ, என்றும் இல்லாதபடி பவதி தண்டனை கொடுத்ததாலும் இருக்கலாம், தொடர்ந்த வகுப்புகள் டல்லடித்தன.

நத்தை கூட்டுக்குள் சுருட்டிக் கொள்வது போல, பிரேமிதாவின் முகம் பழையபடி வாடியிருப்பதைப் பவதி கண்டுகொள்ளாதது போல விட்டுவிட்டாள். தப்பு செய்தால் எல்லோரையும் போல இவளும் தண்டனையை ஏற்றுத்தானே ஆக வேண்டும்?

ஆனால் இவளது நிலைமை எல்லோரையும் போல இல்லையே என்ற எண்ணம் பவதியை உறுத்தத்தான் செய்தது. ஆனால் மற்றவர்களைப் போல மகிழ்ச்சியை அனுபவிக்கும்போது இதற்கு மட்டும் விதி விலக்கு அளிக்க முடியாது. கூடாது.

ஓரளவு பவதி எதிர்பார்த்தது போலவே, அன்றிரவில் ஜெகனின் கால் வந்தது.

தொழில் விஷயமாக வெளியூர் சென்றுவிட்டு வந்து பார்த்தால், அக்கா மகள் ஒரேயடியாக அழுதுகொண்டு இருக்கிறாளாம். “அப்பா மாதிரி, அம்மா மாதிரி மிஸ்சுக்கும் என்னைப் பிடிக்கவில்லை. யாருக்கும் என்னைப்பிடிக்காது.” என்று ஏங்கி ஏங்கி அழுகிறாளாம்.

யோசித்து வைத்திருந்தது போலவே பவதி பதில் சொன்னாள். “நீங்கள் அவளிடம் அன்பாகப் பேசிப் புரிய வைக்க வேண்டியதுதானே?” என்று கேட்டாள்.

“பாருங்கள் பவதி, என் தந்தை இங்கே இல்லாததால், அவ்வப்போது நான் வெளியூர்க் கிளைகளைப் போய்ப் பார்ப்பது கட்டாயமான ஒன்று. அதனால் என்னையும் அந்த . . அவளைப் பிடிக்காதவர்கள் பட்டியலில் அவ்வப்போது மித்தி சேர்த்துவிடுவாள். உங்களிடம் மட்டும்தான் அவளுக்கு நம்பிக்கை.” என்றான் அவன்.

“ஆனால் நான் அவளுடைய வகுப்பு ஆசிரியை, ஜெகன். அவளுக்காக நான் பாரபட்சம் காட்ட முடியாது. கொடுத்த பாடத்தைப் படிக்கவில்லை என்று வகுப்பில் எல்லோருக்கும் இதே தண்டனைதான். . .ஒன்று செய்யுங்கள், பிரேமிதா பக்கத்தில் இருந்தால் மொபைலை அவளிடம் கொடுங்கள்.” என்றாள் அவள்.

“மிஸ் . . “ எனும்போதே பிரேமிதாவின் குரல் விக்கியது. பவதியின் மனமும் உருகத் தொடங்கியது.

“என்னடாம்மா நீ? இப்படி அழுவார்களா? மிஸ் வீட்டுப் பாடம் கொடுத்தால் செய்ய வேண்டாமா? வகுப்பில் எல்லோருக்கும் இதோ போலத்தானே இம்போசீஷன் கொடுத்தேன்? உன் கூடப் படிக்கும் யாராவது இப்படி அசட்டுத்தனமாக அழுதார்களா? சொல்லு?” என்று வினவினாள்.

“இஇல்லை . .”

“அப்படியானால் நீ மட்டும்தான் அசடா? அப்படிக் கிடையாதே! எப்போதும் நீ ரொம்பப் புத்திசாலியாக இருப்பாயே, இப்போது மட்டும் என்னடா? யோசித்துப் பார், என்னதான் எனக்கு உன்னைப் பிடிக்கும் என்றாலும், வகுப்பு ஆசிரியையாக நான் ஒன்று சொன்னால் அதன்படி நீயும் நடக்க வேண்டாமா? நான் சொன்ன மாதிரி வீட்டுப் பாடத்தை நீ கெட்டிக்காரியாகப் படித்துக் காட்டினால்தானே, எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்? நீ மட்டும் படித்து வந்திருந்தால் மற்ற எல்லோரையும் உனக்குக் கைதட்ட வைத்திருப்பேனே! எனக்கும் சந்தோஷமாக இருந்திருக்கும். அதை விட்டுச் சும்மா அழுதால் படிப்பு வந்துவிடுமா? சொல்லுடா செல்லம்?” என்று சின்னவளுக்கு ஏற்றவாறு குரலில் கனிவும் கண்டிப்புமாக பவதி பேசினாள்

“நாநான் நன்றாகப் படித்தால் உங்களுக்குப் பிடிக்குமா மிஸ்?”

“கட்டாயமாய்! காட் ப்ராமிசாக!”

“அப்படின்னா இனிமேல் படிக்கிறேன் மிஸ்!”

“குட். வந்து . . சரி வைத்து விடும்மா.” என்று பேச்சை முடித்தாள் பவதி.

அன்று நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. இன்றும் அக்கா மகள் அழுகிறாள் என்றுதானே பேசினான்? அப்போதையப் பிரச்சினையைத் தீர்த்தாயிற்று. அப்புறம் அந்த ஜெகனிடம் ஏன் பேசுவது?

ஆனால் அடுத்த வினாடியே அவளது மொபைல் ஒலியெழுப்பியது.

எடுத்துப் பார்த்தால், அதே ஜெகன்தான். நன்றி சொல்லக் கூப்பிட்டிருந்தான்.

“உங்களிடம் ஏதோ மாயம் இருக்கிறது பவதி. மந்திரம் போட்டாற்போல மித்தியின் அழுகை நின்றுவிட்டது. ரொம்ப தாங்க்ஸ்!” என்றான் அவன்.

வேலை முடிந்தது என்று விட்டுவிடாமல் கூப்பிட்டு நன்றி சொல்கிறானே. ஏனோ இதமாக இருந்தது பவதிக்கு.

ஆனால் என்ன பதில் சொல்வது என்று ஒரு கணம் திகைத்துவிட்டு, “அவளுக்குத் தேவை அன்பு மட்டும்தான். அது இருக்கிறது என்று காட்டினாலே போதும். குட்நைட்.” என்று முறுவலோடு முடித்தாள்.

அடுத்த வாரம் முழுவதும் பிரேமிதா நன்றாகவே இருந்தாள் எனலாம். குறிப்பெடுப்பது, கேள்விகளுக்குப் பதில் தருவது, வீட்டுப்பாடம் கட்டாயமாகச் செய்வது என்று எல்லாம் செய்தாள்.

ஆனால் சாண் ஏறி முழம் சறுக்குவது என்று பழைய அளவைக்கொண்டு சொல்வார்களே அதுபோலக் கொஞ்சம் முன்னேறுவது போலத் தோன்றிய பிரேமிதாவின் நிலை பலமடங்கு பின்னே போய்விட்டது.

முன் வரிசைகளில் பிரேமிதாவைக் காணோமே என்று பார்த்தால், கடைசி வரிசையில், அதுவும் மூலை இடத்தில் அவள் அமர்ந்திருந்தாள்.

கண்கள் முகம் எல்லாமே சிவந்து வீங்கிப் போயிருந்தன.

உடன் பயிலும் பிள்ளைகளே அவளைப் பரிதாபமாகவும் ஆச்சரியமாகவும் பார்த்தார்கள்.

“மிஸ், பிரேமிதா அழுதிட்டே இருக்கிறாள்!” என்றன சில வாண்டுகள் கோரசாக.

அவர்கள் சொன்னதே சரியாகச் சிறுமியின் கண்களில் இருந்து நீர் வடிந்துகொண்டே இருந்தது. என்னவாக இருக்கும்?

“சரி சரி. அவளுக்கு என்ன என்று நான் பார்க்கிறேன். நீங்கள் எல்லோரும் கணக்கு நோட்டையும் புத்தகத்தையும் எடுத்து, நேற்றுக் கற்றுக் கொடுத்ததில் ஐந்தாவது கணக்கைச் செய்யுங்கள்.” என்று மற்றவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களது கவனத்தைப் பாடத்தில் திருப்பினாள்.

கைப்பையில் இருந்த வெட் டிஷ்யூ ஒன்றை எடுத்துக்கொண்டு பிரேமிதாவிடம் சென்றாள். ஈர டிஷ்யூவால் அவளது கண்களையும் முகத்தையும் துடைத்து விட்டாள்.

“ஷ் பிரேமிதா, வகுப்பில் இப்படி அழுவார்களா? உடம்பு ஏதும் சரியில்லையா?” என்று தொட்டுப் பார்த்தாள்.

கதகதவென்றுதான் இருந்தது. ஆனால் அது அழுததால் கூட இருக்கலாம்.

அதற்குள் பாடத்தை விட்டுவிட்டு வாய் பார்த்த சிறுவன் ஒருவன், “பிரேமிதாவுக்குக் காய்ச்சலா மிஸ்?” என்று கேட்டான்.

மற்றவர்களின் கவனமும் இங்கே திரும்புவதைக் கண்டு, “இல்லை. தலையை வலிக்கிறது போல. பேசாமல் டெஸ்க் மேல் சாய்ந்து படுத்திருந்தால் சரியாகிப் போய்விடும். நீங்கள் எல்லோரும் கணக்கை முடியுங்கள்.” என்று கண்டிப்பான குரலில் பவதி கூறவும் எல்லோரும் முன்னே திரும்பினர்.

ஈர டிஷ்யூவால் துடைத்து விட்டதாலோ என்னவோ பிரேமிதாவின் கண்ணீர் வெகுவாகக் குறைந்திருந்தது.

பதினோரு மணிக்கு முதல் உணவு இடைவேளையின்போது எல்லோரும் சாப்பிடச் சென்றதும், சோர்ந்து கிடந்த பிரேமிதாவின் அருகே சென்று பார்த்தால், அவள் அப்படியே உறங்கி இருந்தாள். ஆனால் தூக்கத்திலும் விசிப்பு!

பொறுக்க மாட்டாமல், ஜெகன் கொடுத்த தனிப்பட்ட மொபைல் எண்ணில் அவனைக் கூப்பிட்டாள்.

சொன்னது போலவே, உடனே எடுத்து என்னவென்று விசாரித்தான் அவன்.

பிரேமிதாவின் நிலை பற்றி அவள் தெரிவிக்கவும், என்னவாக இருக்கும் என்று அவனும் திகைத்தான். “நான் வெளியூரில் இருக்கிறேன். விரைவிலே வந்து விடுவேன். வந்ததும் என்னவென்று

விசாரிக்கிறேன்.” என்றான் ஜெகன்.

அன்று மாலையில் அவள் வீடு வரும்போது, வீட்டை விட்டுச் சற்று தூரத்தில் நிறுத்தியிருந்த காரில் உட்கார்ந்து, அவளுக்காகக் காத்திருந்தான் அவன்.

# அத்தியாயம் -5

பெரிய சாலையில் பஸ்சிலிருந்து இறங்கி அடுத்திருந்த தெருவுக்குள் சென்றால் சற்று தூரத்தில் பவதியின் வீடு வரும்.

வழக்கம்போல தெருவுக்குள் புகுந்து நடந்தால், மூன்று வீடுகள் முன்னால் நின்றிருந்த கார் பவதிக்குப் பரிச்சயமாகத் தெரிந்தது.

யோசித்தபடியே நடந்தால், காரிலிருந்து ஜெகன் இறங்கி அவளை நோக்கி வந்தான்.

அவள் ஆச்சரியமாகப் பார்க்கவும், "உங்கள் குடும்பத்தாருக்கு எங்கள் வீட்டு நிலவரம் தெரியுமா?" என்று வினவினான்.

"ம்." என்றாள் அவள் படு சுருக்கமாக.

"தப்பாக எண்ணிக் கேட்கவில்லை. அடுத்தடுத்து இரண்டு நாட்கள் மித்தி உங்கள் வீட்டுக்கு வந்ததே நிறையப் புரிய வைத்திருக்கும். அதன் விளக்கத்தை நீங்கள் வீட்டாரிடம் சொன்னால் பிழை கிடையாது என்பதோடு, ஓரளவேனும் சொல்லித்தான் ஆக வேண்டும் அல்லவா? அதனால், அப்படிச் சொல்லியிருந்தால் வீட்டுக்குப் போயே பேசலாமே என்றுதான் கேட்டேன். இப்படித் தெருவில் உங்களை நிறுத்திப் பேசுவதும் அவ்வளவு சரியல்ல." என்றான் அவன்.

"வாருங்கள்." என்று பவதி முன்னே நடந்தாள்.

சும்மா ஒரு மரத்தடியில்தான் கார் நின்றது. எனவே அதை அப்படியே ரிமோட் லாக் செய்துவிட்டு அவனும் கூட நடந்தான்.

நடக்கும்போதே ஜெகன் சொன்னான். "அக்கா கருவுற்றிருக்கிறாள். சும்மாவே நினைத்து நினைத்து அழுதவள். இப்போது பயங்கரமாக அடிபட்டுப் போன மாதிரி ஆகிவிட்டாள். அவள் ஒரேயடியாக அழ, அவளைப் பார்த்து மித்தியும் ஒரே கண்ணீர்! இதெல்லாம் முடியவே முடியாதோ என்பது போல இருக்கிறது!" என்றான் ஒரு பெருமூச்சுடன்.

இதற்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும். எல்லாம் சரியாகிப் போகும் என்பன வெறும் வெற்று வார்த்தைகளே.

பேசாமல் அவளது சாவியைக் கொண்டு கதவைத் திறந்து, "உள்ளே வாருங்கள்." என்று அழைத்தாள்.

எட்டிப் பார்த்த பத்மாசனி, ஜெகனைக் கண்டதும் "வாருங்கள் தம்பி. உள்ளே வந்து உட்காருங்கள். பவி ஃபேனைப் போடு!" என்றுவிட்டு அவசரமாக உள்ளே சென்றாள்.

மகளுக்கும் விருந்தாளிக்குமாக காஃபி கொண்டு வந்து வைத்தாள்.

நகாசுப் பேச்சு எதுவும் இல்லாமல் அன்று உண்டது போலவே, ஜெகன் இந்தக் காஃபியையும் எடுத்துக் குடித்தான்.

ஆறுதலாக இரண்டு மிடறு அருந்திய பிறகு லோசக முறுவலித்து "இந்தக் காஃபி குடிக்கவே உங்கள் வீட்டுக்குத் தினமும் வரலாம், ஆன்ட்டி." என்றுவிட்டு மீதியையும் ரசித்துக் குடித்தான்.

பிறகு, "மற்ற இருவரையும் காணவில்லையே!" என்று சற்று இறுக்கம் தளர்ந்து பத்மாசனியிடம் விசாரித்தான்.

"வேலையில் இருந்து "வாலன்டரி ரிட்டயர்மென்ட்" வாங்கிக்கொண்டு வெளியே வந்துவிட்டாலும், மன்றம், கிளப், ஊரார் ஒருங்கிணைப்பு என்று அங்கிள் நிறைய வேலை வைத்திருப்பார். வசு பிஜி படிக்கிறாள் அல்லவா? பேராசிரியர்கள் வருவதைப் பொறுத்துதான் வகுப்பு நடப்பதும் முடிவதும். இன்று ஆறு மணிக்கு மேலே ஆகும் என்றாள்." என்றாள் பெரியவள்.

கூடவே பிரேமிதா பற்றி அவளும் விசாரித்தாள். "நல்ல கெட்டிக்காரப் பெண். இனிமையாகப் பழகுகிறாள். எல்லோருடனும் பொருந்திக் கொள்கிறாள்." என்றாள்.

"ஆமாம் ஆன்ட்டி. முன்னெல்லாம் அவளைப் பற்றி எல்லோருக்கும் ஒரே பெருமையாக இருக்கும். எப்போதும் சிரித்துக்கொண்டே இருப்பாள். . .ஆனால், இப்போது வீட்டில் ரொம்பவும் சஞ்சலமாக இருக்கிறது. பவதியின் பெயர் ஒன்றுதான் அவளை அமைதிப்படுத்துகிறது.

"ஆனால் அவளை விட அக்கா மோசமாக இருக்கிறாள். அத்தான் செய்த பிசகு எல்லார் மேலும் குற்றம் காணச் செய்கிறது. அம்மாவிடம்கூட . ..அந்த விஷயம் என்னவென்றால் . . ." என்று தொடங்கியவன் நிறுத்தி, "எங்கள் வீட்டுக் கஷ்டத்தைச் சொல்லிப் போரடிக்கிறேன். சாரி ஆன்ட்டி?" என்று கேட்டான்.

சட்டென விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள் பவதி.

பார்வையை உணர்ந்து முகத்தில் புன்னகையில் சாயல் ஒன்று படர, "என்ன? "சாரி" இடம் மாறி விட்டதோ?" என்று கேட்டான் அவன்.

முறுவலை அடக்கி, "அதில் ஒன்றும் எனக்கு வருத்தமில்லை. ஆனால் பிரச்சினையை வீட்டில் பேசலாம் என்று என்னோடு வந்துவிட்டு, இப்போது சொல்லாதிருக்க வழி தேடுவது போ . .லத் தோன்றுகிறது." என்றாள் பவதி.

“அப்படியில்லை. பீலி பெய் சாகாடும் என்று தொடங்கும் குறள் ஒன்று இருக்கிறது. அதையே “ஒட்டகத் துரும்பு” என்றும் சொல்வார்கள். மித்திக்கு சூப்பர்மேன் போல வீர சூர மாமாவாக இருக்க வேண்டியிருக்கிறது. அக்காவுக்குச் சாய்ந்து கொள்ளும் தூணாக இருக்க வேண்டும். அல்லது அவள் உடைந்து போவாள். நான்? அடைத்து அடைத்து எனக்கும் அதே நிலைதான். மூச்சு முட்டுகிறது. வேறே யாரிடமும் சொல்ல முடியாது. அதனால் . . “

அவனை நேரே பார்த்துவிட்டுச் “மேலே சொல்லுங்கள்.” என்று மட்டும் பவதி கூறினாள்.

ஜெகனுக்கும் அதுதான் தேவையாக இருந்தது போலும். கொட்டித் தீர்த்துவிட்டான்.

“முதலில் இதைத் தெரிந்துகொள் பவதி. என் அப்பா வழிப் பாட்டி இருந்த வரையில் தன் வகை உறவினர் வீடுகளுக்கு என் அம்மா சென்றதே இல்லை எனலாம். பாட்டிக்குப் பிடிக்காததைச் செய்தால் பெரிதாகப் பிரச்சினை கிளப்புவார்கள். சரி போகட்டும், பெரியவர்கள் என்று அம்மாவும் விட்டுக் கொடுத்தே இருந்து விட்டார்கள். வசதி இருந்தும் பழைய வீட்டை மாற்றவே விட்டதில்லை. இந்த வீட்டைக் கூட க் கட்டிய பிறகும் ஓர் ஆண்டு காலம் சும்மாதான் போட்டு வைத்திருந்தோம். ஆறு மாதம் முன்பு பாட்டி இறந்து போனார்கள். அப்போதும் உடனே இங்கே குடிவர அம்மா விரும்பவில்லை. இப்போது இரண்டு மாதம் முன்புதான் இந்த வீட்டுக்கே பால் காய்ச்சிக் குடி வந்தோம். ரொம்ப நாளாக . .நாளில்லை, பல ஆண்டுகளாக அம்மாவுக்கு வெளி நாடுகளைச் சுற்றிப் பார்க்க ஆசை. அப்பாவுக்கும்தான். அங்கங்கே அம்மா வழி உறவினர் இருப்பதால் அப்படியே அவர்களையும் பார்க்கலாமே என்.று ஆசை. ஆனால் பாட்டி போக விட்டதில்லை. இப்போதுதான் இரண்டு பேரும் பெரிதாகத் திட்டம் போட்டு, இரண்டு மாத உலகப் பயணம் போனார்கள். சரியாகச் சொல்வதானால் அப்பா அம்மா வெளிநாட்டுப் பயணத்தைத் திட்டம் போட்டதே அக்காதான். இனியாவது உங்களுக்காக வாழுங்கள் அம்மா என்று ஊக்கம் கொடுத்து அனுப்பியவள் அவளேதான்.

“அப்போதும் அக்காவின் பயிற்சிப் படிப்பு முடிந்து அவள் திரும்பி வரும்வரை பிரேமிதாவுக்காக இங்கேயே இருந்துவிட்டு, அக்கா வந்த பிறகே அம்மா அப்பா கிளம்பிப் போனார்கள். உலகச் சுற்றுப் பயணம். பாதிக்கு மேல் முடிந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நாள். அமெரிக்காவில் எங்கள் சித்தி புது வீடு கட்டி இருக்கிறார்கள். நீ மட்டும் எங்கும் வந்ததே இல்லை. ஃப்ரான்சில் தம்பி வீட்டுக்குப் போனாயே, இப்போது என் வீட்டையும் பார்த்துவிட்டுப் போ என்று சித்தி அழைத்ததால் அம்மா அங்கேயும் போய்விட்டு வருவதாக

இருக்கிறார்கள்.

“வந்தது வந்தேன். அவள் வீட்டுக்கும் போய்விட்டு வந்து விடுகிறேன், இன்னொரு தரம் மூட்டை கட்டிக் கிளம்புவது கஷ்டம் என்று அம்மா சொல்கிறார்கள்.

“அதுவும் சரியே. அம்மா, அப்பாவின் நெடுநாள் ஆசை புரிந்து அக்காவும் நானும் சேர்ந்துதானே அவர்களை அனுப்பி வைத்தோம்? பிறகுதானே மாறியது எல்லாம்!

“ஆனால் இப்போது  அக்காவின் மனம் இருக்கும் நிலையில், உடனே கிளம்பி அம்மா ஏன் திரும்பி வரவில்லை? எப்படி வராமல் இருக்கலாம் என்று என்னிடமே கேட்கிறாள். அம்மாவுக்கும் தன்னைப் பிடிக்கவில்லை என்று ஆத்திரப் படுகிறாள்.

“அங்கே வந்தாலும் நான் சொல்லித் தாயம்மாதானே செய்யப் போகிறாள். நான் திரும்பி வரும்வரை, அதை இங்கிருந்து சொல்லியே செய்ய வைக்கிறேன் என்று அம்மா சொன்னால் அந்த லாஜிக்கை அக்கா ஒத்துக்கொள்ள மறுக்கிறாள்.

“அக்காவுக்குப் புரிய வைக்கும்படி அந்தப் பக்கம் அம்மா. அம்மா தன்னை வெறுத்து விட்டதாக இந்தப் பக்கம் அக்கா. இவர்களே இப்படி இருக்கும்போது, எட்டே வயதுக் குழந்தை, மித்தியை என்ன சொல்வது?

“இன்னொரு குழந்தைக்கு முன்பே நாலைந்து ஆண்டுகள் முயற்சித்தார்கள். கடைசியில் அது உருவாகி இருக்கும் நேரத்தைப் பாருங்கள், ஆன்ட்டி!

“ அக்காவிடம் எவ்வளவோ பிரியமாக இருந்தார் அத்தான். இப்போது . . . நடந்ததை நம்புவது எனக்கே கடினமாக இருக்கும்போது அக்காவுக்குப் பைத்தியம் பிடிக்காததே அதிசயம். சில சமயம் சுய புத்தியில் பேசுகிற மாதிரியே தெரியவும் இல்லை. இப்படி நிலையில் உயிரோடு இருக்கக் கூடாது அது இது என்று நேற்றிரவு குமுறியிருக்கிறாள்! அரைகுறையாக அதைக் கேட்டுவிட்டுத்தான் மித்தி ஒரேயடியாக அழுதது . . இன்றையப் பிரச்சினையும் அதுதான்!” என்றான் பவதியிடம்.

“இதற்கும் மேலே நான் தொழிலையும் விட முடியாது! சமயத்தில் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருக்கிறது.” என்று செய்கை அறியாத தவிப்புடன் ஜெகன் முடித்தான்.

இதுவும் ஒருநாள் கடந்து போகும்தான். ஆனால் அதை இப்போது சொல்வது அர்த்தமற்றது. கொடுமையும் கூட. என்றோ ஒரு நாள் சரியாகும் என்பது, இன்றைய வலிக்கு எப்படி ஆறுதல் அளிக்கும்?

சிறு மௌனத்தின் பின், “நீங்கள் உங்கள் அக்காவை எங்கேனும் வெளியே கூட்டிப் போங்களேன். ஒரு மாறுதலாக இருக்கும்.” என்றாள் பவதி மெதுவாக.

“நானும் நினைத்தேன். ஆனால் அவளுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. எதைச் சொன்னாலும் காது கொடுத்துக் கேட்பதே இல்லை. ம்ம், மறந்துவிட்டேனே, இன்றைக்கு வகுப்பில் நீங்கள் மித்தியின் முகத்தை ஈர டிஷ்யூவால் துடைத்து, அவளைத் தடவி விட்டீர்களாம். சுகமாக இருந்ததாம். “அப்பறம் நான் அழவே இல்லை மாமா” என்றாள் குழந்தை. ரொம்ப நன்றி! வந்து . . . “சாரி” போலவே நன்றியும் ஆகிவிட்டது போல! “ என்று சற்று முறுவலித்தான் அவன். “ஒரே தொடர்கதை!”

உண்மையான ஆறுதலாக எதையும் சொல்ல முடியாததாலோ என்னவோ, “சாப்பிடுகிறீர்ளா?” என்று பத்மாசனியும் வேறு கேட்டாள்.

“இல்லை ஆன்ட்டி, நான் போக வேண்டும்.”

அவன் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, மகளின் காதுகளில் எதையோ பெரியவள் கிசுகிசுத்தாள்.

உணவு பற்றித்தான் இருக்கும் என்று எண்ணி “இல்லை ஆன்ட்டி. நிஜமாக ஒன்றும் வேண்டாம். மித்தி அழுதது பற்றிப் பவதியிடம் விவரம் சொல்ல மட்டுமே வந்தேன். நான் கிளம்புகிறேன். “ என்று மறுத்தவாறே ஜெகன் எழுந்தான்.

“அதில்லை ஜெகன்.” என்றாள் பவதி. தொடர்ந்து, “இது உங்கள் அக்கா விஷயம். வந்து . . . இந்த மாதிரி சமயங்களில் மற்றவர் கைப் பக்குவம் பிடிக்குமாம். ஏதாவது செய்து தந்தால் உங்கள் அக்கா சாப்பிடுவார்களா என்று அம்மா கேட்கிறார்கள்.” என்று விளக்கினாள்.

“சாப்பிவாளாமா? அன்று உங்கள் இட்டிலியில் கடைசியைச் சட்டினிப் பாத்திரத்திலேயே போட்டு வழித்துச் சாப்பிட்டாள்! நான் கூட வழிக்கிற வேகத்தில் பாத்திரத்தை ஓட்டை விழப் பண்ணிவிடாதே என்றேன்.” என்று லேசாகத் தோளைக் குலுக்கினான். அவன்.

“உங்கள் வீட்டில் சைவமா, அசைவமா?” என்று பத்மாசனி விசாரித்தாள்.

“அதெல்லாம் கஷ்டப்படாதீர்கள் ஆன்ட்டி.” என்றுவிட்டு ஜெகன் கிளம்பிச் சென்றான்.

“சைவமா அசைவமா என்று ஜெகன் சொல்லவில்லையே!” என்று பத்மாசனி கொஞ்சம் கவலைப்பட, “அசைவம்தான் அம்மா.

பள்ளியில் பிரேமிதா அசைவம் உண்பவர்களோடு சேர்ந்து அமர்ந்துதான் சாப்பிடுவாள்.” என்றாள் பவதி.

அன்று தங்கையிடம் ஜெகன் வந்து போனது பற்றி பவதி கூறினாள். “எதுவுமே வெளியே பார்ப்பது போல இல்லை, வசு. அன்று நாம் பேசினோமே, மகளின் வாழ்வில் இவ்வளவு பெரிய பிரச்சினை இருக்கும்போது தாய் தகப்பனார் வெளி நாட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறார்களே என்றெல்லாம் ஏதோ சொன்னோமே, பார்த்தால் அவர்களையும் குற்றம் சொல்ல முடியாது போலத் தோன்றுகிறது. . . “ என்று தொடங்கி எல்லாம் சொன்னாள்.

“பார், பிரேமிதாவுக்கே எட்டு வயதாகிறது. எப்படியும் அவளுடைய தாயாருக்கு இருபத்தெட்டாவது இருக்கும். இருக்கும். கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் மாமியாரின் ஆதிக்கத்துக்குப் பணிந்து அடங்கிக் கிடந்தவர்கள், முதல் முறையாக ஓர் ஆசையை நிறைவெற்றிக் கொள்வதை எப்படித் தப்புச் சொல்ல முடியும்? அதுவும் பல மாதங்களாகத் திட்டமிட்டுப் போனதை இடையிலே விட்டுவிட்டு வருவது கடினம்தானே? எப்படியும் தினம் பேசுகிறார்கள். மகளின் தேவைகளைக் கவனிக்கிறார்கள். எல்லாம் ஜெகன் சொல்லச் சொல்ல எனக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது வசு. “ என்று முடித்தாள்.

“ஆமாம் வாசும்மா. எனக்கும் அப்படித்தான் இருந்தது. அவ்வளவு தூரத்தில் இருந்துகொண்டு, சமையல்காரியிடம் சொல்லி மகளுக்குச் செய்து கொடுப்பது என்றால் எவ்வளவு தவிப்பாக இருக்கும்! சமையல்காரம்மா சரியாகச் செய்தாளா இல்லையா என்று சுவை பார்க்கக் கூட முடியாதே! அதனால்தான் கொஞ்சம் மீன் குழம்பு செய்து அனுப்பலாம் என்று நினைத்தேன். “ என்றாள் பத்மாசனி.

வாசந்தி தீவிரமாக யோசித்தாள்.

“என்னடி அவ்வளவு யோசனை? பதிலையே காணோம்?”

“அதாவது, ஜெகன் சார் வந்தது, பிரேமிதாவின் அழுகைக்கான காரணத்தை அக்காவுக்குச் சொல்ல. ஆனால், சம்பந்தமே இல்லாமல் தன்னுடைய அம்மா, அப்பாவை அல்லவா அவர் நியாயப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார்! ஏன் என்று தோன்றியது!” என்றாள் அவள்.

“அம்மா, இவளை சைக்காலஜி படிக்க விட்டதே தப்பு. ஒருவர் நம்மை நம்பி கூச்சத்தை விட்டு அவரது வீட்டு நிலைமை பற்றி எடுத்துச் சொன்னால் அதில் கோணலாக எதையோ பார்க்கிறாளே! “ என்று குறைப் பட்டாள் பவதி.

“சரியாகச் சொன்னாய்!” என்றாள் அன்னை.

இரண்டு நாட்கள் கழித்து, பவதி பவதி ஜெகனுக்கு ஃபோன்

செய்தாள்.

“அம்மா மீன் குழம்பு செய்திருக்கிறார்கள். டிரைவரை அனுப்பி வாங்கிக் கொள்கிறீர்களா?” என்று வினவினாள்.

பார்த்தால் பிரேமிதாவைக் கூட்டிக்கொண்டு அவனே காரை ஓட்டி வந்தான்.

“வாருங்கள் தம்பி.” என்று வாய் நிறைய வரவேற்று, காஃபி கொணர்ந்து கொடுத்தாள் பத்மாசனி.

பிரேமிதா சந்தோஷமாக வீட்டில் சுற்றி வந்தாள்.

அன்று வீட்டில் இருந்த சிவகுரு, மற்றும் அவருடைய மகள்களோடு ஜெகன் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்க, பத்மாசனி ஓர் அடுக்குப் பாத்திரத்தைக் கவனத்துடன் தூக்கி  வந்து வைத்தாள்.

“என்ன ஆன்ட்டி, நிறையத் தந்துவிட்டீர்கள் போல இருக்கிறதே!” என்றான் அவன்.

“கூட ஒருநாள் வைத்துச் சாப்பிடுங்கள், தம்பி. செய்த மறுநாள் மீன் குழம்பு அதிக ருசியாக இருக்கும். “நேற்று வைத்த மீன் குழம்பு” என்று பாட்டே இருக்கிறதே! மீன் புட்டும் கொஞ்சம் வைத்திருக்கிறேன். அதை மட்டும் இன்றே காலி பண்ணி விடுங்கள்.” என்று இயல்பாக எடுத்துச் சொன்னாள் பத்மாசனி.

“அம்மா, கேவலப்படுத்தாதீர்கள். அவர்கள் மதியம் வைத்ததையே இரவு உண்ண மாட்டார்கள்.” என்று தாயின் காதுக்குள் சீறினாள் வாசந்தி.

அவன் சென்ற பிறகு, “எனக்கும் வசு போலத்தான் தோன்றுகிறது அம்மா. குறைந்த பட்சமாக, அந்தப் பழைய மீன் குழம்பு பாட்டையாவது குறிப்பிடாமல் விட்டிருக்கலாம்.” என்று பவதியும் சற்றுக் குறைப்பட்டாள்.

“என்னடி நீங்கள்? இந்த மீன் குழம்பு செய்தாலே, மறு நாளைக்கும் சேர்த்து அதிகம் செய்யுங்கள் என்பீர்கள். சுண்ட வைத்துச் சுண்ட வைத்துக் கடைசிச் சொட்டு வரை வழித்து உண்பீர்கள். ஒரு பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணுக்கு வாய்க்கு ருசியாக அப்படிக் கொடுக்கச் சொன்னால் என்னவோ பெரிதாக கௌரவம் குலைந்து குட்டிச் சுவராகிவிட்ட மாதிரிக் குதிக்கிறீர்களே! “ என்று தாய் கேட்க பதில் சொல்ல முடியாமல் பவதி மௌனமானாள்.

சுவை பற்றித் தாயார் சொன்னதில் தப்பென்ன? கிடையவே கிடையாது! ஆனாலும் . . .

“விடுக்கா. இந்த அம்மாவுக்கு இது பற்றிச் சொன்னாலும் புரியாது. அம்மாவின் குழம்பு ருசியில் அந்த வீட்டு பந்தா மறந்துவிடும்

என்று நம்புவோமாக!” என்று தமக்கைக்குத் தேறுதல் கூறினாள் தங்கை!

“குழம்பு செம டேஸ்ட். அக்கா நன்றாகச்சாப்பிட்டாள்.” என்று நன்றி உரைத்ததற்குப் பிறகு சில தினங்கள் சத்தமே இல்லாதிருந்தது.

அதன் பின் ஒரு நாள் மாலையில் ஜெகன் பவதியிடம் பேசினான்.

“பவதி, இது கொஞ்சம் அதிகப்படியாக மூக்கை நுழைப்பது போல உங்கள் எல்லோருக்கும் தோன்றுமோ என்று இருக்கிறது . .. கட்டாயம் இது அப்படியேதான் . . .”

“பிரேமிதா இங்கே வரவேண்டும் என்றாளா?”

“இல்லை. அப்படிச் சொன்னது அவளுடைய அம்மா! மித்திக்கோ பேரானந்தம்!”

“என்னது?! அதாவது, உங்கள் அக்கா . .. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்கிறீர்கள்?”என்று அவன் சொன்னது சரிவரப் புரியாமல் பவதி வினவினாள்.

தொண்டையைச் செறுமிக்கொண்டான் ஜெகன். “பவதி, ப்ளீஸ், என் அக்கா மதுவின் மனநிலை பற்றி உன்னிடம் சொன்னேனல்லவா? நீயும் அவளை வெளியே கூட்டிப் போகச் சொன்னாயே! இப்போது என் அக்கா ஒரு நாள் உங்கள் வீட்டுக்கு வரலாமா என்று கேட்கிறாள். அங்கே வந்து அன்று பிரேமிதா மாதிரி வெகு நேரம் இருக்கலாமா . . என்றும் கேட்கிறாள்.” என்றான் அவன்.

ஒரு கணம் திகைத்தாலும் “தாராளமாக வாருங்கள்.” என்றது பவதியின் வாய்.

சொன்னதுமே அவளுக்குப் பல பெரிய வீடுகளின் வெளித் தோற்றங்கள். மனக் கண் முன் பவனி வரலாயின. ஆனால் அவளாக அழைக்கவில்லையே! அவர்களாகத்தானே?

தலையை உலுக்கி விட்டுக்கொண்டு அவள் பேசினாள். “ஆனால், ஆனால் இது உஉங்கள் வீடு மாதிரி இராதே” என்றாள் உணர்ச்சி மரத்த குரலில்.

“அது ஒன்றும் பிரச்சினை இல்லை பவதி. கொல்வது தனிமைதான். அக்காவுக்குத் தனியே இருந்து யோசித்து யோசித்து ரொம்பத் தவிப்பாக இருக்கிறதாம். எதையும் மறக்க மாட்டாமல் ஏதேதோ நினைவு வந்துகொண்டே இருக்கிறதாம். அதனால், முதலில் இந்த வீட்டிலிருந்து எங்காவது செல்ல வேண்டுமாம். ஆனால் “மால்”, கண்காட்சி, சினிமா மாதிரிப் போகப் பிடிக்கவில்லையாம். அவளுடைய பழைய சினேகிதிகள், உறவினர் யாரையுமே பார்க்கப்

பிரியம் இல்லையாம். மித்தி மாதிரி என்னையும் அங்கேயே கூட்டிப் போகிறாயா என்று கேட்கிறாள். உங்கள் வீட்டினரை ரொம்பத் தொல்லை செய்கிறோம். ஆனால் . . . “

“இதில் தொல்லை என்ன? முழுக்க வித்தியாசமான சூழ்நிலையில் பழைய துன்பங்களை அவர்களது மனம் மறக்கக் கூடும். கூட்டி வாருங்கள்.” என்றாள் பவதி.

“ஆனால் உன் வீட்டினருக்கு? உங்கள் வீட்டில் மகள்களுக்கு நிறைய உரிமை உண்டு என்று எனக்குத் தெரியும். பார்த்திருக்கிறேன். ஆனால் நீ மற்றவர் . . பெரியவர்களிடம் அனுமதி ஒன்றும் கேட்கவில்லையே!.” என்றான் ஜெகன்.

“எந்த உரிமையையும் நாங்கள் தப்பாகப் பயன்படுத்த மாட்டோம் என்கிற நம்பிக்கை எங்கள் பெற்றோருக்கு உண்டு. அவர்களிடம் நான் இரவு சொல்லிக் கொள்வேன். நீங்கள் அக்காவை . .பிரேமிதாவையும் கூட்டி வரவீர்கள்தானே?”

“ஐய்யோ, அவளை விட்டுவிட்டால் வீட்டையே இரண்டாக்கி விட மாட்டாளா? மறுபடியும் இந்த வீட்டுக்குள் நாங்கள் நுழையவே முடியாதும்மா!” என்று ஜெகன் பயந்தவன் போலக் கூற அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அவனும் சிரித்துவிட்டு “அக்காவும் மித்தியும் மட்டும்தான் அங்கேயே இருப்பார்கள். எனக்கு வெளியே வேலை இருப்பதால் அவர்களை விட்டுவிட்டு நான் கிளம்பி விடுவேன். மாலையில் அவர்களை அழைத்து வர ஏற்பாடு செய்துவிடுகிறேன். அத்தோடு ரொம்பத் தாங்க்ஸ், பவதி!” என்றான் ஜெகன் குரலிலும் நன்றியோடு.

அவன் குரலில் இருந்த நகையொலி, பவதிக்கு மகிழ்ச்சியூட்டியது.

கூடவே நீ என்றும், நீங்கள் என்றும் அவன் குழப்பியடிப்பதும் அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

இரவில் வீட்டினரிடம் விஷயத்தைச் சொன்னபோது எல்லோருக்குமே ஆச்சரியம்தான். ஆனால் ஒருவரேனும், “அதெப்படி வரலாம்” என்று எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை.

“பாவம். குடும்பத்தில் பெரிய பிரச்சினை. ஆறுதல் கூறப் பெற்றவர்கள் கூடப் பக்கத்தில் இல்லை. ஏதோ நம் வீட்டில் அந்தக் கவலை மறந்து இருக்க முடிந்தால், சந்தோஷமாக வரட்டும்.” என்று பத்மாசனி கூற, மற்ற இருவரும் அதை ஆமோதித்தனர்.

“காலைப் பலகாரம் பற்றிக் கூடக் கவலை இல்லை. உங்களுக்கு ஏற்கனவே இருக்கிறது. வருகிறவர்களுக்குத் தோசை சுட்டுக் கொடுத்து விடலாம்.” என்று தொடர்ந்து அன்னை கூறியபோது

அக்காவும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலும் இருவருமே வாய் திறக்கவில்லை!

படுக்கும்போதே பவதிக்கு ஏதேதோ நினைவு வந்தது.

எனவே காலையிலேயே எழுந்து குளித்துவிட்டுப் பார்க்கப் பளிச்சென்று இருந்தாள்.

காலைக் காஃபிக்காக வந்த வாசந்திக்கு ஒரே ஆச்சரியம்! “என்னக்கா, அதற்குள் குளித்தே விட்டாயா? இன்று விடுமுறை நாள் என்பது மறந்துவிட்டதா? மழை பெய்யும் என்று வானிலை அறிக்கையில் ஏதும் சொன்னார்களா?” என்று வெகுவாக வியந்தாள்.

“ஏய், பெரிதாக அலட்டாதே! அன்றைக்குப் பிரேமிதாவோடு ஜெகன் சார் வந்த நேரம் நினைவிருக்கிறதா? நான் வேறு சுகமாக இருக்கிறது என்று கிழிசல் டீஷர்ட்டோடு நின்று . . .. சே, அவமானமாகிப் போயிற்று. மீண்டும் அப்படி ஆகிவிடக் கூடாதே என்றுதான் இப்படிக் குளியலையே முடித்துவிட்டேன்!” என்றாள் பவதி.

“ஓஹோஅப்படிங்களா விஷயம்? ஆனால் எங்கேயோ ஏதோ இடிப்பது போல இல்லை?” என்று விழிகளை விரித்துப் பார்த்தாள் சின்னவள்.

# அத்தியாயம் -6

தங்கையின் பார்வையில் குழம்பி, “என்னடி பார்வையும் கேள்வியும்? வீட்டுக்கு விருந்தாளிகள் வருகிறார்கள் என்றால் குளித்து சுத்தமாக இருப்பதில் பெரிதாக என்ன விஷயம் இருக்கிறதாம்? உன்னை சைக்காலஜி படிக்க விட்டதே தப்பு. இல்லாத கற்பனை பண்ணி இருவர் நேரத்தையும் வீணாக்காமல் நீயும் போய்க் குளி.” என்று அக்காவாய் அதட்டினாள் பவதி.

“அம்மணியே, தாராளமாக நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள். ஏன்? விழாவுக்குப் போகிற மாதிரி உச்சி முதல் பாதம் வரை அலங்காரம் வேண்டுமானாலும் செய்துகொள். ஆனால் இந்த விடுமுறை நாளில் நானெல்லாம் எதுவும் பண்ண மாட்டேனப்பா. எழுந்திருக்கக் கூட மாட்டேன். யார் வந்தாலும் சரிதான். அவர்கள் என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும்!” என்று மறுபடியும் படுக்கையில் தொப்பென்று விழுந்தாள் சின்னவள்.

முறுவலோடு உதட்டைப் பிதுக்கிவிட்டு, ஹாலில் உள்ள பொருட்களை எல்லாம் துணி கொண்டு துடைக்கலானாள் பவதி.

எல்லாம் சுத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும் இந்த வேலையினால் அவளுக்கு ஒரு சின்ன திருப்தி உண்டாயிற்று.

அவளது வீடு எப்போதும் சுத்தமாகத்தான் இருக்கிறது! அந்த வகையில் யாரும் குறை காண இயலாது! அம்மாவின் திறமை!

சுமார் எட்டு மணியளவில் கார் வந்து நிற்க முதல் ஆளாகப் பிரேமிதா இறங்கி ஓடி வந்தாள். இன்றும் அவளது தோளில் பை மாட்டியிருந்தது. “வீட்டுப் பாடம் மிஸ். இங்கே வந்து செய்வதாக அம்மாவிடம் பிராமிஸ் பண்ணியிருக்கிறேன்.” என்று காட்டினாள்.

ஆசைப்பட்டு வந்தபோதும் உள்ளூரச் சிறு தயக்கம் இருந்தது போலும். தமக்கை மதுமிதா தம்பியின் பின்னே ஒட்டிக்கொண்டே வந்து சேர்ந்தாள்.

ஜெகன் அறிமுகப் படலத்தை முடிக்கும்போது காரை ஓட்டி வந்த டிரைவர் ஒரு டிஃபன் கேரியரை எடுத்து வந்து வைத்துவிட்டுப் போனான். பத்மாசனி மீன் குழம்பு அனுப்பிய பாத்திரம்.

“நீங்கள் யாரும் சாப்பிட்டுவிட வில்லையே? சேர்ந்து உண்ணலாம் என்று கொஞ்சம் பூரி கிழங்கு எடுத்து வந்தேன்.” என்றாள் மதுமிதா.

“யாரும் சாப்பிடவில்லை . . “ என்று உடனே பதில் கூறியபோதும், சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் ஓரக்

கண்ணால் பார்த்துக் கொண்டனர்.

யாரும் கவனித்திருக்க வழியில்லை என்பது அவர்களுக்கு.

ஆனால் சில வினாடிகளில் பவதியின் அருகில் நெருங்கி நின்று, ஜெகன் பேசினான். “என்ன? ஏதேனும் தேவை என்றால் என்னிடம் தயங்காமல் சொல்லலாம். நான் சத்தமின்றிப் போய் வாங்கி வந்து விடுகிறேன்.” என்று அவளிடம் மெல்லிய குரலில் விவரம் கேட்டான்.

“அ . .அதில்லை . . இது வேறு விஷயம் . . . “ என்று அவள் தயங்கும்போதே அவளுடைய தாயார் புன்னகையோடு ஏதோ சொல்லலானாள்.

“அதோ அம்மாவே சொல்லப் போகிறார்கள் . . . “ என்று கன்னங்களில் சிறு செம்மையோடு கூறிவிட்டு நகர்ந்தாள் பவதி.

ஜெகன் அவளை விழி அகலப் பார்த்துவிட்டு பவதியுடைய தாயின் பக்கம் திரும்பினான்.

பத்மாசனி விலாவாரியாக விளக்கினாள். “பின்னே பிரச்சினையே கிடையாது. நேற்று இரவுக்கு இட்டிலி சட்டினி செய்தேன். அது வேண்டாம் என்று அக்காவும் தங்கையும் “ஸ்விக்”கியில் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டார்கள். அதென்ன செய்து வைத்த பிறகு வெளிச்சாப்பாடு கொண்டு வரச் சொல்வது? உணவை அலட்சியம் செய்வது தப்பில்லையா? அதனால், சட்டினியை ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டு காலைக்கு நேற்றைய இட்டிலிதான் என்றுவிட்டேன். அதுதான் இரண்டும் அசடு வழிகிறதுகள்!” என்று பெருமையாக விவரித்தாள்.

சமாளித்துக்கொண்டு, “அநியாயம் என்னவென்றால், அம்மாவுக்கும் சேர்த்துதான் வரவழைத்தோம். நேற்று எங்களோடு சேர்ந்து நன்றாக மொக்கிவிட்டு, இப்போது தண்டனை வேறு தருகிறார்கள்! இது என்ன நியாயம்?” என்று வந்தவர்களிடம் வாசந்தி புகார் படித்தாள்.

“தண்டனையா?!” என்று ஆச்சரியப்பட்டாள் மதுமிதா. “ஆன்ட்டியின் இட்டிலி சட்டினியைப் போய் தண்டனை எனலாமா? அன்று ஜெகனிடம் அனுப்பினீர்களே, அதே போலத்தானே? ரொம்பப் பயங்கர ருசி. நான் அதைத்தான் சாப்பிடப் போகிறேன். எனக்குப் பூரி வேண்டாம்.” என்றாள்.

“நானும்தான்.” என்றான். ஜெகன்.

“ஹையோ, நான் பூரிப்பா!” என்று அறிவித்துவிட்டு, “அம்மா, உங்கள் தண்டனையில் இருந்து நான் தப்பித்தேன்!” என்று தாயைப் பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்தாள் வாசந்தி.

“நான் ஒருநாளும் என் தங்கையை விட்டுக் கொடுத்ததே கிடையாது. அதனால் வேறு வழியில்லாமல் நானும் பூரி பக்கம்தான்!” என்று பவதி சோகம் போலச் சொல்ல எல்லோரும் சேர்ந்து நகைத்தனர்.

“நான் மிஸ் கூடப் பூரி. மாமா கூட இட்டிலி!” என்று பிரேமிதா இரண்டிற்கும் அடிப்போட மறுபடியும் ஒரு சிரிப்பலை பரவியது.

சிரிக்கும்போதே அக்காவும் தம்பியும் அதிசயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

தங்களால் சேர்ந்து சிரிக்கக் கூட முடிகிறதே எனும் ஆச்சரியம் அவர்களது முகத்தில் எழுதி ஒட்டியது போலத் தெளிவாகத் தெரிந்தது!

இடையே குளித்துவிட்டு வந்து சற்று நேரம் அறையிலிருந்து நடப்பதைக் கவனித்த  சிவகுரு “நான் எதைச் சாப்பிட பவிம்மா?” என்று மெல்ல மகளிடம் கேட்டார்.

“உங்களக்குப் பூரிதான் அங்கிள். எனக்கும் அக்காவுக்கும் போக இட்டிலி மிச்சமிருப்பது கடினம்.” என்றான் ஜெகன் இயல்பாக.

எல்லோருமே சேர்ந்து சாப்பிட்டார்கள்.

இடையே பேசும்போது, “இந்தப் பூரிக்குரிய கிழங்கில் காரட், பீட்ரூட் எல்லாம் பொடிசாக வெட்டிக் கலந்திருப்பது நன்றாக இருக்கிறது!” என்றாள் வாசந்தி.

“ஆனால் அதில் ஒரு குறை உள்ளதே!” என்றாள் மதுமிதா பூடகமாக.

“குறை கண்டுபிடிப்பதானால் இன்னும் ஒரு பூரியாவது சாப்பிட்டால்தான் முடியும்! என்ன செய்ய?” என்று இன்னொன்றை எடுத்துத் தட்டில் வைத்துக்கொண்டு, “அப்படிக் குறை ஒன்றும் தெரியவில்லையே.” என்றாள் வாசந்தி.

யோசனையோடு “என்ன குறை?” என்று பவதியும் வினவினாள்.

“குறை இருக்கிறது. வீட்டுக் கீரை என்கிற மாதிரி அது உங்களுக்குத்தான் தெரியவில்லை. உங்கள் அம்மாவின் சமையலில் அன்பு இருக்கிறது. . “

“ஐயோ சொல்லாதீர்கள் அக்கா. அதுதான் சாக்கு என்று வெறும் சோற்றில்கூட என் அன்பு இருக்கிறது. இன்றைக்கு அதை மட்டுமே சாப்பிடுங்கள். என்று அம்மா பதார்த்தங்களே செய்யாமல் விட்டுவிடப் போகிறார்கள்!” என்று வாசந்தி பயந்து நடுங்கிக் காட்டினாள்.

சிரித்தபோதும், மதுமிதா விடாமல் கூறினாள். “இன்றைக்கு மதியம் வெளியே சாப்பிடப் போகிறேன் என்ற சொன்னதும் எங்கள்

சமையல்காரி தாயம்மாவின் முகம் எப்படி மலர்ந்தது தெரியுமா? இன்னின்னது வேணும் என்று சொன்னால், மறுக்காமல் செய்து தருவார்கள்தான். ஆனால், அது வாங்குகிற சம்பளத்துக்குக் கடனே என்று உழைப்பது. ஆனால் ஆன்ட்டியைப் பாருங்கள், அவர்கள் ஆசையாகச செய்ததைச் சாப்பிடவில்லை என்று வருத்தப் படுகிறார்கள், கோபமுமே. இது நிச்சயமாக வேறுதான் அல்லவா?" என்றாள்.

"அன்று ஒரு பழைய படத்து காமெடி பார்த்தேன். இது வே. . று அது வே . .றுதான் என்ற காமெடி. ஆனால் அது ஏதோ செடியின் வேரைப்பற்றியது. பேச்சுவாக்கில் ஹீரோ ஏதோ செடி வேரைக் கையில் பேச, அதில் வசியம் இருப்பதாக எண்ணிய சிரிப்பு நடிகர் கண்ட வேர்களையும் பிடுங்கி கதாநாயகியை வசியம் செய்ய முயற்சிப்பதாக வரும். முயற்சி தோல்வி அடைய அடைய, "இது வே . .று அது வேறுவே . .ரு " என்பார் காமெடியன்." என்றாள் வாசந்தி.

அவள் நடித்துக் காட்டிய பாவனையில் மறுபடி சிரிப்பலை பரவியது.

சிரித்துவிட்டு, "இங்கே கொணர்ந்து விட்டு விடுமாறு மித்தி ஏன் கேட்கிறாள் என்று இப்போது புரிகிறது." என்றாள் மதுமிதா.

"சரிசரி. இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் நேரம் போய்விடும். சொல்லுங்கள், மதியம் என்ன வேண்டும்? பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணுக்குத்தான் முதலும் முக்கியமுமான உரிமை! நீ சொல்லும்மா மது!" என்றாள் பத்மாசனி.

கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக்கொண்டு, "அன்று மீன் குழம்பு வெகு ருசி ஆன்ட்டி. இதற்கு மேல் அந்த மீன் வாங்கி, அதுபோலச் செய்ய முடியுமா?" என்று கேட்டாள் அவள்.

"கட்டாயம் கிடைக்கும் மகளே!" என்று சிவகுரு மீன் வாங்கக் கிளம்பினார். பர்சை எடுத்துப் பைக்குள் வைத்தபடி "பவி, நம் ஆட்டோவைக் கூப்பிடும்மா." என்றார் மகளிடம்.

வெளியே நின்ற காரின் பக்கமாகப் பார்த்துவிட்டு, "ஆட்டோ எதற்கு அங்கிள்?" என்று ஜெகன் விசாரித்தான்.

"இரண்டு காரணங்கள். ஒன்று, அங்கே கார் நிறுத்த இடம் கிடைக்காது. அடுத்து, காரில் சென்று இறங்கினால் விலையும் அதிகம் சொல்வார்கள்." என்றார் அவர்.

"அப்படியானால் என் காரில் போங்கள், அங்கிள். . . ." என்றவனை இடையிட்டு, "ஆமாம் அப்பா. ஜெகன் சாரின் காரில் சென்றால் அதிக விலை சொல்லக் கூடாது என்று புதா. . . சட்டம் வந்திருக்கிறதாமே!" என்று கண்ணை உருட்டிச் சொன்னாள் வாசந்தி.

“சட்டம் போட்டால்தான் அதில் ஓர் ஓட்டையைப் போட்டுத் தப்பி விடுவார்களே! இது வே . . று! இன்று பயணத்தின்போது லாப்டாப்பில் வேலை செய்யலாம் என்று டிரைவரைக் கூட்டி வந்னே. அது நல்லதாயிற்று. மாரி காரை ஓட்டி வருவார். சற்றுத் தள்ளி நிறுத்திவிட்டு இறங்கிப் போய் வாங்கி வந்துவிடுங்கள்.” என்றான் ஜெகன். “வே . .றுதானே?”

“ஐடியா நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இவர்களை விட்டுவிட்டு உடனே போகப் போவதாகச் சொன்னீர்களே?” என்று வாசந்தி கேட்பதைப் பவதியும் மௌனமாகக் கவனித்தாள்.

அவளை லேசாக முறைத்து நோக்கி, “ஏதோ நல்லதற்குச் சொன்னால் ஆளை விரட்டி விடுவாய் போல இருக்கிறதே! ஆனால் எனக்கு அவசரம் கிடையாது. அங்கிள் திரும்பி வந்த பிறகு போனாலே போதும்!” என்றவனின் ஓரக் கண் பார்வை மீண்டும் பவதியிடம் சென்று மீண்டது.

பிறகு கண்ணால் பிரேமிதாவைக் காட்டி, “உன் . .உங்களிடம் சிலது கேட்க வேண்டும்.” என்று பவதியின் அருகிலே சென்று அமர்ந்து, அக்கா மகளின் கல்வி, பள்ளியில் நடந்து கொள்ளும் விதம் பற்றி மெல்லிய குரலில் விசாரித்தான்.

தாயும் மகளும் வாசந்தியின் அரட்டையில் பங்கேற்றனர்.

பத்மாசனி சமையல் அறைப் பக்கம் செல்வதைக் கவனித்து அங்கே சமையலில் உதவச் செல்வதாகக் கூறி பவதி எழுந்தாள்.

அவளோடு கூடவே ஜெகனுடைய சகோதரியும் சென்று, இருவருமாகப் பத்மாசனிக்கு உதவி செய்யலாயினர்.

பத்மாசனி மசாலா எடுத்து அரைக்கச் சின்னவர்கள் வெங்காயம் உரித்து வெட்டிக் கொடுத்தார்கள். தக்காளி மாங்காய் வெட்டி வைத்தார்கள்

மதுமிதாவின் உதவியைப் பத்மாசனியும் மறுக்கவில்லை.

மூவரும் மெல்லப் பேசிக்கொண்டே இலகுவாக வேலை செய்தார்கள்.

பிரேமிதாவைப் படம் வரையச் சொல்லிவிட்டு, வாசந்தி ஜெகனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

என்னென்ன பிடிக்கும் பிடிக்காது என்பது போன்ற பொதுவான விசாரிப்புகள்.

“இனிமேல் ஹாலுக்குப் போய் உட்கார்ந்து பேசலாம். பவியப்பா மீனை வெட்டி சுத்தம் செய்தே வாங்கி வந்துவிடுவார். உப்புப் போட்டு அலசி உடனே சமைத்து விடலாம்.” என்று பத்மாசனி

கூற மூவரும் அங்கே சென்றார்கள்.

“பிரேம், தண்ணீருக்கு நீலநிறம் போடாமல் விட்டுவிட்டாயே!” என்று சிறுமியிடம் சொல்லிக் கொண்டிருந்த வாசந்தி தமக்கையைப் பார்த்ததும், “அக்கா, இந்தக் கொடுமையை என்னவென்று கேளேன், உன்னைப் போலவே ஜெகன் சாரும் ரொம்ப மோசம்! அநியாயக் கொலைகாரப் படங்களைத்தான் பார்ப்பாராம்!” என்று அறிவித்தாள்.

“கொலையா? அதை நான் பார்ப்பதே இல்லையே!” என்று இரண்டு குரல்கள் ஆச்சரியமாய் ஒலிக்கவும், “அதையேதான் நானும் சொன்னேன். படு போராய் நீ எப்போதும் சொல்வாயே, மென்மை, அமைதியான காமெடி  என்று அதையேதான் சாரும் சொல்கிறார். த்ரில்லே இல்லாத படுபோர்ப் படங்கள்! அதில்லாமல் முழு காமெடி வேண்டும் என்றால் டாம் அன்ட் ஜெர்ரி, டொனால்ட் டக்காம்! ஒரே டேஸ்ட்! கடவுளே! இந்த மாதிரி சைவம் நமக்குத் தாங்காதுப்பா!” என்று அவள் சொன்ன தினுசில் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

“ஆனால் இதுவா கொலைகாரப் படம்?” என்று கேட்டுவிட்டு மதுமிதாவும் சிரிக்க, அவளும் தம்பியும் மீண்டும் ஆச்சரியமாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவ்வளவு நேரம் சமையலறையில் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்ததில் ஒதுக்கம் மறந்துவிட, “சிரிப்பையே மறந்துவிட்டோம் பவதி!” என்று மதுமிதா வாய்விட்டே சொன்னாள்.

அவளது கதையும் இயல்பாக வெளியே வந்தது.

அவளுக்குச் சிறு வயதிலேயே பத்தொன்பதில் திருமணம். ஆசைப்பட்டு மணந்து கொண்டான் பிரதீபன். அவனது தொழில் ரியல் எஸ்டேட் . மனைவி சொன்ன சில யோசனைகள் கணவனுக்கு மிகவும் பிடித்துப் போயின. வாடிக்கையாளர்களுக்கும்!

இன்டீரியர் டெக்கரேஷன் படிக்க வைத்தான் கணவன். மேலே வெளி நாட்டில் ஆறு மாதப் பயிற்சியும் எடுத்தாள்.

அதைச் சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டவளிடம், “ஆறு மாதம் உன்னைப் பிரிந்து பிரேமிதா எப்படி இருந்தாள்.” என்று பத்மாசனி வினவினாள்.

“அவள் அப்பா பார்த்துக் கொண்டார் ஆன்ட்டி. அப்படியெல்லாம் ஆசையாகச் செய்தவர்தானே? கூடவே அம்மாவும் பார்த்துக் கொள்வார்கள். நானும், தினமும் வீடியோ காலில் பேசுவேன். ஆனால் படிப்பு முடிந்து வந்தால் . . .” என்று மேலே பேச முடியாமல் மதுமிதா தவித்தாள்.

அவளது கையைப் பற்றித் தடவிக் கொடுத்துவிட்டுப் பவதி எழுந்தாள். “பிரேமிதா, நீ வீட்டுப் பாடத்தை இன்னும்

முடிக்கவில்லையே. வசு அக்கா அறைக்குள் சென்று அதை முடி." என்று தாயைக் கலக்கத்துடன் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியை அங்கிருந்து அழைத்துச் சென்றாள்.

"கூட்டம் அதிகம் போல? இன்னமும் அப்பாவைக் காணோமே!" என்று வாயிலை எட்டிப் பார்த்தாள் பத்மாசனி.

"என்ன பெரிய பிரச்சினை? இன்னும் இரண்டு செட் கைகள் கிடைத்ததால் சமையலில் உங்கள் முதல் வேலை சீக்கிரமாக முடிந்துவிட்டது. அப்பாவுக்கு அது தெரியதல்லவா? கூடக் கொஞ்ச நேரம் உங்களிடமிருந்து தப்பிக்கலாமே என்று  கடற்கரையில் சந்தோ . . ஷமாகச் சுற்றிக் கொண்டிருப்பார்." என்று வாசந்தி கிண்டலடிக்க, இறுக்கமான மனநிலை சற்றுத் தளர்ந்தது.

"எதற்கும் குழம்பை அடுப்பில் போட்டு விடுகிறேன். மீன் வந்ததும் உடனே வேலை முடிந்துவிடும்." என்று பத்மாசனி சமையலறைக்குச் சென்றாள்.

பவதி மீண்டும் வரவும், "தாங்க்ஸ் பவதி. மித்தி முன் காட்டக் கூடாது என்பது அடிக்கடி மறந்துவிடுகிறது. வா. உட்கார்." என்று பழையபடி அருகிலேயே அமர வைத்துக் கொண்டு மதுமிதா பழைய பேச்சைத் தொடர்ந்தாள்.

"பிரதீப் ரொம்பப் பிரியமாக இருப்பார் பவதி. தொழிலில் என் ஐடியாக்கள் நன்றாக இருக்கிறது என்று அவ்வளவு பாராட்டுவார்! வெளிநாட்டுக்குப் பயிற்சிக்கு அனுப்பியதே அவர்தான். திரும்பி வந்த பிறகு பழைய அன்பு மாதிரியே காட்டி . .வெளியே அப்படியே தோன்றினாலும் ஏதோ வேறுபாடு  . .. நிஜ அன்புக்கும் அப்படிக் காட்டிக் கொள்வதற்கும் ஏதோ வேறுபாட்டை  . . என்னால் உணர முடிந்தது. . . ."

"கொஞ்சம் அதிகப்படியாகப் பாசம் காட்டியிருப்பாரே! அதை இதை வாங்கித் தந்து நைஸ் பண்ணினார்தானே?" என்று எடுத்துச் சொன்னாள் வாசந்தி.

ஆச்சரியமாகப் பார்த்து ". .ஆ . . மாம்!" என்றாள் மது.

"கரெக்ட்! அதுதான் குற்ற உணர்ச்சியை மறைக்கும் முதல் முயற்சி! சைக்காலஜியில் இது பற்றி வருகிறது." என்றாள் மற்றவள்.

"அத்தான் விஷயத்தில் இது மெய்யாக இருக்கலாம். ஆனால் அதுவே நியதி என்று எண்ணிவிடக் கூடாது. மனிதன் நிஜமாகவே அன்போடு வாங்கிக் கொடுத்தாலும் சந்தேகப் பட வைத்து விடுவாய் போல இருக்கிறதே. குடும்பத்தில் யாருக்கும் இது போல ஆலோசனை கூறக் கூடாது என்று வாசந்தியை எச்சரித்து வையுங்கள், பவதி." என்றான் ஜெகன் கண்டிப்பான குரலில்..

லேசாக முறுவலித்துவிட்டு பவதி மீண்டும் மதுவிடம் திரும்பினாள். “கஷ்டமாக இருப்பதை நினைத்து நினைத்து மறுக வேண்டாம், அக்கா. தப்பு எந்த அளவுக்குப் போய்விட்டது என்று நன்கு உறுதி செய்துகொண்டு, அதன் பிறகு அடுத்தது என்ன என்பது பற்றி மட்டுமே யோசியுங்கள்.” என்றாள் பவதி மென்மையாக.

ஆதாரம் போல அவளது கையை இறுகப் பற்றிக்கொண்டு மதுமிதா சொன்னாள். “எல்லாம் உறுதிதான் பவதி. சந்தேகத்துக்கு இடமே இல்லாமல் கண்ணாலேயே அவரை அந்தச் செயலாளர் பெண்ணோடு ஒருநாள் பார்த்தே விட்டேன். மனதில் திடீர் திடீர் என்று அந்தத் தோற்றம் வந்து என்னை உலுக்கி விடும். அதிர்ச்சி, ஆத்திரம் அருவருப்பு . . அப்படியே மூளையே மக்கர் பண்ணிவிடும். அழுகை மட்டும்தான் வரும். ஆனால், உன்னிடம் சொல்லும் இப்போது அந்த அளவு வலியில்லை. இயல்பாகச் சொல்ல முடிந்தது. நீ புரிந்து கொள்கிறாய் என்பதே ஆறுதலாக இருக்கிறது. ஜெகன் உன்னிடம் எல்லாம் சொல்லி விட்டதாகக் கூறினான். இதைப் போய் எப்படிச் சொன்னான் என்பதும் இப்போது எனக்குப் புரிகிறது. . .”

ஆச்சரியமாக நோக்கும்போது ஒப்புதலாகத் தலையசைத்தான் அவன். சிறு அசைவுதான். ஆனால் பெரிய மேடை போட்டுப் பாராட்டினாற் போல பவதி உணர்ந்தாள்.

“. . மித்தியும் மிஸ் வீடு, மிஸ் வீடு என்பாள். உங்கள் வீட்டில் அனைவரிடமுமே மற்றவர்களுக்காக அன்பு நிறைந்து இருக்கிறது. அதுவே அணுகி வரும் எல்லோரையும் அமைதிப்படுத்தி விடுகிறது என்று தோன்றுகிறது. . .” என்றவள் இன்னமும் பவதியின் கையை விடாமல் அழுந்தப் பிடித்திருப்பதை உணர்ந்து, பிடியை விட்டாள்.

கை சிவந்திருப்பதைப் பார்த்ததும் “ஐயோ சாரி, பவதி.” என்றாள் வருத்தத்துடன்.

சன்னமாய் முறுவலித்து, “இரண்டுமே என்னிடமிருந்து அக்காவுக்கும் தொத்திவிட்டது.” என்றான் ஜெகன்.

“இரண்டு தொத்தியதா? அதென்னது? என்னென்னது தொத்தியது?” என்று வாசந்தி பரபரத்தாள்.

“ஒன்றும் இல்லை. நான் பிரேமிதாவைப் பார்க்கப் போகிறேன். அவள் வீட்டுப் பாடம் முடித்துவிட்டால் இங்கே வரச்சொல்லலாம்.” என்று எழுந்தாள், பவதி.

“அதற்குள் எப்படி முடியும்? அத்தோடு பாடத்தை முடித்துவிட்டால் அப்புறம் அவள் அங்கே இருப்பாளாக்கும்? தானே வந்துவிடுவாள்.” என்றான் ஜெகன்.

பவதி தயங்கி நிற்கும்போதே, “வேறே வேலை இல்லை

என்றால், இங்கே எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?” என்று சகோதரிகள் இருவரையும் பார்த்துப் பொதுவாகக் கேட்டான் அவன்.

பெரியவள் கேள்வியாய் நோக்க, “உத . .வியா?” என்று அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “குறைந்தது ஆறடி உயரம் இருப்பீர்கள் போலத் தெரிகிறது. அதனால் அடிதடியாக இருக்காது. ஆனாலும் உதவி கேட்கிறீர்களே! சரி கேட்டது கேட்டுவிட்டீர்கள், ஜெகன் சார். உதவி என்று கேட்டுவிட்டால் இந்த வீட்டில் வெறும் கையோடு அனுப்புவது இல்லை. சொல்லுங்கள், ஒரு நூறு ரூபாய் போதுமா?” என்று வாசந்தி சாதுவாகக் கேட்க, மது விழுந்து விழுந்து சிரிக்கலானாள்.

“வாயைத் திறந்தால் தப்புக்கள்தாள் உதிருமா? நிறையத் திருத்தங்கள் தேவைப் படுகிறதே!” என்றான் ஜெகன்.

“திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அதிலும் ஓர் “இக்”கன்னா, அவை சரியாக இருந்தால் மட்டுமே ஏற்கப்படும்!”

“சந்தோஷம். முதல் திருத்தம், உயரம் ஆறு இரண்டு. . .”

“இருக்கும் இருக்கும். அதுதான் முகத்தைப் பார்த்துப் பேசினால் கழுத்தை வலிக்கிறது போல!ஞாபகமாய் அந்தக் கழுத்துவலிக்கான சிகிச்சைக்கு உங்களிடம் காசு கேட்க வேண்டும்! அப்புறம் என்ன தப்பு?”

“தேவை பண உதவி அல்ல. வேறு.”

“ஓ அப்பபடியா? அப்படியானால் யோசித்துதான் வாக்களிக்கப்படும். என்ன உதவி? அதை முதலில் சொல்லுங்கள்.”

“எங்களுடைய கடையில் . . கடைகளில் என்று சொல்ல வேண்டும். இப்போது ஐந்து இருக்கிறது. சூப்பர் மார்க்கெட் . வெப் சைட் இருக்கிறது. புதிதாக “ஹோம் டெலிவரி” தொடங்குகிறோம். சாமான் லிஸ்ட் இதோ. . . உனக்கு அனுப்புகிறேன். இதில் ஒவ்வொரு தளத்தில் இருந்தும் ஏதாவது சாமான்கள் ஆர்டர் பண்ண வேண்டும். பிடிக்காவிட்டால், திருப்பிக் கொடுக்கவும் அதில் வாய்ப்பு வைத்திருக்கிறேன். . .”

“ஓ! கடைக்காரர் விற்பனையைப் பெருக்குகிறாராக்கும்!”

“பயங்கர அவசரக் குடுக்கையாக இருக்கிறாயே. முதலில் நான் சொல்லி முடிக்கும்வரை தயவு பண்ணிக் கேட்க மட்டும் செய் தாயே. என் புதிய திட்டம் எப்படி நடக்கிறது என்று எனக்குத் தெரிய வேண்டும். என் கடை வெப் சைட்டுக்குள் போய், ஹோம் டெலிவரியில், ஒவ்வொரு தளத்திலும் சிலது ஆர்டர் பண்ண வேண்டும். அதைக் கொண்டு வருவதற்கான கால அவகாசம், பொருட்களின் தரம், பாக் பண்ணியிருக்கும் விதம், ஆர்டர் எடுப்போர்

கொண்டு வந்து தருவோர் நடந்துகொள்ளும் விதம் எல்லாம் எனக்குத் தெரிவிக்க வேண்டும். “ என்றான் அவன்.

“முடித்து விட்டீர்களா, ஜெகன் சார்?” என்று பதவிசாகக் கேட்டாள் வாசந்தி.

“ஆமாம். ஏன் கேட்கிறாய்?” என்று யோசனையாகப் பார்த்தான் அவன்.

“முக்கியமான விஷயம், அதைச் சொல்லவில்லையே! இதற்கு யார் பணம் கொடுப்பது? “

“சந்தேகமென்ன? நிச்சயமாக நானேதான். என் திட்டம் வேலை செய்யும் விதம் அறிய நான்தானே செலவு செய்ய வேண்டும்?”

புருவம் சுருக்கி யோசித்து, “ஓ, அப்படியானால் ஆர்டர் பண்ணி வரும் பொருட்களை உங்களிடமே திருப்பித் தந்துவிட வேண்டும் போல?” என்றாள் வாசந்தி.

“அதுதான் அவசரக்குடுக்கை என்றேனே. இதோபார், இந்த மூன்று தளத்தில் விற்பதை உன்னிடம் வாங்கி நான் என்ன செய்ய முடியும்? பெண்கள் விஷயம். இது எனக்குப் பெரிய உதவி என்பதால் இந்த பில்லுக்கு நானே பணம் கொடுப்பேன். எதையும் திருப்பித் தர வேண்டாம். “

“ஏனோ? எங்களுக்கு வேண்டியதை நாங்களே பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளுவோம்!”

உதட்டைப் பிதுக்கி “என்ன ரோஷமடா?!” என்றான் ஜெகன்.

“எங்களுக்கு ஓசியடிக்கவே பிடிக்காது. அது கடன்பட்ட மாதிரி ஆகிவிடும். “கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்று “ கம்பர் எழுதி வைத்திருக்கிறார் . தெரியுமா? எங்களை ராவணன் ஆக்கிவிடாதீர்கள்!”

பவதிக்குத் திகைப்பாக இருந்தது. இந்த வசு ஜெகனோடு என்னமாய் வாயடிக்கிறாள்! தன்னால் ஏன் முடியவில்லை? இத்தனைக்கும் இருவரையுமே வீட்டில் அரட்டைகள் என்று சொல்வதுதான்! ஏன்? இந்தப் பாடல்கூட அவளுக்குமே தெரிந்ததுதான். ஒருவருக்கொருவர் கிண்டலாகப் பயன்படுத்துவதும் உண்டுதான். ஆனால் இப்போது அவளுக்கு என்ன ஆயிற்று? பேச்சே மறந்தது போல இருக்கிறதே! ஏன்?

புரியாமல் திணறிப் போனாள் பவதி!

# அத்தியாயம் -7

வாசந்திக்கும் ஜெகனுக்கும் இடையே நடந்த பேச்சுப் போரில் இயல்பாகக் கலந்து கொள்ளவும் இயலாமல், யார் கவனத்தையும் ஈர்க்காமல் அங்கிருந்து சென்றுவிடவும் முடியாமல் பவதி திணறிப் போனாள்.

நல்லவேளையாக அந்தச் சமயத்தில் சிவகுரு மீனோடு திரும்பி வந்துவிட, அவரிடம் பையை வாங்கி சமையல் அறையில் தாயிடம் கொடுக்கும் சாக்கில் ஒருவாறு விலகிச் செல்ல அவளால் முடிந்தது.

மீண்டும் ஹாலுக்குள் பவதி சென்றபோது "உனக்கு மட்டுமே ஆர்டர் பண்ணுகிறாயே, உன் அக்காவுக்கு ஒன்றும் வேண்டாமா?" என்று, வாசந்தியின் லாப்டாப்பை எட்டிப் பார்த்துவிட்டு ஜெகன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அவளுக்கு வேண்டுமானால் அவள்தானே . . . ஆனால் அவள் என்ன ஸ்பெஷல்? இவ்வளவு அக்கறையாகக் கேட்கிறீர்கள்?" என்று பதில் கேள்வி கேட்டாள் வாசந்தி.

"பவதி மட்டுமல்ல, அங்கிள், ஆன்ட்டி எல்லோருக்குமே சாமான் சொல்லலாம். ஆனால் இந்த ஒரு பில் முழுதும் என்னது. பொறு, கொஞ்சம் பொறுமையாய் நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசலாம் வாசந்தி. இது நிச்சயமாக ஓசியடிப்பது இல்லை. கடனும் ஆகாது. வெளியே ஓர் ஏஜன்சியிடம் கொடுத்தால் இந்த வேலைக்கு எவ்வளவு பணம் கேட்பார்கள் தெரியுமா? பதிலாக எனக்கு உதவி என்று நான் கேட்டு, எனக்காகச் செய்வது. அதனால் பணம் பற்றி இனிப் பேச வேண்டாம்." என்றான் அவன் அழுத்தமான குரலில்.

"பார்த்துக்கொண்டே இருங்கள். மொத்தக் கடையையும் வாங்கிவிடுவேன்!"

"நீங்கள் எல்லோரும் கொடுக்கிறவர்கள். அப்படிச் செய்ய மாட்டீர்கள். அத்தோடு உன் அக்காவும் அப்படி நீ செய்ய விட மாட்டாள்."

"அவள் என்ன விடுவது? என்னை அக்கா என்ன செய்து விடுவாளாம்?"

"வாசந்தி, உன் அக்கா பவதி ஓர் ஆசிரியைம்மா. நீளப் பிரம்பை எடுத்து . . . "

"அக்காவா? கிழித்தாள்! அது சுத்தப் பயந்தங்குள்ளி. மாணவர்களை அதட்டிப் பேசவே பயப்படும்!"

"ஆன்ட்டி, இவர்கள் எந்த மருத்துவ மனையில் பிறந்தார்கள்?

என்ன? எதற்கும் உங்கள் குடும்பப் பாட்டைச் சத்தமாகப் பாட நன்றாக சாதகம் செய்துகொள்ளுங்கள். அப்போதுதான் உண்மை தெரியும்?" என்றான் ஜெகன்.

ஆர்வமாக உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த மதுமிதா குறுக்கிட்டு "அது என்ன உண்மை ஜெகன்?" என்று ஆர்வமாகக் கேட்டாள்.

"ஆமாமாம், அது என்ன உண்மை, தம்பி?" என்று பத்மாசனியும் விசாரித்தாள்.

"அதுதான் ஆன்ட்டி, அனேகமாக . .அனேகம் என்ன, கட்டாயமாக உங்கள் இரண்டு பெண்களில் ஒருத்தி, மருத்துவமனையில் மாறிப் போய் உங்களிடம் வந்திருக்க வேண்டும்! அந்தப் பாட்டைக் கேட்டு யாராவது வந்தால் . . அவள்தான் உங்களுடைய உண்மையான மகள் என்று இலகுவாகக் கண்டுபிடித்துவிடலாம்! " என்று கையை உயர்த்தி ஜெகன் பாவனையோடு அறிவிக்க, எல்லோருமே சிரிக்கத் தொடங்கினர்.

"நான் பாடி விடுவேன். ஆனால் அக்கம் பக்கம் உள்ள வெள்ளி மூக்குக் குதிரைகள் சேர்ந்து கோஷ்டி கானம் பாடத் தொடங்கிவிட்டால் என்ன் செய்வது என்கிற ஒரே ஒரு கவலைதான் தடுக்கிறது. என்ன செய்ய?" என்று பத்மாசனி ரொம்ப சீரியசாக யோசிக்க மற்றொரு சிரிப்பலை பரவியது!

சிரிப்பு ஓரளவு அடங்கியதும், "ஆனாலும் என்ன கதைடா அப்பா! பிறந்த அன்றே மாறிப் போன குழந்தைக்குக் குடும்பப் பாட்டு எல்லாம் தெரியுமாக்கும்!" என்று மடக்கினாள் வாசந்தி.

சட்டெனப் பதில் தோன்ற "ரத்தத்தில் ஊறியிருக்காதா என்ன?" என்று கேட்டாள் பவதி. "அபிமன்யு கதை தெரியாதா? பிறக்கு முன்பே போர் ரகசியம் அறிந்து மகா பாரதப் போரில் உதவினானே?"

அக்காவும் தம்பியும் ஆச்சரியமாகப் பார்க்க, "அடேயப்பா! என் அக்கா கூட இன்று ஒருவழியாக வாயைத் திறந்துவிட்டாள்! வெளியே எட்டிப் பாருங்கள், இடி மின்னல் மழை . . எல்லாம் மொத்தமாகக் கொட்டுகிறதா என்று?"

"சும்மாக் கதை விடாதே! பிரேமிதாவுக்காக முதலில் சண்டை போட்டது யாராம்? நான்தானே?"

இப்போது ஜெகனும் சேர்ந்துகொண்டான். "ஆமாம், ஆமாம்! அன்று என் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்காத குறை! என் கால்கள் வெடவெடவென்று எப்படி நடுங்கின என்று எனக்கல்லவா தெரியும்?"

"இதுவும் சுத்தக் கதை!" என்றாள் பவதி.

“பூ! வெறும் கதையேதானா? ஜெகன் சார் நன்கு கதைக்கக் கூடியவர்தான். எனவே அவர் நடுங்கவில்லை என்று ஒத்துக் கொள்ளலாம். அப்படியானால் அன்று நடுங்கியது உன் கால்களா அக்கா?” என்று வாசந்தி பெரிதாக ஆர்வம் காட்டிக் கேட்க மறுபடியும் சிரிப்பு அலை பரவியது.

ஜெகன் லேசாகக் கையைத் திருப்பிப் பார்ப்பதைக் கவனித்து, “இன்னும் பத்தே நிமிஷங்களில் குழம்பு தயாராகிவிடும். நீங்களும் இருந்து சாப்பிட்டுவிட்டே போகலாம் தம்பி.” என்று பத்மாசனி உபசரித்தாள்.

“ஊகூம். இல்லை ஆன்ட்டி. அங்கே எல்லோரும் எனக்காக விடுமுறை நாளில் வேலைக்கு வந்திருக்கிறார்கள். நான் சொன்ன சில வேலைகளும் நடந்து கொண்டிருக்கும். கொஞ்சம் தாமதமாக என்றாலும் நான் போயே ஆக வேண்டும். உணவும் அவர்களோடுதான். ஏற்பாடு செய்தாகிவிட்டது.” என்று எழுந்தான் ஜெகன்.

“கிட்டத்தட்டத் தயாராகிவிட்டதே என்று பார்த்தேன் . .” என்று இழுத்தாள் குடும்பத் தலைவி.

“உங்கள் வீட்டில் உண்பதற்கு என்ன ஆன்ட்டி. இன்று இல்லாவிட்டால் இன்னொரு நாள் ஒரு பிடி பிடித்து விடுகிறேன். அவ்வளவுதானே?” என்று பவதியைப் பார்த்தான்.

“பவதி, இன்று மாலையில் மாரி காரை எடுத்து வருவான். அப்போது . . “ என்று பேசியவாறே அவன் வாயிலை நோக்கி நடக்க அவளும் கூட நடந்தாள்.

செவி கேளாத தூரம் சென்றதும், “அக்கா முகம் ரொம்பத் தெளிந்திருக்கிறது பவதி. இப்படிச் சிரிப்பாள் என்று . . முதலில் அவள் சிரிப்பாள் என்றே நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை! ரொம்பத் தாங்க்ஸ்! உங்கள் எல்லோருக்கும்!” என்றான் அவன்.

“மறுபடியுமா? தொத்திக் கொண்டது விடவே விடாது போல?” என்று அவள் முறுவலித்தாள்.

முகம் மலர, “இதற்கும் இன்னும் ஒரு தாங்க்ஸ்!” என்று விடைபெற்றான் அவன்.

அடுத்த சில நாட்களிலேயே இரு குடும்பங்களும் மீண்டும் சந்தித்தன. புதுப்பிரிவு ஒன்று தொடங்குவதாக சிவகுருவைக் குடும்பத்தோடு அழைத்திருந்தான் ஜெகன்.

பத்திரிகையாளர் சந்திப்பு முடிந்து வருகை தந்த மற்றவர்களும் சென்ற பின்னர் இரு குடும்பங்களும் சேர்ந்து அமர்ந்து இலகுவாக உரையாடினார்கள்.

அடுத்தொரு நாள் சிவகுரு குடும்பம் ஜெகன் வீட்டுக்குச் சென்றது. அங்கிருந்த சமையல்காரத் தாயம்மாவிடம் பிள்ளைத் தாய்ச்சிக்கென்று சில பக்குவங்கள் செய்து கொடுக்குமாறு பத்மாசனி சொல்லிவிட்டு வந்தாள்.

இன்னொரு நாள் மாலையில் பவதி வேலை முடிந்து திரும்பி வந்தபோது, அங்கே அவள் வீட்டில் மதுமிதா இருந்தாள். கண்கள் கலங்கி இருந்ததைக் கவனித்துத் தாயிடம் "என்ன" என்பதுபோல பவதி பார்க்க, "ஒன்றுமில்லை பவதி. ஆன்ட்டியிடம் கொஞ்சம் சுமை இறக்கி வைத்தேன்." என்று வந்தவளே பதில் சொன்னாள்.

முகம் கைகால் கழுவி வந்த பவதியிடம் மதுவே அந்த விவரமும் கூறினாள்.

"பிரதீப் விஷயம்தான் பவதி. அந்த அவளை மணப்பதற்காக விவாகரத்து வேண்டும் என்று என்னிடம் நேரிலேயே சொல்லியிருந்தார். எனக்கும் அந்தக் காட்சிக்குப் பிறகு அவரைப் பார்க்கப் பிடிக்காமல் அம்மா வீட்டுக் . . அதுதான் ஜெகன் வீட்டுக்கு வந்தேன். இப்போதானால், அந்த விவாகரத்து விஷயம் கிணற்றில் போட்ட கல் மாதிரி அப்படியே இருக்கிறது. அந்த நினைவில் அவ்வப்போது எனக்குப் படபடப்பாக இருக்கிறது. ஒவ்வொரு தடவை கூரியர் வரும்போதும் அந்த நோட்டீஸ்தானோ என்று ஒரே தவிப்பாக . . . அதுவும் இன்று சோதனை போல நாலு கூரியர் வந்ததா? ஜெகனும் ஊரில் இல்லை. தனியே சமாளிக்க முடியாமல் ஆன்ட்டியிடம் ஓடி வந்துவிட்டேன்." என்றாள்.

தாயார் தந்த காஃபி அருந்திக் கொண்டிருந்த பவதி யோசனையாக மற்றவளைப் பார்த்தாள்.

"என்ன பவதி? சொல்லு."

"அக்கா, இப்படித் தினமும் செத்துச் செத்துப் பிழைப்பதற்கு, நீங்களே துணிந்து ஒன்று செய்தால் என்ன? எப்படியும் தப்பு செய்தவர் உங்கள் கணவர்தானே? நீங்களே மணவிடுதலை கேட்டுவிடுங்களேன்?" என்றாள் சின்னவள்.

"ஜெகனும் இது போலத்தான் சொல்கிறான். ஆனால் . . .என்னால் முடியவில்லை, பவதி. இந்த ஒன்பது ஆண்டுகளாக அவரை உயிராக நேசித்து வாழ்ந்ததை அடியோடு எப்படி மறப்பது . . .மித்திக்குப் பிரேமிதா என்று ஏன் பெயர் வைத்தோம் தெரியுமா? அவர் பெயர், என் பெயரை இணைத்து, கூடவே எங்கள் காதலையும் எடுத்துச் சொல்லும் விதமாக இருவருமாக வெகுவாக யோசித்து வைத்த பெயர்! அப்படியெல்லாம் வாழ்ந்துவிட்டு, அவரை ஒரேயடியாகத் துண்டித்து விடுவது பற்றி என்னால் நினைக்கக் கூட முடியவில்லை. ஆனால் பிரதீப்பைப் பார், எவ்வளவு எளிதாக என்

இடத்துக்கு இன்னொருத்தியைக் கொண்டுவந்துவிட்டார்! “ என்று வேதனையோடு கூறினாள் மதுமிதா.

“ஆனால் . . “ என்று ஏதோ சொல்லப் போன பவதி தாயின் கண்ணசைவைப் பார்த்துப் பேசாமல் இருந்துவிட்டாள்.

மதுமிதா சென்ற பிறகு, மறுப்பாகக் கண்ணசைத்துக் காட்டியதற்குப் பத்மாசனி மகளிடம்  விளக்கம் தெரிவித்தாள்.

“மது சொல்வதைப்பார்த்தால், ஜோடிப் புறாக்களைப் போல அவ்வளவு அன்பாக வாழ்ந்திருக்கிறார்கள்! ஏதோ கெட்ட நேரம்., அவளுடைய கணவருக்குப் புத்தி சற்றுப் பிரண்டுவிட்டது. ஆனால், மதுவே சொல்லும் இந்த அன்பில் பாதி இருந்தால் கூட, அந்த மனிதரால் மதுவை விட்டுப் போக முடியாது. பொறுத்துப் பார்க்கலாம்.” என்றாள் அன்னை.

“என்னம்மா நீங்கள்? நம்பிய மனைவிக்குத் துரோகம் செய்தவர் அந்த மனிதர் ! மது அக்காவை ஏறிட்டுப் பார்க்கக் கூட அவருக்குத் தகுதி கிடையாது என்பது என் அபிப்பிராயம்! இதில் பொறுத்துப் பார்க்க என்ன இருக்கிறது? ஒன்றுமே கிடையாது!” என்றாள் பவதி தீர்மானமாக.

பிரேமிதாவின் பெயர்க் காரணம் பற்றிய பேச்சு மனதில் இருந்ததாலோ என்னவோ, அடுத்து சந்தித்தபோது, அவரவர் பெயர் பற்றிய பேச்சு எழுந்தது.

“பவதி என்றால் என்ன அர்த்தம் ஆன்ட்டி?” என்று மதுமிதா கேட்ட கேள்விக்கு, “பார்வதி.” என்று ஜெகன் பதில் சொன்னான். “அகராதியில் அப்படித்தான் போட்டிருக்கிறது. பராசக்தியின் பெயர்களுள் ஒன்று.”

ஆச்சரியமான பார்வைகளின் இடையே “ஆனால் அது எனக்குத் தெரியாது. உடன் படித்தவர்கள், மற்றவர்கள் எல்லோரும் “பவதி”க்குப் பதிலாக “அவதி அவதி” என்று கூப்பிட்டுச் சின்ன வயதில் கேலி பேசும்போது ரொம்பக் கஷ்டமாக இருக்கும். ஆனால் கல்லூரியில் சேர்ந்த பிறகு அது மாறி, மறந்துவிட்டது.” என்றாள் பவதி.

“அவதியா? அநியாயமாக இருக்கிறதே, நேர் எதிர்மறையாக இருக்கிறதே என்று கூடவா நினைக்க மாட்டார்கள்? சுத்த அநியாயமடா தம்பி!” என்றாள் மதுமிதா.

“நிச்சயமாய்!” என்று ஒத்து ஊதினான் ஜெகன்.

“எதற்காகக் கஷ்டம்? என்னைக் கூடத்தான் சந்தி மந்தி என்பார்கள். “பூ” என்று ஊதி விட்டு விடுவேன்.”  என்றாள் வாசந்தி.

சிரித்து, “ஆனால் இரண்டாவது சொன்ன பெயர் உனக்கு ரொம்பப் பொருத்தமாகவே இருந்திருக்கும் என்று தோன்றுகிறதே!” என்றான் ஜெகன் கிண்டலாக.

“ம்ம்! இருக்கும் இருக்கும். இவ்வளவு சொல்கிறீர்களே, உங்கள் பெயரில் என்னென்ன மறைந்து கிடக்கிறதோ? வெறும் ஜெகன் என்று வைத்திருக்க மாட்டார்களே!”

தம்பி சைகை செய்வதைக் கவனியாதவள் போல, “சரியாகச் சொன்னாய் வசு. இவனது முழுப் பெயர். . பூரி ஜெகந்நாதன். ஒரிஸ்ஸாவில் அந்த ஆலயத்துக்குப் பாட்டி போய் வந்தபோது இவன் பிறந்தானாம்.” என்று சொல்லியே தீர்த்தாள். மது.

“ஓஹோ! சார் பெயரை ஏன் சுருக்கிக் கொண்டார் என்று இப்போது புரிகிறது. இரண்டு பூரி, மூன்று பூரி என்று பசங்கள் பிய்த்துத் தின்றுவிடுவார்களோ என்று பயந்து, நடுங்கி பூரியை விட்டுவிட்டார்! சரியாகக் கண்டுபிடித்தேனா?” என்று வாசந்தி வினவினாள்.

“சரியான நாட்டுக் கோழி முட்டைதான் மதிப்பெண்ணாகக் கிடைக்கும். “ என்றான் ஜெகன். “ஒன்று நான் யாருக்கும் எதற்காகவும் பயப்பட்டதில்லை. அடுத்தது, எனக்குப் பெயரை வைத்ததும் அதைச் சுருக்கிப் பள்ளிக்குப் பெயர் கொடுத்ததும் வரிசைப்படி என் தாத்தாபாட்டியும், அப்பா அம்மாவுமே. அந்தச் சிறு வயதில் இதெல்லாம் பெரியவர்கள் செய்வதுதானே? நீயே சொல்லு.” என்றான் ஜெகன்.

அவனே தொடர்ந்து “ஆனால், சில . .சமயம் பொருத்தம் தோன்றும் வண்ணமாகவும் வைத்து விடுகிறார்கள்!” என்று கூறி நகைக்கவும் எல்லோரும் அதில் சேர்ந்து கொண்டனர்.

“உங்களுக்குக் கொஞ்சம் துணிச்சல் அதிகம் போலத் தெரிகிறது பூரி சார். ஆனால் என் அப்பா அப்படியல்ல.” என்றாள் வாசந்தி.

குற்றம் சாட்டும் பார்வையோடு, “இதற்காகத்தான் சொல்லாதே என்று சைகை செய்தேன். இந்தப் பூரி மசாலாவையெல்லாம் வீட்டுக்குள் மட்டும் வைத்துக்கொள் தாயே! பவதி, ப்ளீஸ் கொஞ்சம் எடுத்துச் சொல்லு. “ என்று பவதியிடம் உதவி கேட்டான் ஜெகன்.

“வசு விவரம் அறிந்தவள் ஜெகன். இது போல விஷயங்களை வீட்டுக்குள் மட்டும்தான் வைத்துக் கொள்ளுவாள். சைகாலஜி படிக்கிறவளுக்கு இது கூடவா தெரியாது?” என்று தங்கையிடம் பார்வையால் பேசினாள் பவதி.

“ஆமாம். நாங்கள் எல்லோருமே அப்படித்தான் செய்வது. என் அப்பா கூட அம்மாவைத் திட்ட வேண்டுமானால் கடைசி இரண்டு

எழுத்தே என்று, அதையும் முணுமுணுப்பாகத்தான் கூறுவார். அதைக் கூட நாங்கள் வெளியே சொன்னது கிடையாது.” என்றாள் வாசந்தி.

“ககடைசி இரண்டு எழுத் . .தா? தமிழில் கடைசி இரண்டு எழுத்துகள் றவும் னவும். அதில் அர்த்தமில்லை. ஆங்கிலத்தில் . .. “

“ஐயோ அதில்லை பூரிசார். அம்மாவின் பெயர் பத்மாசனி!” என்று கடைசி இரண்டு எழுத்துகளை அழுத்திச் சொன்னாள் வாசந்தி.

அவள் வாக்கியத்தை முடித்துக் கொண்டிருக்கும்போதே அவசரமாக, “சேசே. ஆன்ட்டியைப் போய் யாராவது “சனி” என்பார்களா? இது நிஜமாகவே கதை!” என்றாள் மதுமிதா.

“ஆனால் நான் கூட என் அப்பா மாதிரியே நாசூக்காகத்தான் குறிப்பிட்டேன். ஏதோ அர்த்தம் கண்டுபிடித்து வெளிப்படையாக அந்தப் பெயரைச் சொன்னது நீங்கள்தான். நீங்களேதான்!” என்று கைதட்டினாள் வாசந்தி.

“ஐயோ இல்லை இல்லை. கிடையவே கிடையாது! “ என்று மதுமிதா கத்த, “ஆமாம் ஆமாம்.” என்று வாசந்தி கீச்சிட சற்று நேரம் வீட்டில் ஒரே கலகலப்பாக இருந்தது.

ஜெகன் புதிதாகத் தொடங்கியிருந்த விழுப்புரம் கிளையைப் பார்க்க எல்லோருமாக ஒரு விடுமுறை நாளில் சென்று வந்தனர்.

அங்கே அவன் செய்திருந்த ஏற்பாடுகளைக் காட்டியபடி ஜெகன் அவர்களோடு கூடவே வந்தான்.

எல்லோருமாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது “பவதி, இந்தப் பக்கம் வாருங்கள். சிறுவர்களுக்காக ஒரு பகுதியை அமைத்துக் கொண்டிருக்கிறேன். அதைப் பார்த்து . .” என்று அவளை வெகு இயல்பாக ஜெகன் வேறு பக்கமாக அழைத்துச் சென்றான்.

பள்ளிச் சிறுவர்களுக்குத் தேவையான எல்லாம், புத்தகப் பைகள், எழுத வரையத் தேவையானவை, சீருடைத் துணிமணிகள், ஷு சாக்ஸ் . .எதையும் விட்டுவிடாமல் வயது வாரியாக அங்கே வைக்கப் பட்டிருந்தன.

அங்கே செய்திருப்பதை பவதிக்குக் காட்டி, வேறு என்னென்ன செய்யலாம் என்று அவன் கேட்டபோது, தேவை என்று சொல்ல எதுவுமே இருக்கவில்லை. பொருட்கள் எல்லாம் அவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து வாங்கி அடுக்கப்பட்டிருந்தன.

வியப்பும் பிரமிப்பும் கண்களில் பிரதிபலிக்க அவள் அதைச் சொன்னபோது பூரிப்பும் மகிழ்ச்சியுமாக அவனது கண்களும் ஒளிர்ந்தன.

சுற்றிப் பார்த்தவாறே மற்றவர்களும் அங்கே வந்து சேர்ந்தனர்.

வாயிலில் இருந்தபடியே உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு “ஹூம், இது இப்போதைக்கு மது அக்காவுக்கு மட்டும்தான்பயன்படும்!” என்றாள் வாசந்தி அசுவாரசியமாக. “ஆனால் உங்கள் அக்காவை விட்டுவிட்டு, இவளை ஏன் இங்கே கூட்டி வந்தீர்கள் ஜெகன் சார்?” என்று தொடர்ந்து விசாரித்தாள்.

ஒரு கணம் தடுமாறிவிட்டு ஜெகன் சமாளித்தான். “உன் அக்கா பவதி ஒரு பணக்காரப் பள்ளியில் டீச்சரம்மா என்பது உனக்குஞாபகமே இல்லை போலத் தெரிகிறதே! அவள் ஒரு வார்த்தை சொன்னால் எனக்கு எத்தனை பணக்கார வாடிக்கையாளர்கள் கிடைக்கக்கூடும்? ஒரு வியாபாரிக்கு வாடிக்கையாளர்தானே முக்கியமான சொத்து? இது கூடத் தெரியாமல் என்ன சைக்காலஜி படிக்கிறாயோ?” என்று அவளுக்கு ஒரு குட்டு வைத்து முடித்தான்.

“ஓ! அப்படியா விஷயம்? நல்ல ஐடியாதான். ஆனால் அக்கா, மறுபடியும் நீ ஓசி வேலை செய்யாதே. நீ அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கைக்கும் கணக்குப் போட்டுக் கறாராகக் கமிஷன் வாங்கி விடவேண்டும்! ஐம்பது சதவீதம்! ஏற்கனவே ஹோம் டெலிவரி மதிப்பீட்டில் கமிஷன் வாங்காமல் கொஞ்சம் ஏமாந்துவிட்டோம்! இப்போது விடக் கூடாது. பாதிக்குப் பாதியில் பைசா குறையாமல் வாங்கிவிடு! “ என்று அழுத்திச் சொன்னாள் தங்கை.

முகம் சிவக்க, “ஏய் சும்மா இருடி! கமிஷனாம், மண்ணாங்கட்டியாம். யார் காதிலும் விழுந்தால் என்ன எண்ணுவார்கள்? என்னைத் தப்பாக நினைக்க மாட்டார்களா?” என்று பவதி சஞ்சலத்துடன் சுற்றிலும் நோக்கினாள்.

“ஷ்! என்ன பவதி இது? விளையாட்டுப் பேச்சு. இதைப்போய்ப் பெரிதாக யாரேனும் எடுப்பார்களா? அசடு உளறுகிறது என்று விடாமல், அனாவசியமாக மனதை உளப்ப வேண்டாம்.” என்று பரிந்தான் ஜெகன்.

“சந்தடி சாக்கில் என்னை அசடு என்கிறீர்களா? இதைச் சும்மா விடுவதில்லை. ஒரு நாள் பழிக்குப் பழி வாங்குகிறேன் பாருங்கள்! கண்ணுக்குக் கண்! பல்லுக்குப் பல்! பேச்சுக்குப் பேச்சு! வாரர்த்தைக்கு வார்த்தை!” என்றாள் வாசந்தி வீராவேசமாக.

நிலைமை இலகுவாகிவிடச் சிரித்தபடியே எல்லோரும் மேலே நகர்ந்தனர்.

மதுமிதாவின் மனமும் வெகுவாகத் திடமுற்று வந்தது. அவளது பிரச்சினை பற்றிக் கண்ணீர் விடாமல் யோசித்துப் பேசினாள்.

“அந்தப் பெண் சுலேகா என் கணவருடைய செயலாளர்தான்.

முன்பெல்லாம் சற்று குண்டாக . . குண்டு என்று சொல்ல முடியாது., கொஞ்சம் மெலிந்தால் நன்றாக இருக்கும் என்று நானே நினைத்திருக்கிறேன். இப்போது பார்த்தால், ஒரு மாடல் மாதிரி மிகவும் கவர்ச்சியாகத் தெரிகிறாள். அதில்தான் மயங்கிவிட்டாரோ என்று இருக்கிறது. ஆனால், அப்படி இடையில் ஒருத்தியிடம் மயங்கி வழி மாறுவதானால், திருமணம், கணவன் மனைவி உறவு என்பதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது? என் விஷயம் வேறு. ஆனால் அவர் வேறு மாதிரி என்று ஆகிவிட்டது. எனவே அதற்குச் சரியாக என் வாழ்வை நானும் மாற்றி அமைத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். " என்றவள் அதற்கு ஏற்றவாறு ஆலோசிக்கலானாள்.

"எனக்கு என் மகள் இருக்கிறாள், பவதி. அவளுக்காகவேனும் இந்த "ஞை"ஞை"த்தனத்தை விட்டுத் திடமாக இருக்க வேண்டும்! " என்றாள்.

"பிரேமிதாவுக்காக மட்டுமல்ல. உங்களுக்காகவே நீங்கள் திடமாக இருக்க வேண்டும் அக்கா! மனதில் உறுதி வேண்டும் என்று பாரதியார் சொல்லியிருக்கும் ஒரு வரி போதுமே! அதைத் திரும்பத் திரும்பச் சொன்னாலே நன்கு நிமிர்ந்து விடுவீர்கள்." என்று ஊக்கம் கொடுத்துப் பேசினாள் பவதி.

இது போன்ற யோசனைகள், ஆலோசனைகளின் விளைவாகத் தன் அக்காவை இன்னும் கொஞ்ச நாட்கள் தன்னோடு தங்கியிருக்க அனுமதிக்குமாறு கெஞ்சிக் கேட்ட சித்தியிடம், "ஓகே சித்தி." என்று சாதாரணமாகவே ஒத்துக் கொண்டாள் மதுமிதா.

"எனக்கு இப்போது பரவாயில்லை சித்தி. முன்பு போலச் செய்கை அறியாத திகைப்பாகவும் இப்போது இல்லை. தாங்க முடியாத வேதைனையாகவும் . . இப்போதும் மிகப் பெரிய வேதனைதான். ஆனால் இரவும் பகலும் இந்த வேதனை மட்டும்தான் எல்லாம் என்பது போல இல்லை! சித்தி, அம்மாவும் அப்பாவும் பாவம், முடிந்தவரை அங்கே தங்கிவிட்டே வரட்டும். அடிக்கடி சென்று பார்க்க நீங்கள் என்ன அக்கம் பக்கத்திலேயா வீடு கட்டி வைத்திருக்கிறீர்கள்? அக்காவும் தங்கையும் ஆசை தீர வம்பளந்து முடித்த பிறகே அம்மாவை அனுப்புங்கள். ஆனால் அதற்காக ஒரேயடியாகத் தாமதமாக்கி விடாதீர்கள். அம்மாவின் வருகைக்காக நான் இங்கே காத்துக் கொண்டுதான் இருக்கிறேன். " என்று சற்றுத் தெம்புடனேயே கூறினாள்.

அதைப் பற்றித் தம்பியிடம் தெரிவிக்கும்போது, "அம்மாவைப் பார்க்க ஆசைதான் ஜெகன். ஆனால் அம்மா இங்கே வந்து என்னைப் பார்த்ததும் நிச்சயமாகத் தாங்க மாட்டாமல் அழுவார்கள். எனக்கும் கண்ணீரை நிறுத்த முடியாது. மறுபடி திடம் கெட்டுவிடக் கூடாதே

என்று இருக்கிறது. இருவரும் அழுது அழுது பழைய நிலைக்குப் போய்டக் கூடாது என்றுதான் அம்மா அப்பாவை இன்னும் கொஞ்ச நாள் தங்கிவிட்டு வரச் சொன்னேன். இந்தப் பயணமே நாம் போட்டுக் கொடுத்த திட்டம்., பாவம், தங்கையோடு சற்று நிம்மதியாகத்தான் இருக்கட்டுமே.” என்று உரைத்தாள்.

கேட்டுக் கொண்டிருந்தவனுக்கும் பெரிதும் ஆறுதலாக இருந்தது.

எப்படியும் ஒரு நாள் எதிர்கொண்டே ஆக வேண்டிய துன்பம் பெரிதாக இருக்கத்தான் செய்தது!

எதிர்பாராமல் தலையில் விழுந்த இடி அவனுடைய சகோதரியைப் பெரிதும் அதிர வைத்திருந்தது!

பவதி குடும்பத்தினரின் உதவியால் அந்த அதிர்ச்சி ஒருவாறு சமனப்பட்டு மதுமிதா ஒருவாறு திடப்பட்டுக் கொண்டிருந்தாள்.

இன்னும் கொஞ்சம் தைரியம் வந்துவிட்டால், அதன் பிறகு விதிப்படி என்ன நடந்தாலும் அக்கா நல்லபடியாக சமாளித்துவிடுவாள் என்று அவன் நம்பினான்.

நம்பியதைப் பவதியிடமும் கூறி, அந்த உதவிக்காக மறுபடியும் நன்றியுரைத்தான் அவன்.

“இந்த “நன்றி”யை விடவே மாட்டீர்களா? உங்களுடைய சகோதரியே என்றாலும், அவர்களை என் சொந்தம் போலவேதான் நான் உணர்கிறேன். ஆனால் நீங்கள் நன்றி சொல்லும்போதுதான் சற்று அன்னியமாகி விட்டது போலத் தோன்றுகிறது.” என்றாள் அவள்.

சற்றுத் திகைத்து “அன்னியமா? நீயா?!” என்று கேட்டான் அவன். “வேண்டுமானால் பார், இனி இந்த நன்றி என்கிற வார்த்தை என் வாயில் வரவே வராதும்மா! அதாவது உன்னிடம் மட்டும்.” என்றான் அவன்.

சிரிப்பு வந்தது அவளுக்கு.

ரசனையோடு பார்த்து “இந்தச் சிரிப்பு பார்க்க மிக அழகாக இருக்கிறது. இந்த அழகான காட்சியைத் தந்ததற்காக நன்றி கூறலாமா, கூடாதா?” என்று சீரியசாகக் கேட்டான் அவன்.

மீண்டும் சிரிக்கத் துடித்த உதடுகளை அடக்கியவண்ணம் “வரவர என் தங்கை மாதிரியே பேசுகிறீர்களே, ஜெகன்! கொஞ்ச நாளில் மித்தி போல ஆகி விடுவீர்கள் போல!” என்றாள் பவதி.

“அதாவது . . டீச்சரம்மா கூறுவது எனக்குச் சரியாகப் புரியவில்லை. ஆனால் மொத்தத்தில் நான் வயது குறைந்து

இளமையாகிக் கொண்டே போகிறேன் என்கிறாய். அதுதானே பொருள்? ஆனால் இந்தப் பாராட்டுக்கு நன்றி சொல்லாமல் எப்படி இருப்பது? வேண்டுமானால் அந்த வார்த்தையை விடுத்து, "சுக்ரியா" "தன்யவாத்" என்று வேறு மொழியில் உரைக்கட்டுமா?"

அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது பவதிக்கு. சிரித்து முடித்துவிட்டு, "உங்களுக்கு இன்று என்னவோ ஆகிவிட்டது, ஜெகன். வார்த்தைக்கு வார்த்தை என்னென்னவோ விளக்கம் சொல்கிறீர்கள். இன்னும் கொஞ்ச நேரம் இதைக் கேட்டால் எனக்கு மூளை குழம்பிவிடும். அதனால் இப்போது நான் கிளம்புகிறேன்." என்று ஓர் எட்டு எடுத்து வைத்தவளைக் கையைப் பற்றி நிறுத்தினான் ஜெகன்.

அவளுடன் பேச வேண்டும் என்று வரச் சொல்லியதே அவன்தான். அவன் கூப்பிட்டதும் அவள் வரவும் செய்தாள். ஆனால் இப்படிக் கையைப் பிடிப்பதெல்லாம் அவர்களுள் பழக்கமில்லை என்பதால் பவதி திகைப்புற்று நோக்கினாள்.

ஆனால் அவன் முகம் மலர்ந்திருந்தது. "நான் இன்று சந்தோஷமாக இருக்கிறேன், பவதி. தன் இழப்பிலேயே உழன்று கொண்டிருந்த மது அதிலிருந்து மீண்டிருக்கிறாள். இன்றைய நிலையில் அம்மா அப்பாவின் இடம் தன் அருகில் இருப்பது மட்டும்தான், அருகே இருந்து தன்னைத் தேற்றுவதுதான் அவர்களது கடமை என்பதே இதுவரை அவளது ஒரே கருத்தாக இருந்தது. ஆனால் அந்தத் "தன்"னிலிருந்து அக்கா மீண்டிருக்கிறாள். இனி அவள் நிமிர்ந்து விடுவாள். இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவே உன்னை வரச் சொன்னேன். இந்தச் சாதனை நடப்பதற்கு முக்கிய காரணம் நீதான் அல்லவா? நீயும் கூடவே உன் குடும்பமும். இதற்கு நன்றி சொல்லாமல் எப்படி இருப்பது? நீயே சொல்லு!" என்று பற்றியிருந்த கையைச் சற்று அழுத்திவிட்டு விடுவித்தான் அவன்.

"கை அள்ளித் தருகிறதே என்ற வாய் அதற்கு நன்றி சொல்வதா" என்று சொல்ல வாயெடுத்துவிட்டுச் சட்டென நிறுத்திக் கொண்டாள் பவதி.

அந்த அளவுக்கு அவர்களுக்குள் என்ன உறவு இருக்கிறது? விட்டால் அவளுக்கு அல்லவா மூளை புரண்டு விடும் போல இருக்கிறது!

சமாளித்து, "எனக்கும் மிகுந்த மகிழ்ச்சி ஜெகன். வீட்டில் நான் பாபாட நோட்டுகள் நிறையத் திருத்த வேண்டியிருக்கிறது. கிளம்பட்டுமா? பை!" என்றவள் அழகாகப் புன்னகைத்துவிட்டு அங்கிருந்து விரைந்தோடிச் சென்றுவிட்டாள்!

# அத்தியாயம் -8

ஜெகன் அவனது மகிழ்ச்சி பற்றிக் கூறியது முற்றிலும் உண்மையே!

சொல்லப் போனால், எப்படியோ இருந்த அக்காவின் குடும்பம் இப்படி உடைந்து விட்டதே என்று ஜெகன் உள்ளூர அளவற்ற வருத்தத்தில் இருந்தான். மிகுந்த வேதனை!

மதுமிதாவின் திருமணம் நடந்தபோது அவன் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருந்தான். கம்பீரமாக நின்று அருமைச் சகோதரியைக் கைப்பிடித்த அத்தானிடம் அவனுக்கு மிகுந்த பிரியம் இருந்தது.

அவனுடைய ஹீரோவே பிரதீபன்தான் எனலாம்.

கூடவே அவர் மனைவியைக் கொண்டாடிய விதம், குடும்பத்தில் முதல்  குழந்தையாகப் பிரேமிதா பிறந்து வளர்ந்தது, அப்போதும் மதுவின் விருப்பம் போல அவளைப் படிக்க வைத்தது, அவளது ஆலோசனைகளைத் தொழிலில் ஏற்றுகொண்டது, அதிலேயே மேலேமேலே கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து அவளுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வரை அளித்தது எல்லாமே பிரதீபன் மீது அவனுக்கு மிகுந்த மரியாதையையும், பிரியத்தையும் ஏற்படுத்தி இருந்தன.

கடந்த இந்த ஒன்பது ஆண்டுகளில் அவனும் படித்து முடித்துத் தந்தையோடு தொழிலில் ஈடுபட்டு, அதைப் பெரிதும் வளர்த்தும் இருந்தான்.

அவனிடம் பணி புரிந்தவர்களிடம் அவன் சகஜமாகப் பழகியதும் அவர்களது நன்மை தீமைகளில் பங்கேற்று அவர்களுக்காகச் சிலபல நல்ல திட்டங்களை அமுல்படுத்தியது போன்றவைகளில் தகப்பனாருடன் அவனுக்குச் சில உரசல்கள் நேர்ந்திருந்தன.

அப்போதெல்லாம் வீட்டுப் பெரியவர்ளுக்கும், அவனுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்பட்டுக் கடைசியாக ஜெகனின் விருப்பமே நடக்குமாறு பிரதீபன் செய்துவிடுவார். மருமகன் என்கிற உரிமையோடு பிரதீபன் பேசும்போது, பெரும்பாலும் கண்ணப்பன் அதை எதிர்ப்பதும் இல்லை.

வீட்டு மாப்பிள்ளை அல்லவா? அந்த மரியாதை!

கூடவே விளைவும் நல்லதாகவே இருக்கவே ஒருவாறு கண்ணப்பனும் மகனது திட்டங்களை எதிர்ப்பதை நிறுத்தியிருந்தார். ஜெகனும் தனது திட்டங்களை எந்தத் தடையுமின்றிச் செயல்படுத்தித் தொழிலில் ஜெயிக்கலானான்.

இதற்கெல்லாம் பிரதீபன் அவனுக்கு அளித்த ஆதரவே அடிப்படை என்று அறிந்திருந்த ஜெகனுக்கு அக்கா கணவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் இருந்தது.

இவை அனைத்துமே அக்கா கணவரின் ஒரு சறுக்கலில் . .ஒரு மாபெரும் சறுக்கலில் அழிந்து போயின. சாதாரணமாக அல்ல. மிகப் பெரிய ரணத்தை ..ஆழமான காயத்தைத் தந்துவிட்டே அழிந்தன. பிரதீபனின் இந்தப் பெரும் சறுக்கல், அவனுக்கும் பேரதிர்ச்சி அல்லவா?

பிரதீபனை ஜெகன் அறிந்ததே அக்கா கணவராகத்தானே?

ஜெகனுக்கே வலி அதிகம்தான். என்றாலும் பெரிய கோட்டிடம் சின்னக் கோடு போல, தமக்கை மதுமிதாவின் அதிர்ச்சி, அழுகையின் முன் அவனது வலி ஒன்றுமில்லாதது போலத் தோன்றியது.

அத்தோடு, அதிலேயே உழன்று கொண்டிருக்க முடியாமல் அன்றாட அலுவல்கள், புதிய கிளையின் அமைப்பு வேலைகள், கணக்கு வழக்குகள் என்று அவன் நேராகக் கட்டாயமாகக் கவனிக்க வேண்டிய அலுவல்கள் பல இருந்தன. அதனாலேயே அவனால் பெருமளவு இயல்பாக இருக்க முடிந்தது என்றும் சொல்லலாம்.

கூடவே தமக்கையைத் தேற்றும் கடமை வேறு.

ஆனால் மதுமிதாதான் இடிந்தே போய்விட்டாள். என்ன சொல்லியும் ஜெகனால் மூத்தவளைத் தேற்ற முடியவில்லை.

தாயின் ஓயாத கண்ணீர் மகளைப் பாதிக்க, அது மகளின் கல்வியைப் பாதிக்க, அது பவதியை இதன் உள்ளே கொணர்ந்து சேர்த்தது.

கடவுள் அருளால் அது ஒரு நல்ல திருப்பமாக அமைந்தது.

ஒருவாறு, மென்மையே உருவான தமக்கை தன் துன்பத்திலிருந்து திடசாலியாக மீள்கிறாள் என்பது அவனுக்கு மிகுந்த நிம்மதியைத் தந்தது.

இப்படியே போனால், தமக்கை பிரேமிதாவைக் கணவனின் துணையின்றித் தனியாகவே வளர்த்து ஆளாக்கி விடுவாள், அது அவளால் முடியும் என்கிற திடம் இப்போது அவனுக்கும் ஏற்பட்டிருந்தது.

இதை வித்திட்டு வளர்த்த பவதியும் அவளுடைய குடும்பமும் அக்கா தம்பியின் வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகவே ஆகியிருந்தனர்.

இப்படி அடி பட்ட மூவருமே சற்று இனிமையான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருந்த அப்போது மறுபடியும் அது நிகழ்ந்தது.

பிரேமிதாவின் பள்ளியில் மதிய உணவுக்கென்று ஒரு பெரிய ஏசி ஹால் உண்டு. அதில் உட்கார்ந்து சாப்பிட வசதியாக மேஜை நாற்காலிகள், கை கழுவத் தண்ணீர்க் குழாய் வசதிகள் எல்லாமே அமைக்கப் பட்டிருக்கும். மேற்பார்வையிட சில ஆயாக்கள் இருப்பார்கள். பொதுவாக அவர்கள் ரொம்பச் சின்னப் பிள்ளைகளைக் கவனித்து உண்ண வைப்பார்கள்.

பெரிய மாணவர்கள் உண்பது அவரவர் பொறுப்பாக இருந்தது.

செட்டாகச் சேர்ந்து உண்பது, ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்வது எல்லாமே நடக்கும். அவர்களுள் ஏதாவது தகராறு ஏற்படும்போது மட்டுமே ஆயாக்கள் அதில் தலையிட்டு அமைதிப்படுத்துவார்கள்.

மற்றபடி மதிய உணவு இடைவெளி, பாடங்களுக்கு இடையே ஓர் இனிய ஓய்வு நேரமாகவே மாணவர்களால் கருதப்பட்டது.

இடைப்பட்ட சில மாதங்களைப் போல அல்லாமல் பிரேமிதாவும் பழைய சினேகிதர்களோடு இப்போது இணைந்து பேசிச் சிரிப்பது பழக்கமாகிக் கொண்டிருந்தது.

அன்று உணவு இடைவெளி நேரத்துக்குச் சற்று முன்பாக ஒரு நீளக் கார் பள்ளியின் வெளியே வந்து நின்றது.

காரோட்டி, பள்ளி செக்யூரிடி ஆட்களுக்கு அறிமுகம் ஆனவரே.

மாலையில் பள்ளி முடியும் வரை கார்கள் உள்ளே வர அனுமதி கிடையாது. கார் வந்து செல்லும் பாதையின் பெரிய இரும்புக் கதவுகளும் மூடியே இருக்கும்.

ஆனால் மாணவர்களுக்கு ஏதாவது உணவு கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்றால், அப்படிக் கொண்டு வருகிறவர்களை அனுமதிப்பதற்காக ஒவ்வொருவராக உள்ளே வந்து போக வசதியாக ஒரு சின்ன கேட்டும் உண்டு.

அன்னியர்கள் யாரும் உள்ளே புகுந்துவிடாமல் காப்பதற்காக அங்கேயும் காவலுக்கு யாராவது இருப்பார்கள்.

அந்தச் சின்ன கேட்டின் வெளியே வந்து நின்ற காரின் டிரைவர் பரிச்சியம் ஆனவர் என்று கண்டு காவலாளி முறுவலித்துக் கையாட்டினான். டிரைவரும் பதிலாகக் கையசைக்க அந்தக் காரில் இருந்து இறங்கிய ஓர் அழகிய பெண் கையில் சிறு பையுடன் ஒயிலாக நடந்து சின்ன கேட் வழியே பள்ளிக்கு உள்ளே சென்றபோது அவளைக் காவலாளி தடுக்க நினைக்கவில்லை.

உணவு இடைவேளைக்கான மணி அடித்தபோது அந்தப் பெண் சாப்பாட்டு ஹாலின் வாயில் அருகே நின்றிருந்தாள்.

அங்கிருந்த ஆயா ஒருத்தியிடம் அவள் ஏதோ கேட்க, “இல்லை” என்பதுபோல எதிர்மறையாகத் தலையசைத்துப் பதிலளித்தாள் ஆயா.

ஆயாவிடம் தலையாட்டிவிட்டு, மேடையில் கேட்வாக் நடந்து காட்டும் ஒரு மாடலைப் போல அங்கே குறுக்கும் நெடுக்குமாக ஒயிலாக நடை பயின்று கொண்டிருந்தாள் அவள்.

உடன் படிப்போருடன் கலந்து பேசியபடியே உணவறைக்கு வந்த பிரமிதா வெகு அருகில் வந்த பிறகுதான், அந்த எழில் நடைக்காரியைப் பார்த்தாள்.

முகம் வெளுத்து நிறம் மாறிவிடச் சட்டெனச் சிறுமியின் கால்கள் பின்னடித்தன. பின்னே திரும்பி வந்த வழியே ஓடி விடலாமா என்று யோசிப்பவள் போல அவள் திரும்ப முயற்சிக்கும்போதே, “ப்ரேம் டார்லிங்!” என்ற கீச்சிடலுடன் அந்த மாடல் அழகி பிரேமிதாவின் ஒரு கையைப் பற்றிக் கொண்டாள்.

முகம் சிவந்துபோக வெளியே தெரியாமல் கையை விடுவித்துக்கொள்ள முயன்றாள் பிரேமிதா. அது இயலாது போகவே, “என்னை விடுங்க . .” என்றாள்  கண்ணீர்க் குரலில்.

ஆனால் அந்தப் பெண்ணின் பிடி மிக வலுவாக இருந்தது.

அத்தோடு, “என்னடீக் கண்ணு, உன் சின்னம்மாவிடம் உனக்கு என்ன ஒதுக்கம்? பார், உனக்காக என்ளனன்ன வாங்கி வந்திருக்கிறேன் பார்.” என்னு கிளிமொழியில் கொஞ்சியவாறு, கைப்பையில் இருந்த விலை உயர்ந்த சாக்கலேட்டை எடுத்துப் பிரேமிதாவிடம் நீட்டினாள் அந்தவள்.

சாக்கலேட்டை வாங்கிக் கொள்ளாமல் “எனக்குச் சாக்கலேட் வேண்டாம். மற்றவங்க யார் கிட்டேயும் எதையும் சும்மா வாங்கக்கூடாதின்னு எங்க அம்மா என்கிட்டே சொல்லியிருக்கிறாங்க. அதனாலே சாக்கலேட் வேண்டாம். என்னை விடுங்க!” என்று மீண்டும் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள் பிரேமிதா.

பல்லை நறநறவென்று கடித்தாள் அந்த அழகி. “உன் அம்மா ஒரு வைக்கோல் போர் . . . “ என்று ஆத்திரத்துடன் ஏதோ கூறிய அவள் வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்திவிட்டு வேறு சொன்னாள். “தானும் தின்னாது. மற்றவர்கள் உண்ணவும் விடாத ஜென்மம்!” என்றாள் கோபமாக.

அவளது வார்த்தைகளின் பொருள் சரியாகப் புரிபடாவிட்டாலும், குரலும் முகமும் எதையோ தெரிய வைக்க, “என் அம்மாவைத் திட்டுகிறீங்களா? எங்கம்மா நல்லவங்க. என்னை விடுங்க.” என்றாள் பிரேமிதா அழுகுரலில்.

ஹால் வாயிலில் ஏதோ வாக்குவாதம் நடப்பதை உணர்ந்த தலைமை ஆயா வெளியே வந்து, "என்னம்மா? குழந்தை கிட்டே என்ன தகராறு? " என்று கேட்டாள்.

"தகராறா? என் பிரேம் டார்லிங்கிடமா? பொறுப்பில்லாமல் ஏதேதோ பேசுகிறாயே ஆயா! நான் இவளுக்கு அம்மா ஆகப் போகிறவள். நானும் இவள் அப்பாவும் சீக்கிரமே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம். எங்களுடைய இந்தக் கண்மணிக்காக விலை உயர்ந்த வெளிநாட்டுச் சாக்கலேட்வாங்கி வந்தோம். அதைக் கொடுக்க வந்தால் தகராறு அது இது என்று உளறுகிறாயே!" என்றாள் அவள் அதட்டலாக.

ஆயாவுக்குக் கொஞ்சம் வெலவெலத்துவிட்டது.

இது பணக்காரப் புரவலர்களால் நடத்தப்படும் பள்ளி. அவர்கள் யாரையும் எதிரிட்டுக் கொள்ளக் கூடாது என்பது எழுதாத சட்டம்! அம்மாவோ, அம்மா ஆகப் போகிறவளோ எல்லாம் மேலிடம் சமடபந்தப்பட்டதே! எதற்கு வம்பு என்று எண்ணியவள், "பொண்ணோட வாசலிலேயே நிற்கிறியேன்னு என்னான்னு கேட்க வந்தேன். சீக்கிரமாச் சாக்கலேட்டைக் கொடுத்துவிட்டுப் போங்கம்மா." என்று கூறித் திரும்பிய ஆயா சற்று நின்றாள்.

"தப்பாக நினைச்சிடாதேம்மா. பாப்பா, இவங்க பேர் என்னம்மா?" என்று பிரேமிதாவிடம் விசாரித்தாள்.

"சுசுலேகா." என்றாள் பிரேமிதா.

சரிதானா என்று கேட்கத் திரும்புமுன் "என்ன சரிபார்த்து விட்டாயல்லவா? சந்தேகப்பட்டுக் கேட்டதற்கே உன் மேல் நடவடிக்கை எடுக்கச் சொல்ல வேண்டும். போகிறது என்று இந்த முறை உன்னை மன்னிக்கிறேன். தாய்க்கும் மகளுக்கும் இடையே வராமல் இனியேனும் இங்கிருந்து போய்த் . .போய்விடு." என்று அதட்டினாள் அந்த சுலேகா.

ஒரு கணம் யோசித்த ஆயா தயக்கத்துடன் உள்ளே நகர்ந்தாள்.

யார், என்ன என்று எந்தத் தொடர்புமே இல்லாத, தெரியாத புதியவர்களை செக்யூரிட்டி ஆட்கள் உள்ளே விட மாட்டார்கள். அந்த மாணவிக்கும் அவளைத் தெரிகிறது. தாய் மகள் என்றபோது அவள் கலங்கினாற்போலத் தோன்றினாலும் "இல்லை" என்று மறுக்கவில்லை.

அதாவது இந்த அழகி இடத்தைப் பிடித்துவிட்டாள் என்று தெரிகிறது. பெரிய இடத்து சமாசாரம்! இதில் நேரடியாகத் தலையிடுவது கஷ்டங்களை விலைக்கு வாங்குவது போலத்தான்.

எனவே ஒதுங்கிக் கொள்வது மேல் என்று ஆயா

முடிவெடுத்தாள்.

அப்படி என்ன ஆகிவிடப் போகிறது? உள்ளிருந்தபடி ஒரு கண்ணை இங்கே வைத்துக் கொண்டால், பிரச்சினை பெரிதாகும்போது, ஒருவேளை பெரிதானால் அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

அதை விடவும் . . .. அப்படிச் செய்தால் . . .பழி அவள் மேல் விழாமல் போக வழியும் கிடைக்கக் கூடும்!

சத்தமின்றி விலகிப் போனாள் ஆயா.

“எனக்குச் சாக்கலேட் வேண்டாம். என்னை விடுங்க. நான் போகணும் . .” என்று தன் கரத்தை விடுவித்துக்கொள்ள பிரேமிதா வெகுவாக முயன்றாள்.

“சரி. விட்டுவிடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.” என்றாள் சுலேகா.

“எஎன்னது?”

“சொல்கிறேன். பெரிதாக ஒன்றும் இல்லை. என்னோடு நீ ஒரு செல்ஃபீ எடுத்துக்கொள்ள வேண்டும்.” என்றாள் பெரியவள்.

சொன்னதோடு நிறுத்தாமல், சாக்கலேட்டைச் சிறுமியின் சாப்பாட்டுப் பையில் போட்டுவிட்டு பிரேமிதாவின் முழங்கைக்கு மேலாக அவளது கரத்தை அழுந்தப் பிடித்து, “ம். சிரி படத்தில் உன் முகம் சிரித்தாற்போல இருக்க வேண்டும். ம், சிரி சிரி என்கிறேனே புரியவில்லை. சந்தோஷமாகச் சிரித்தபடி போஸ் கொடுக்க வேண்டும். “

என்று அதட்டினாள் சுலேகா.

“ஐய்யோ எனக்கு வலிக்குது. விடுங்க. எனக்கு செல்ஃபி வேண்டாம். என்றுமே வேண்டாம் . .” என்றபடி மறுபடியும் தன்னை விடுவித்துக்கொள்ள பிரேமிதா முயன்றாள்.

“உனக்கு வேண்டாமடி. ஆனால் உன் அப்பனுக்காக . . .சை, ஒழுங்காக நில். பல்லை நன்றாகக் காட்டு! ஈ . .என்று இளி. அதுதான் இளி என்கிறேனே, இந்தப் பள்ளியில் என்னதான் படிக்கிறாய்? ஒன்று சொன்னால் செய்யத் தெரியவில்லை? பல்லை நன்றாக . . .” என்று அதட்டியவாறே செல்ஃபி எடுப்பதற்காக மொபைலை வாகாக வைத்துத் தன்னையும் சிறுமியையும் சேர்த்துப் படமெடுக்க முயன்றாள் சுலேகா.

“என்ன நடக்கிறது இங்கே?”

பவதியின் குரல் அழுத்தத்துடன் கேட்கவும், “மிஸ் . . “ என்று கதறியபடி, குரங்குப் பிடியாய் பற்றியிருந்த சுலேகாவின்

கைப்பிடியை முழு மூச்சுடன் முயன்று உதறிவிட்டுத் தன் ஆசிரியையிடம் பாய்ந்து ஓடிப்போனாள் பிரேமிதா.

பவதியின் கையைப் பிடித்துகொண்டு அவள் பின்னே பாதி மறைந்தாற்போல நின்று மிரட்சியுடன் எட்டிப் பார்த்தாள்.

ஒண்டிக்கொண்டு நின்ற சிறு பெண்ணின் நெஞ்சு படபடவென்று வேகமாகத் துடிப்பதை உணர்ந்த பவதி ஒரு கையால் அவளை லேசாக அணைத்தபடி “யார் நீங்கள்? உணவு நேரத்தில் பிரேமிதாவைச் சாப்பிட விடாமல் தடுக்கிறீர்கள் போலத் தெரிகிறதே?” என்று கண்டிப்புடன் கேட்டாள்.

ஒரு கணம் திகைத்துத் தயங்கியபோதும் மறு கணமே ஆங்காரமாய் நிமிர்ந்து, “அதைக் கேட்க நீ யாருடீ?” என்று கத்தினாள் சுலேகா.

பவதிக்கு விவரம் தெரிவித்தவள் தலைமை ஆயாவே. போஸ்டரில் இருந்து இறங்கி வந்த மாடல் மாதிரி நின்ற சுலேகாவை நேரடியாக எதிர்க்கும் தைரியம் இல்லாது போனாலும் ஓரளவு கவனித்துக்கொண்டே இருந்ததால் ஹாலின் வாயில் பகுதியில் நடந்த எதுவும் அவளது பார்வைக்குத் தப்பவில்லை.

அந்தப் புதியவளை மறுக்கும் தைரியம் அந்த மாணவிக்கும் இல்லை என்பது ஆயாவுக்குத் தெளிவாகப் புரிந்தது.

பொதுவாக மாணவர்கள் அந்தந்த வகுப்பு ஆசிரியர்களின் பொறுப்பாவார்கள். படிப்பு, நடத்தை பற்றிக் கவனித்துதான் “ரிப்போர்ட் கார்”டில் குணம் பற்றி ஆசிரியர்கள் எழுதித் தருவார்கள்.

பிரேமிதாவுடைய வகுப்பு ஆசிரியையான பவதியிடம் நடந்த விவரத்தைக் கூறிவிட்டால், மேல் நடவடிக்கை அவளது பொறுப்பாகிவிடும்!

புத்திசாலித்தனமாக யோசித்து, பவதியை வரவழைத்தாள் தலைமை ஆயா.

ஆனால் ஓர் அவசரத்தில் இருந்த சுலேகா தான் வந்த காரியம் நிறைவேறாமல் விடுவதாக இல்லை.

அத்தோடு, மகள் படிக்கும் பள்ளிக்காகப் பிரதீபன் அளிக்கும் செக் தொகை எவ்வளவு என்று அலுவலகத்தில் அவள் வகிக்கும் பதவியின் மூலமாக சுலேகாவுக்குத் தெரியும். அவ்வளவு பணத்தை அள்ளிக் கொடுக்கும் பிரதீபனையே வளைத்துவிட்ட அவளுக்கு இல்லாத உரிமையா?

அவளது கேள்விக்குப் பதிலாக, “நான் பிரேமிதாவுடைய வகுப்பு ஆசிரியை. பள்ளியில் அவள் இருக்கும்போது, அவளது பொறுப்பு

என்னுடையது. அதனால் இப்போது அவளை உணவருந்த விட்டுவிட்டு நீங்கள் விலகிப் போங்கள்.” என்றாள் பவதி.

ஆக அங்கே சம்பளத்துக்கு வேலை செய்யும் வெறும் ஓர் ஆசிரியை இவள்! இருந்திருந்து அவளை அதட்டிக் கேட்பதா? பிரேமிதாவை என்னமோ சொந்தம் போல அணைத்துக்கொண்டு நிற்கிறாள்! விலகிப் போ என்று உத்திரவு வேறு போடுகிறாள்!

சீக்கிரமே இவளை இந்தப் பள்ளியை விட்டே விரட்ட வேண்டும்!

அதற்குமுன் அந்த உரிமையைப் பெறுவதற்காகச் செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் செய்து முடிக்க வேண்டும்! எல்லாவற்றுக்கும் இடையூறாக வந்து நிற்பதோடு துணிச்சலாக ஏவ வேறு செய்கிறாளே!

ஆத்திரத்துடன், “இதோபார், பிரேம் டார்லிங் என் மகள். . .” எனுமுன் குறுக்கிட்டு “இல்லையே் என்றாள் பவதி.

“பிரேமிதாவுடைய தாயாரை எனக்குத் தெரியும். அது நீங்களில்லை!”

“ஏய்! என்ன நீ? நான் சொல்லி முடிக்குமுன்னே குறுக்கே குறுக்கே பேசுகிறாயே! இதற்கே உன்னை டிஸ்மிஸ் பண்ண வேண்டும். பார்த்துக் கொண்டே இரு. பிரதீபை நான் மணந்ததும் முதல் வேலை உன் வேலையைக் காலி பண்ணுவதுதான்!” என்று கத்தினாள் சுலேகா.

பிள்ளைகள் பாதிச் சாப்பாட்டில் எழுந்து வந்து வாய் பார்ப்பதைக் கண்ட பவதி வேறு முடிவு செய்தாள்.

பயந்து நெஞ்சு படபடக்கும் பிரேமிதாவை இவளிடம் விடுவது தவறாகும். விளைவு என்ன ஆனாலும் அது கூடாது. கிட்டத்தட்டத் தேறி வந்தவிட்ட இந்தச் சின்னப் பெண்ணின் மனதில் மறுபடியும் காயம் பட்டுவிடக் கூடாது.

தன் விருப்பமாக யாரையும் அவள் ஏவ இயலாது. கேவலமானவள் என்று தெரிந்தபோதும் இந்தப் பெண்ணை வெளியேற்ற அவளுக்கு அதிகாரமில்லை.

சுற்று வராந்தாவில் சற்றுத் தொலைவில் நின்று பிரேமிதாவை பரிவும் வருத்தமுமாகப் பார்த்தபடி கையைப் பிசைந்துகொண்டு வெள்ளைச் சீருடையில் நின்ற மத்திம வயது மனிதரைப் பார்த்ததும் பவதிக்கு ஒன்று தோன்றியது.

வந்திருப்பவள் யார் என்பது தெரிந்துவிட்டது. எனவே அந்த மனிதர் யாராக இருக்கக் கூடும் என்று ஊகிக்கவும் முடிந்தது.

என்ன செய்வது என்று சட்டென முடிவு செய்து, ஆயாவை அருகே அழைத்தாள். “ஆயா, இந்த அம்மாவைப் பெரிய டீச்சரம்மாவின் அறைக்கு அழைத்துப் போங்கள். பாப்பா பயந்து போயிருப்பதால் அவளிடம் மெல்லப் பேசிச் சாப்பிட வைத்து அங்கே அழைத்து வருகிறேன். என்ன செய்ய வேண்டுமோ, பார்த்துப் பெரிய மேடமே முடிவு செய்யட்டும்.” என்றாள்.

இவள் சொல்லிச் செய்வதா என்று தோன்றியபோதும், சுலேகா இதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஏனெனில், பிரதீபன் அனுப்பும் பணத்தின் மதிப்பு இந்த முட்டாள் ஆசிரியையை விட தலைமை ஆசிரியைக்கு நன்றாகத் தெரியும்.

பள்ளி நடத்தும் சில விழாக்கள், சமூக சேவை நிகழ்ச்சிகளுக்கு நன்கொடைத் தொகை மற்றும் விழா அமைப்புகள் பற்றி எம்டியுடைய செயலாளர் என்கிற நிலையில் இருந்து, பிரின்சியோடு சுலேகா நேரடியாகவே பேசியிருக்கிறாள்.

நயந்து நயந்து பேசுவார் அந்தத் தலைமை ஆசிரியை.

செயலாளருக்கே அந்த மரியாதை எனும்போது மனைவியாகப் போகிறாள் என்றால் அந்தம்மா எத்தனை சலாம் போடக் கூடும்?

பிரின்சியிடம் அனுப்பி வைத்தால் என்னவோ நடக்கும் என்று கருதிப் பெரிய முட்டாள்த்தனம் செய்துவிட்டாள் இந்த ஆசிரியை என்று சுலேகா நினைத்தாள். பிரின்சி பெயரைச் சொன்னால் அரளும் மாணவர்களைப் போலப் அவளும் பயந்து நடுங்குவாள் என்று எண்ணினாள் போலும்.

இவள் பேசிய விதத்துக்கு, பிரின்சியிடம் சொல்லித் தோப்புக்கரணம் போடச் சொல்ல வேண்டும் என்று உள்ளூரக் கறுவினாள்.

தோப்புக்கரணம் போடுவது எல்லாம் இப்போது பள்ளிகளில் பழக்கம் இருக்கிறதோ என்னவோ, குறைந்த பட்சமாக இவளை மன்னிப்புக் கேட்க வைக்க வேண்டும்! காலில் விழாத குறையாக!

எப்படியும் பிரேமிதாவோடு நல்லபடியாக செல்ஃபி எடுத்தே ஆக வேண்டும். அதை வைத்துச் செய்ய வேண்டிய முக்கியமான வேலை ஒன்று இருக்கிறது!

எனவே “அதுவும் நல்லதுதான். நான் கூட பிரின்சியிடம் நிறையப் பேச வேண்டி இருக்கிறது. என்னைக் கூட்டிப் போ ஆயா!” என்று ஆயாவுக்கு உத்திரவிட்டபடி சுலேகா அலுவலகக் கட்டிடங்களின் பக்கமாகத் திரும்பினாள்.

அவளோடு செல்லுமுன் பவதி ஆயாவைக் கூப்பிட்டு, “மேடத்தைப் பார்வையாளர் அறையில் உட்கார வைத்து ஜூஸ்

கொடுத்துக் குடித்தபின் கூட்டிப் போங்கள் ஆயா. அதற்குள்ளாக நானும் இந்தப் பாப்பாவைச் சாப்பிட வைத்துக் கூட்டி வருகிறேன். பாவம், பசியில் இவள் தலை சுற்றி விழுந்து விடக் கூடாதல்லவா? பெரிய டீச்சருக்கு அது பிடிக்காது. இதோ இவர்களுக்கும் பிரேமிதாவின் ஆரோக்கியம் முக்கியம்தானே?” என்று நல்லதனமாகத் தோன்றும் விதமாகப் பேசினாள் பவதி.

ஆசிரியை பயந்துவிட்டாள் என்று உள்ளூரக் கெக்கலி கொட்ட “அதற்கென்ன? என் மகள் தாராளமாகச் சாப்பிட்டு முடித்துவிட்டே வந்து சேரட்டும். நிச்சயமாக எனக்கு என் மகளின் சுகம்தான் முக்கியம். பார்வையாளர் அறை ஏசிதானே? என் டார்லிங் வரும் வரை அங்கேயே நான் காத்திருக்கிறேன். அதன் பிறகே பிரின்சியிடம் போகலாம். “ என்று ஒத்துக் கொண்டாள் சுலேகா.

அவர்கள் கண்ணுக்கு மறையவும், “உள்ளே போய்ச் சாப்பிடு. நானும் இதோ விரைவாக உன்னிடம் வந்துவிடுகிறேன்.” என்று பிரேமிதாவை சாப்பாட்டு ஹாலுக்குள் அனுப்பிவைத்தாள் பவதி.

அனுப்பியதுமே வெள்ளைச் சீருடைக்காரரை அருகே வருமாறு சைகை செய்தபடி தானும் வேகமாக அவரை நோக்கிச் சென்றாள்.

இருவரும் நெருங்கியதும், “வேலுதானே?” என்று வினவினாள்.

சற்றுத் திகைத்துவிட்டு “ஆ ஆமாம்மா. “என்றார் அவர்.

“பின்னே சும்மா நிற்கிறீர்கள்? செய்ய வேண்டியதைச் செய்வதுதானே? கையில் மொபைல் இருக்கிறதுதானே? பயன்படுத்துங்கள்!” என்று வேகமாகக் கூறிவிட்டு மடமடவென்று நடந்து பிரேமிதாவிடம் சென்றுவிட்டாள் பவதி.

அவளை மேலும் திகைப்புடன் நோக்கியபடி தன் செல்ஃபோனை எடுத்தார் அந்தக் காரோட்டி.

# அத்தியாயம் -9

அருகே அமர்ந்து பிரேமிதாவைச் சற்று வற்புறுத்தியே உண்ண வைத்தபடி பவதி வேகமாக யோசித்தாள்.

வந்தவள் யார் என்பது அவளது பறைசாற்றலால் பவதிக்குப் புரிந்தது. ஆனால் இவள் இங்கே எதற்காக வந்தாள்? அதுவும் இவ்வளவு தூரம் வந்தது மட்டுமின்றி, பிரேமிதாவிடம் என்ன வம்பு?

செல்ஃபி எடுப்பது அப்படி என்ன முக்கியம்?

சில மாதங்களாகவே பிரேமிதாவுடைய தந்தை பள்ளியின் பக்கம் வரவில்லை.

மதுமிதாவும் சமீபத்தில்தான் அவ்வப்போது வரத் தொடங்கியிருந்தாள்.

ஒருவேளை மனைவி மகளை நேரில் சந்திக்க அந்தத் தந்தையின் மனம் கூசுகிறதோ? ஆனால் துணிந்து தப்பு செய்துவிட்டு ஓடி ஒளிவது எப்படி சாத்தியம்?

எப்போது துணிந்து தப்பு செய்துவிட்டாரோ, அதே துணிவோடு விளைவையும் எதிர்கொண்டுதானே ஆகவேண்டும்?

ஆனால் ஒருவேளை தாயார் கூறுவது மெய்யானால் . . . ஆனால் அதுவும்தான் எப்படிச் சரியாகும்?

இன்றைய புதிய தலைமுறைப் பெண்ணான அவளால் இது போன்ற தப்புகளையோ, அவற்றை மன்னிப்பது பற்றியோ இலகுவாக ஒத்துக் கொள்ள முடியவில்லை.

ஆனால் கை விரல் ரேகை போல மனித மனமும் வேறு வேறுதானே? எப்படியும் மதுமிதா தினமும் செத்துப் பிழைப்பது நிற்கட்டும்!

நடக்கப் போவது இன்னதுதான் என்று தெளிவாகிவிட்டால், மதுமிதாவின் மனம் அதற்கேற்பச் செயல்படத் தொடங்கிவிடும்.

பிரேமிதா சாப்பிட்டு முடிக்குமுன் சுலேகா அவளை அழைத்து வருமாறு இரண்டு பேரை அனுப்பிவிட்டாள். இரண்டு பேருமே பிரின்சியின் அறையில் பணி புரிகிறவர்கள். அவர் சம்மதம் இன்றி வர மாட்டார்கள்.

இனியும் தாமதிக்க இயலாது என்று உணர்ந்து, பிரேமிதாவைக் கைகழுவி வரச்சொன்னாள்

அவள் வருமுன், தன் வகுப்பைச் சற்று நேரம் பார்த்துக் கொள்ளுமாறு சக ஆசிரியை பாலாவிடம் கேட்டுக் கொண்டாள்.

பிரேமிதா வந்து சேரவும் அவளைக் கூட்டிக்கொண்டு தலைமை ஆசிரியையின் அறைக்குச் சென்றாள்.

அங்கே பிரின்சியிடம் அந்த சுலேகா என்ன கதை சொல்லியிருக்கக் கூடும்? அவளை டிஸ்மிஸ் பண்ணப் போவதாக வேறு மிரட்டி இருக்கிறாள்!

புகார் சொல்லும்விதமாகப் பவதி எதையும் செய்யவில்லை என்பது உண்மையே. ஆனால் பணத்துக்காக ஒரு நல்ல குடும்பத்தைக் கலைக்கக் கூடியவள் மெய் பொய் பார்க்கப் போவதில்லை.

எப்படியும் பிரேமிதா துன்புறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!

பிரின்சியின் முகத்தில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் பொதுவாக அவர் எதையும் வெளியே காட்டிக் கொள்வதும் இல்லை.

இவர்கள் இருவரையும் பார்த்ததும், ஒரு புறமாகக் கிடந்த குஷனிட்ட இருக்கைகளைக் காட்டினார்.

நல்லவெளையாக நிற்க வைத்து விசாரிக்கவில்லை என்று எண்ணியவாறு நன்றியோடு அமர்ந்தாள் பவதி.

"நன்றி" முக்கியமாகப் பிரேமிதாவுக்காக. வரும்போதே சின்னவளின் கால்கள் தடுமாறியது அவளுக்கு அல்லவா தெரியும்!

"இங்கே வா கண்மணி . ." என்று சுலேகா அழைத்தது தெரியாதது போலப் பிரேமிதாவும் பவதியை ஒட்டிக்கொண்டே போய், அவள் அருகிலேயே அமர்ந்தாள்.

முகம் கடுக்க, "பாருங்கள் மேம், என் பெண்ணை எனக்கு எதிராக இவள் வசியம் பண்ணி வைத்திருக்கிறாள். விலை உயர்ந்த வெளிநாட்டுச் சாக்கலேட். பிரியமாக எனக்குத் தந்தார்கள். ஆனால் அதை என் மகள்தான் உண்ண வேண்டும் என்று இங்கே எடுத்து வந்தேன். என் ஆசைக் குழந்தையிடம் அதைக் கொடுக்க விடாமல் இவள் தடுக்கிறாள். பிரேம் குட்டி அசந்த நேரம் அதைப் பிடுங்கி வாயில் போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்துவிட்டாள்! இந்த மாதிரி கழிசடைகளை எல்லாம் ஏன் பணியில் வைத்திருக்கிறீர்கள்? பேசாமல் டிஸ்மிஸ் செய்யுங்கள். முக்கியமான பெரிய குடும்பத்து மனிதர்களுக்கு மரியாதை கொடுக்கத் தெரியவில்லை என்கிற ஒரு காரணமே போதும். இவள் சீட்டைக் கிழியுங்கள்!" என்று கீச்சுக் குரலில் படபடத்தாள் சுலேகா.

"கொஞ்சம் பொறுங்கள் மிஸ் சுலேகா. உங்களுக்கே தெரியும், இது பெரிய டோனர்களால் நடத்தப்படும் பள்ளி. போர்டு அங்கத்தினர்கள்தான் இது போன்ற விஷயங்களை முடிவு செய்ய வேண்டும். அத்தோடு மிஸ் பவதி மேல் இதுவரை எந்தப் புகாரும் வந்தது கிடையாது. .. "

அமைதியான குரலில் தலைமை ஆசிரியை எடுத்துச் சொன்னதை சுலேகா ஒப்பவில்லை.

“என்ன வரவில்லை?  இப்போது நான் குற்றம் சாட்டுகிறேனே இது போதாதா?”

“தவறாக எண்ணவேண்டாம் மிஸ் சுலேகா. ஆனால் எந்த உரிமையில் குற்றம் சாட்டுகிறீர்கள் என்று போர்டு மெம்பர்கள் கேள்வி எழுப்பக் கூடும். அதனால் . .”

குறுக்கிட்டு “ஏன்? ஒரு மாணவியுடைய தாயாருக்குப் புகார் செய்யும் உரிமை உண்டுதானே? பிரேமிதா என் ஆசை மகள் என்று தெரியாதா?” என்று கேட்டாள் சுலேகா.

“அது . . “ என்று லேசாகத் தொண்டையைச் செறுமிவிட்டு “அந்த உரிமை இன்னும் வந்த மாதிரி . . . அதிகாரப் பூர்வமாக அறிவிப்பு வரவில்லை என்பதால் . . “ என்று மறுபடியும் தொண்டையைச் செறுமினார் பிரின்சி.

கை தட்ட வேண்டும் போலத் தோன்றிய உந்துதலை அடக்கிக்கொண்டு பொம்மை போலச் சும்மா உட்கார்ந்திருந்தாள் பவதி.

என்ன மாதிரிக் குட்டு! மறுத்துச் சொல்லவே முடியாத மட்டம் தட்டல்!

இந்த மாதிரிப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகக் குறை சொல்ல முடியாதபடிக் காலம் தள்ளுவது என்றால் சும்மாவா?

ஆத்திரத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்த சுலேகா ஒன்றும் சொல்லாமலே வாயை மூடிக் கொண்டாள்.

என்ன சொல்ல முடியும்? எப்படியோ ஒரு பணக்கார மனிதனை மயக்கி ஒட்டிக் கொண்டாள். காற்றில் பறக்கும் தூசி கோபுரத்தில் கூடத்தான் போய் ஒட்டிக் கொள்கிறது.  ஆனால் ஒட்டிக் கொண்டாலே உரிமை வந்துவிடுமா?

இல்லை என்று சொல்லாமல் சொல்லிவிட்டாளே இந்தத் தலைமை ஆசிரியை!

ஆனால் சுலேகாவும் முட்டாள் அல்ல. மூளை வேலை இல்லாமல் இந்த அளவுக்கு வந்திருக்க முடியாது.

எனவே இப்போது தன் அதிகாரம் செல்லாது என்று சுலேகாவுக்குப் புரிந்தது.

கோபத்தை அடக்கி விழுங்கிக் கொண்டவளுக்கு, வந்த காரியம் நினைவு வந்தது.

அதுவல்லவா இப்போது முக்கியம்! அதை மறந்து கண்ட சில்லறை விஷயங்களில் மனதைச் செலுத்தியது தப்பு. வந்த காரியம் கடைசிவரை சரியாக நிறைவேறி விட்டால் அப்புறம் இந்த ஆசிரியை மட்டுமல்ல, தலைமை ஆசிரியையும் உட்பட எல்லோரையும் ஒரு கை பார்த்துவிடலாம். ஆதலால் . .

சுலேகாவின் முகபாவம் சட்டென மாறியது. வெகு அழகாகச் சாயமிட்ட உதடுகளில் மிக எழிலான புன்னகை மலர்ந்தது.

இதற்காகக் கண்ணாடி முன்னால் எத்தனை மணி நேரம் இருந்து பயிற்சி செய்தாளோ என்று எண்ணிவிட்டுச் சட்டென விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் பவதி.

கண்களிலும் மனதைப் படிக்க முடியுமே!

சுலேகா கண்களில் கனிவு சொட்டப் பிரேமிதாவைப் பார்த்து, “என் தங்கக்கட்டி! சே! அனாவசியமாக அந்த டீச்சர் அடித்த கூத்தில் நான் உன்னைக் கூட மறந்துவிட்டேன் பார்! வாடித் தங்கம், நாம் இருவருமாக சந்தோ . . ஷமாக ஒரு செல்ஃபீ எடுத்துக் கொள்ளுவோம். உன் பிரின்சி கூட அதைத் தடுக்க மாட்டார்கள். ஏன், அவர்களையும் சேர்த்தே கூட எடுக்கலாம். வாடாக் கண்ணும்மா!” என்று பிரேமிதாவைத் தேனொழுகும் குரலில் கூப்பிட்டாள்.

ஆனால் எப்போதும் விழிப்போடிருக்கும் தலைமை ஆசிரியை குறுக்கிட்டு, “சாரி மிஸ் சுலேகா. மாணவர்களிடையே பாரபட்சம் காட்டுகிற மாதிரி நான் தனிப்பட யாருடனும் ஒட்டி உறவாடுவது இல்லை. அதனால் உங்கள் விருப்பம் எதிலும் என்னைச் சேர்க்க வேண்டாம்.” என்றார் தெளிவாக.

ஆமாம். இந்தம்மா எப்படிப்பட்டவள் என்பதுதான் இப்போது அவளுக்கு முக்கியமாக்கும்? கொஞ்சம் ஐஸ் வைக்கலாம் என்று பார்த்தால் பெரிய பிகு பண்ணுகிறாளே என்று உள்ளூரக் கடுத்தபோதும் புன்னகை மாறாமலே, “கொஞ்சம் ஆர்வக் கோளாறாகிவிட்டது மேடம்! பிரேம் குட்டிக்குப் பெருமையாக இருக்குமே என்று எண்ணினேன். அவளது சந்தோஷம்பற்றி நினைக்கும்போது நான் என்னையே மறந்து போவேன். சாரி. மற்றபடி உங்களை எனக்குத் தெரியாதா? அது போகட்டும். இனி நான் என் பெண்ணைக் கூட்டிக்கொண்டு வெளியே போகலாமா? அவள் அப்பாவுக்கும் எனக்கும் திருமணம் நடக்கப் போவது தெரியுமல்லவா? அந்த வைபவத்துக்கு எங்கள் வீட்டு இளவரசிக்கு என்ன மாதிரி உடை வேண்டும் என்று கேட்க வேண்டும். அதற்கேற்ற நகைகள் . .. மேக்கப் . .எல்லாம் பேச வேண்டும். அதனால் அவளை என்னோடு கூட்டிப் போகிறேன் மேடம்!” என்று கூறியவாறே எழுந்து பிரேமிதாவை நெருங்கினாள்.

சுலேகா தன்னை நோக்கி வருவதைக் கண்ட பிரேமிதா சட்டென இருக்கையில் இருந்து குதித்து இறங்கி, பவதியின் நாற்காலியின் பின்னே போய் நின்றுகொண்டாள்.

பின்புறத்திலிருந்து பவதியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, “ஊகூம். இவங்க கூட நான் போகமாட்டேன். என்னைப் போக விடாதீங்க மிஸ். நான் உங்க கூடத்தான் இருப்பேன்! ஐயோ கிட்டே வராங்களே! வேண்டாம்னு சொல்லுங்க மிஸ்! “ என்று கெஞ்சலானாள்.

பதறித் துடித்தாள் எனலாம்.

பொறுக்க முடியாமல் அவளது கையைப்பற்றிக்கொண்டு பவதி தானும் எழுந்தாள். “மேடம், அவர்களுக்குத் தேவையானால், பிரேமிதாவின் வீட்டுக்குப் போய் அவளோடு பேசச் சொல்லுங்கள். பள்ளியில் வைத்து வலுக்கட்டாயமாக ஒரு சிறுமியை உரிமையற்ற யாருடனும் அனுப்ப நமக்குச் சட்டம் இல்லை. அத்தோடு, பிரேமிதா என் வகுப்பு மாணவி. இது அவளது வகுப்பு நேரம். நான் அவளை வகுப்புக்குக் கூட்டிப் போகிறேன். இவர்கள் என்ன பேசுவது என்றாலும், வகுப்பு முடிந்தபின் பேசிக் கொள்ளட்டும். அதுவும்கூட நம் பள்ளியில் வைத்து வேண்டாம். “ என்றாள் பவதி உறுதியான குரலில்.

நடப்பது நடக்கட்டும். மிஞ்சி மிஞ்சி என்ன? வேலை போகக் கூடும் அவ்வளவுதானே என்றாகிவிட்டது அவளுக்கு. எது எப்படி ஆனாலும் பிரேமிதாவின் மனம் காயப்படும் விதமாக எது நடக்கவும் அவளால் விட முடியாது.

கையைப் பிடித்து நிறுத்தி ஜெகன் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு நன்றி சொல்லிச் சில நாட்கள்தான் ஆகின்றன. அவனது மகிழ்ச்சியும் சிரிப்பும் கல்லில் செதுக்கியது போல அவள் மனதில் நிலைத்திருக்கும்போது அதை இன்னோருவர் அழிக்க விடுவாளா, என்ன?

அதுவும் அவனுடைய குடும்ப எதிரி!

பிரின்சியின் மேஜையில் இருந்த போன் கருவி மணியடித்தது.

தலைமை ஆசிரியையின் கவனம் அதில் செல்வதைப் பயன்படுத்திக்கொண்டு சுலோகா தாவி வந்து பிரேமிதாவைக் கைப்பற்ற முயன்றாள்.

சட்டெனப் பவதி இடையிலே புகுந்து மறித்துவிட, ஆத்திரத்துடன் சுலேகா அவளைப் பிடித்துத் தள்ளினாள்.

ஒரு கண்ணை இங்கே வைத்திருந்த பிரின்சி “உடனே அழைத்து வா.” என்று சொல்லி ஃபோன் கருவியை வைத்துவிட்டு, “கொஞ்சம்

உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள், சுலேகா. இங்கே ரசாபாசம் வேண்டாம்.” என்றார் குரலில் அழுத்தத்துடன்.

ஆனால் அன்று சுலேகா உறுதியான ஒரு திட்டத்துடன் வந்திருந்தாள்.

பலருக்கு இருப்பது போலவே அவளுக்கும் பணக்காரியாகும் ஆசை இருந்தது. அதற்கான வழிமுறைதான் அவளுக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவளைப் போன்ற பலரையும் போலக் கஷ்டப்பட்டு உழைத்து, சேமித்து சொத்து வாங்கி மெல்ல மெல்ல உயர்ந்து வசதியாக வாழலாம்தான்.

ஆனால் அந்த வசதி வரும்போது அவளுக்குத் தலை நரைத்துவிடாதா?

பிரதீபனது கட்டுமான நிறுவனத்தில் வேலை கிடைத்தபோது இதே ஏக்கம்தான்.

பிரதீபனுடைய செயலாளர் என்ற நிலைக்கு அவள் உயர்ந்தபோது அந்த ஏக்கம் சுலேகாவின் மனதில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

காரணம் மதுமிதா. எம்டியுடைய மனைவி! கணவனின் தொழிலில் ஈடுபாடும் அக்கறையும் இருந்ததால், கணவனும் அதை ஊக்குவித்ததால் மதுமிதா அடிக்கடி அலுவலகத்துக்கு வருவதுண்டு. விதவிதமான உடைகளில், அழகிய விலை உயர்ந்த நகைகளில் அவளைப் பார்க்கப் பார்க்க சுலேகாவின் நெஞ்சில் தீயே எரிந்தது.

மதுமிதாவுக்கும் அவளுக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான்.

இவள் அலுவலகத்தில் உழைத்துக் கொட்டுகிறாள், அந்த உழைப்பில் வரும் பணத்தில் மதுமிதா மினுக்குகிறாளே என்ற வயிறு எரிந்தாள்!

பிரதீபன் நிறுவனத்தில் புரண்ட கோடிகளைப்பற்றி அறிய அறிய அதையெல்லாம் தனதாக்கிக் கொள்ளும் வெறி அவளுக்கு உண்டாயிற்று.

அது எப்படி நடக்கும்?

இந்தச் செல்வம் அவளுக்குச் சொந்தமாக வேண்டுமானால் முதலில் பிரதீபனும் அவளுக்கு உடையவன் ஆக வேண்டும்.

எப்படி எப்படி என்று யோசித்து அணு அணுவாகத் திட்டம் தீட்டினாள்.

மதுமிதாவின் வெளிநாட்டுப் பயணம் அவளுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

மிகவும் கஷ்டப்பட்டு முயற்சிசெய்து பிரதீபனின் கவனத்தைக் கவர்ந்து, அவரது குடும்பத்தை அவளால் உடைத்துவிட முடிந்தது.

கணவனும் மனைவியும் பிரிந்தே போனார்கள். அதுவும் விவாகரத்துக்காக அவர்கள் பிரிந்தது சுலேகாவைப் பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. மதுமிதா காலி செய்துவிட்டுப் போனதும் அந்த வீட்டுக்கே போய் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தாள். சோஃபாக்களில் உட்கார்ந்து பார்த்தாள். டிரெஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்து அழகு பார்த்தாள்.

அதற்கு மேல் சுற்றிப் பார்க்க அவகாசம் இல்லாமல் பிரதீபனோடு அலுவலகத்துக்குக் கிளம்ப நேர்ந்தது.

நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துச் சென்றால் அந்த "நாளை" இன்னமும் வரவே காணோம். கணவன் மனைவி பிரிந்துவிட்ட இந்த இடத்திலேயே நங்கூரம் போட்டது போல விஷயம் நின்று போயிற்று! அரைக்கிணறு தாண்டிய நிலை! முக்கால் கிணறு என்றே சொல்லலாம்.

ஆனால், அரையோ முக்காலோ? எதனாலும்தான் என்ன பயன்? இதற்காகவா அவள் இவ்வளவு பாடுபட்டாள்?

பிரதீபனைத் தூண்டிவிட அவள் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தாள். அலுக்கி குலுக்கி வளைந்து நெளிந்து . . .ஆனால் ஒரு பயனும் கிட்டவில்லை. எப்படியோ மனிதர் சாமியாராகிவிட்டார்! மெய்யான சாமியார்!

விவாகரத்து எப்போது அடுத்து அவர்களது திருமணம் எப்போது என்று பரபரப்பாக இருந்த நிலை இப்போது பேச்சு மூச்சற்று அடங்கிப் போய்க் கொண்டிருந்தது.

இது ஒரேயடியாக ஒன்றுமில்லாமல் போய்விடுமுன், சுலேகா ஏதாவது செய்தாக வேண்டியிருந்தது.

மகள் மேல் பிரதீபனுக்கு மிகுந்த பாசம் உண்டு. அவ்வப்போது அதன் வெளிப்பாட்டை சுலேகா கண்டிருக்கிறாள். எட்டு வயதுப் பெண் என்றாலும் அவளைக் கண்டதும் ஒருதரம் தூக்கிச் சுற்றிவிட்டுத்தான் கீழே விடுவார்.

குடும்பத்தின் ஒரே சின்னவள் என்பதால் எல்லோருமே செல்லம் கொஞ்சுகிறார்கள் என்று சுலேகா சாதாரணமாகத்தான் எண்ணியிருந்தாள்.

காதலைப் பொழிந்த மனைவியையே மறக்கடித்து விட்டோம், இது என்ன கொசுறு என்று அலட்சியமாக நினைத்தது மாறித் தன் குறிக்கோளை அடைய பிரேமிதாவைப் பயன்படுத்தலாமோ என்று இப்போது சுலேகா யோசித்தாள்.

நன்கு யோசித்த பிறகு, அதுதான் ஒரே வழி என்று முடிவு செய்தாள்.

பிரேமிதாவோடு ஒட்டுதலாகத் தெரிகிறமாதிரி ஒரு செல்ஃபி எடுத்து, அதை “ஆசைத் தாயும் அன்பு மகளும்” என்று ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப் எல்லாவற்றிலும் போட்டுவிட்டால் அதற்கு மேல் கிணற்றில் போட்ட கல் மாதிரிப் பிரதீபன் இப்படிச் சும்மா இருக்க முடியாது அல்லவா?

பலரும் இது பற்றி அவரிடம் பேசும்போது அவரும் ஏதாவது பதில் சொல்லியாக வேண்டும்தானே? அடுத்து அவரது கவனம் மீண்டும் சுலேகா பக்கம் திரும்பும். விவாகரத்து, மறுமணம் எல்லாம் இருக்கிறதே என்று மனிதருக்குஞாபகம் வரும்! மேலே மேலே ஒவ்வொன்றாக நடந்தேறும்!

அதுவும் மகளும் அவளுமாக மகிழ்ச்சியோடு ஒட்டி நிற்பதைப் பார்க்கும்போது பிற்காலத்தைப் பற்றி அவருக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தாலும் அதுவும் அடிபட்டுப் போகும்!

இப்படி எண்ணித்தான் பிரேமிதாவோடு செல்ஃபி எடுப்பதற்காக சுலேகா பள்ளிக்கு வந்தது. அதுவும் கூட, பெரிய காரை வேலுவை ஓட்டச் செய்து பந்தாவாக வந்தால் பிரச்சினையற்றுப் பள்ளியினுள் செல்லலாம் என்கிற அவளது திட்டம் அதுவரை அப்படியே பலித்தது.

ஆனால் கெடுத்தது பிரேமிதாதான். அந்தக் குட்டிப் பிசாசு சாக்கலேட்டைக் கண்டதும் இளித்துக்கொண்டு அவளிடம் ஓடி வந்து வாங்கவுமில்லை., செல்ஃபிக்குப் பல்லைக் காட்டி நிற்கவுமில்லை!

சாப்பாட்டு அறை ஆயா, பிரேமிதாவுடைய வகுப்பு ஆசிரியை அந்தப் பவதி, தலைமை ஆசிரியை . . .எல்லாக் கழுதைகளும் சேர்ந்து ஒரு சாதாரண செல்ஃபியை உலக மகா யுத்தம் மாதிரிப் பெரிய பிரச்சினை ஆக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் என்ன பெரிய இடையூறு ஏற்பட்டாலும் அதைக் கண்டு அசந்து போகிறவள் இந்த சுலேகா அல்ல. வந்த வேலையை இடையிலே விட்டுவிடவும் மாட்டாள்!

இந்த நிலையை அடைவதற்காக எவ்வளவு திட்டம் போட்டு என்ன பாடு பட்டிருக்கிறாள்! அதெல்லாம் வீணாகிப் போக விட்டுவிடுவாளா என்ன?

இன்று இந்த செல்ஃபி எடுத்தே தீர வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

ஏனெனில் இவ்வளவு சர்ச்சைக்குப்பிறகு, இதற்கு இன்னொரு வாய்ப்புக் கிடைப்பது அரிது! அந்தக் குட்டிப்பிசாசின் மாமன்காரன் ஏதாவது பண்ணித் தடுத்து விடக் கூடும்!

ஒன்றே குறியாக பவதியைச் சுற்றிக் கையை நீட்டிப் பிரேமிதாவைப் பற்றி “இங்கே வாடீ!” என்று சுலேகா இழுத்தாள்.

“அவளை விடுங்கள்.” என்று பவதி தன் மாணவியை விடுவிக்க முயன்றாள்.

“அமைதி. அமைதி! இங்கே இப்படி நடந்துகொள்ளக் கூடாது மிஸ் சுலேகா!” என்று பிரின்சி அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்தார்.

இடையே “என்ன நடக்கிறது இங்கே?” என்று அதட்டலாக ஓர் ஆண் குரல் கேட்டது. அதன் பிறகு அறையே கப்சிப் என்றாகிவிட்டது.

# அத்தியாயம் -10

ஃபோட்டோ எடுக்கும்போது ஒரு காட்சி அப்படியே நிலைத்துவிடுமே அது போல தலைமை ஆசிரியையின் அறையில் அந்த ஒரு வினாடி எல்லாமே அசைவற்றுப் போயிற்று.

அதிலும் திகைப்பூண்டை மிதித்தது போல என்பார்கள், அது போலச் சற்றும் எதிர்பாராத அந்தக் குரலில் முழுக்க முழுக்கச் செயலற்றுப் போனவள் சுலேகாதான்.

ஆனால் உடனேயே விரைந்து முதல் ஆளாய்ச் சமாளித்துக் கொண்டவளும் அவளேதான்.

“அட பிரதீப்! நீநீங்களா? நீங்களேதானா டார்லிங்? என்ன அற்புதமான அதிசயம்! ஆனந்தமான ஆச்சரியம்! பாபாருங்கள், இப்போதுதான் எண்ணினேன், நீங்கள் இங்கே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று! நமக்குள் என்ன மாதிரி மன ஒற்றுமை பாருங்கள்! நீங்களே வந்துவிட்டீர்களே!” என்று வந்த மனிதரின் அருகில் சென்று அவரது தோளைப் பற்றித் தொங்கினாற்போல ஒட்டி நின்றாள்.

ஆக இவர்தான் பிரதீப்பா? வேற்றிடம் என்பது கூட இல்லாமல் தொத்தும் கிளி மாதிரி ஒட்டிக்கொண்டு நிற்கிறாளே! சட்டப்படியோ, சமுதாய முறையிலோ ஓர் உறவும் இல்லாமலே!

நல்ல குடும்பத்தைக் கெடுத்த அவளுக்குத்தான் நாகரீகம் கிடையாது. ஆனால் ஓர் எடுத்துக் காட்டாக சமூகத்தில் நிமிர்ந்து நிற்க வேண்டிய இந்த மனிதர்?

பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்பது கூட இல்லையே . . .என்று எண்ணமிடும்போதே, பிரேமிதாவும் இதைப் பார்ப்பாளே என்று பவதிக்குத் தோன்றியது.

தந்தையை விட்டுப் பார்வையை விலக்கவும் முடியாமல், பார்க்கவும் பிடிக்காமல் விக்கித்து நின்ற சிறுமியைப் பாதுகாப்பாகத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு சினத்துடன் பிரதீபனைப் பார்த்தாள்.

ஆனால் அந்தத் தந்தையின் கவனம் மகளிடம் இருந்தது.

அனிச்சையாக சுலேகாவின் கைப்பிடியை அகற்றியவர் மகளை நோக்கி “மித்திமா் என்று குரல் கரகரக்கக் கைகளை நீட்டினார்.

“அப். . அப்பா . !” என்று கதறியபோதும், பவதியை விட்டுப் பிரேமிதா நகரவில்லை. அவளது பார்வை கலக்கத்துடன் சுலேகாவிடம் பாய்ந்து மீண்டது.

ஆனால் ஒரு கையசைவால் சுலேகாவை நிறுத்திவிட்டு, ஓரெட்டு முன்னே வந்து மீண்டும் தந்தை அழைத்தபோது, பவதியே கையை விலக்கிக்கொள்ள, "அப்பா . .!" என்ற கூச்சலுடன் பிரேமிதா பிரதீபனிடம் ஓடிச் சென்றாள்.

ஆனால் "என் செல்லம்!" என்று ஆசையாக அவர் தூக்க முயன்றபோது "ஆ . !" என்று வலியில் துடித்துப் போனாள் சிறுமி.

எல்லோருக்குமே திகைப்புதான். "என்ன என்ன" என்று மற்றவர்கள் பதைக்க, மகளை முழுதும் தூக்காமலே கீழே விட்டுவிட்டு "என்னடாச் செல்லம்?" என்று பிரதீபன் மகளின் கையைத் தூக்கிப் பார்த்தார்.

கையின் உட்புறமாக நகங்கள் பதிந்த காயத்தோடு ரத்தக் கசிவும் தெரிந்தது.

ஆத்திரத்தில் கண்கள் சிவக்க, "இது எப்படி நேர்ந்தது? யார் வேலை இது?" என்று உறுமினார் பிரதீபன்.

யாரும் பதில் சொல்லாது போகவே "இது யாரால் நேர்ந்தது, மித்திமா?"என்று மகளிடம் குனிந்து கேட்டார் அவர்.

பல்லியாய்த் தந்தையிடம் ஒட்டிக்கொண்டு, கையை நீட்டி சுலேகாவைக் காட்டினாள் பிரேமிதா.

"இவளா?" என்று ஆத்திரமாக அவர் கேட்க, "ஆமாம்பா. செல்ஃபி எடுக்கணும் வான்னு என் கையை அழுத்திப் பிடித்து அசையாமல் நிற்க வைக்கப் பார்த்தாங்கப்பா. வலிக்குது வலிக்குதுன்னு சொன்னபோதும் விடவே இல்லைப்பா!" என்று அப்பா அப்பா என்று மீண்டும் மீண்டும் அழைத்து மகிழ்ந்தாள் அந்தச் சின்னப்பெண்!

மகளைத் தன்னோடு சேர்த்து ஒட்டிப் பிடித்துக்கொண்டு, சுலேகாவைத் தீவிழியால் பிரதீபன் சுட்டார். "உனக்கு எவ்வளவு தைரியம்?"

தன் கனவுக் கோட்டை நொறுங்குவது போல உணர்ந்த சுலேகா சற்று முன் காட்டிய அகங்காரத்தை அடியோடு விட்டுவிட்டுக் கெஞ்சலானாள். "ஐயோ, அப்படி என்னைப் பார்க்காதீர்கள், பிரதீப்! நான் உங்கள் வருங்கால மனைவி அல்லவா? உங்கள் மகளுடைய அன்பு அன்னை! என் தங்கத்தோடு ஆசையாக ஒரு செல்ஃபி எடுக்க முயற்சி செய்தேன். அவ்வளவே. அவளிடம் யார் என்ன சொல்லி வைத்தார்களோ? அவளை நான் கொல்லப் போவது போல திமிறிக் கையை முரட்டுத்தனமாக அவள் இழுத்ததில் தெரியாமல் எப்படியோ என் நகம் பதிந்துவிட்டது போல! ஆனால் இதில் என் தப்பு எதுவுமில்லை டார்லிங்! ப்ளீஸ், நான் சொல்வதை நம்புங்கள் டியர்."

என்று மன்றாடினாள்.

பிரதீபனின் முகம் கடுக்கக் கண்டு "நிஜம் டார்லிங்! எல்லோருமாக, இந்த டீச்சர் உட்பட எல்லோரும் நம் பெண் மனதைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் . ." என்று அவள் மேலும் சொல்லிக்கொண்டே போக "போதும்!" என்று கர்ஜித்தார் பிரதீபன்.

"இதற்கு மேல் நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது. இனி உனக்கும் எனக்கும் எதுவும் கிடையாது. வேலையை விட்டுக் கூடப் போய்விடு . . ." என்ற பிரதீபனின் பேச்சில் குறுக்கிட்டு சுலேகா பதறிப் படபடத்தாள்.

"ஐயோ, அப்படிச் சொல்லாதீர்கள் பிரதீப். உங்களுக்காக நான் என்னென்ன தியாகங்கள் செய்திருக்கிறேன் தெரியுமா? "

"உளறாதே! தியாகமாவது மண்ணாவது ஒன்றும் கிடையாது. உளறிக் கொட்டாமல் வெளியேறு."

"என்னாது? உளறலா?" என்று ஆத்திரத்துடன் அலறிய சுலேகா கட்டுப்பாடிழந்து கண்டபடி கத்தலானாள். "இரண்டு வருஷம்! கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக நான் வயிறு நிறைய உண்டதே கிடையாது. உடல் மெலிந்து இந்தக் கொடியிடை வருவதற்காக உணவைத் தியாகம் செய்தேன். அப்புறம் ஜிம்! வளைவு சுழிவான இந்த அழகான உடல் கட்டு வருவதற்கான பயிற்சி எவ்வளவு செய்திருப்பேன் தெரியுமா? அதற்கும் மேலாக அந்த "ஜிம்"மில் இதற்குக் கட்டணம் எவ்வளவு என்று உனக்குத் தெரியுமா? என் சேமிப்பை எல்லாம் காலி செய்துதான் இந்த அழகைப் பெற முடிந்தது. அதைக் காட்டி உன்னைப் பிடிக்கவும் என்னால் முடிந்தது. நீயானால் நான் தியாகமே பண்ணவில்லை என்கிறாயே! சுவையான வயிறு நிறைந்த உணவு, சுகமான ஓய்வு! சேமிப்பு! எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கிறேன், பிரதீப்! அதை வீணாக்க முடியாது! நீங்கள் என்னை மணந்துதான் ஆக வேண்டும்!" என்று பொரிந்து கொட்டினாள்.

அருவருப்புடன் அவளைப் பார்த்த பிரதீபனின் பார்வை அவமானத்துடன் சுழன்றது.

சுழன்ற பார்வையில் வேறு சிலவும் தென்பட்டன.

அடித்துக் கொண்டிருந்த இரண்டு ஃபோன் கருவிகள். பிரின்சியின் கையெழுத்துக்காக வெளியே நிற்கும் பணியாட்கள்!

எல்லாம் கவனித்துவிட்டு, "சாரி மேடம். உங்கள் பணிக்கு வெகுவாக இடையூறு செய்துவிட்டோம். மன்னியுங்கள். நாங்கன் வெளியே சென்று எங்களது விவகாரத்தை முடித்துக் கொள்கிறோம்!"

என்று கூறிவிட்டு மகளைக் கையில் பிடித்தபடி அங்கிருந்து  பிரதீபன் வெளியேறினார்.

தயக்கத்துடன் நோக்கிவிட்டு,  " நான் வேண்டுமானால் வகுப்புக்குப் போகட்டுமா மேடம்?" என்று பிரின்சியிடம் அனுமதி கேட்டாள் பவதி.

அவளது மனம் பிரேமிதாவுக்குத் துணையாகச் செல்லத்தான் துடித்தது. ஆனால் கடமை என்று ஒன்று இருக்கிறதே!

ஆனால் தலைமை ஆசிரியையின் கண்களும் கூர்மையானவையே.

மறுப்பாய்த் தலையசைத்து, "வகுப்பைப் பார்த்துக் கொள்ளத்தான் இன்னொரு ஆசிரியையிடம் ஏற்பாடு செய்துவிட்டாயே. அந்த மாணவி பயப்படுவது போலத் தெரிகிறது. திடத்துக்கும் தைரியத்துக்கும் வகுப்பு ஆசிரியையான உன்னைத் தேடுகிறாள். அதனால் மற்றவர்கள் என்ன முடிவெடுத்தாலும், சின்னப் பெண்ணின் மனம் கலைந்துவிடாமல் அவளோடு கூட இருந்து நீ கவனித்துக் கொள்!" என்றார்.

நன்றியோடு பவதி மற்றவர்களைத் தேடிப் போனாள்.

பெரும்பாலும் பார்வையாளர் அறைக்கே பிரதீபன் சென்றிருக்கக் கூடும் எனபது பவதியின் ஊகம். இந்தப் பள்ளியுடைய புரவலர்களில் அவரும் ஒருவர். எனவே பள்ளியின் அமைப்பு அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்.

அந்த சுலேகாவுடன் தனியே பேச விரும்பினால் அவளோடு பிரதீபன் சென்றிருக்கக் கூடிய இடம் அதுவாகத்தான் இருக்கும். கவனிப்பதற்கு யாரும் அற்ற தனிமை எங்கே கிடைக்கும் என்று தேடி அலைந்து கொண்டிருக்க மாட்டார்.

ஆனால் அப்போதும் சின்னப் பெண்ணான மகள் முன்னிலையில் என்ன பேசுவார்? அதிலும் அந்த சுலேகா நாகரீகம் அறிந்தவளாகவே தெரியவில்லை!

பவதியின் ஊகமே சரியாக பிரின்சியின் அறையிலிருந்து சென்ற மூவரும் பார்வையாளர் அறையில்தான் இருந்தார்கள்.

கூடவே அவள் அனுமானித்த மாதிரியே சுலேகா, பிரேமிதாவை ஒரு பொருட்டாகவே கருதாமல் பிரதீபனை அட்டையாக ஒட்டிக் கொள்ள முயன்று கொண்டிருந்தாள்.

அந்த எட்டு வயதுச் சிறுமியின் மனம் என்ன பாடும் என்பதை அவள் நினைத்துப் பார்க்கக் கூட விரும்பவில்லை என்பது மிக நன்றாகத் தெரிந்தது. படட்டும் என்கிற வெறி கூட இருக்கலாம்!

இதில் இன்னொன்றும் தெளிவுதான்.

அவளது பிடியில் இருந்து பிரதீபன் விலகத்தான் முயன்று கொண்டிருந்தார்.

சும்மா என்றால் “பூ” என்று அவளை அவர் உதறித் தள்ளியிருக்கக் கூடும். ஆனால், அவரோடு ஒட்டிக் கொள்வதற்காகப் பிரேமிதாவை விலக்கித் தள்ள சுலேகா முயற்சித்ததால், கீழே விழுந்துவிடாமல் மகளையும் அவர் காக்க வேண்டியிருந்தது.

மகளிடம் பாதிக் கவனத்துடன் பிரதீபன் முயன்றதால், சுலேகாவே வெல்வது போலத் தோன்றியது.

ஆனால் அவர்களது வெற்றி தோல்வியை விட, பிரேமிதாவின் முகத் தோற்றமே மனதைப் பாதிக்க, “பிரேமிதா!” என்று பவதி உரக்க அழைத்தாள்.

எல்லோரும் திகைத்த அந்த ஒரு வினாடியில், சுலேகாவின் பிடியை விலக்கித் தள்ளினார் பிரதீபன்.

அவள் தடுமாறி நிற்க, அவர் ஆத்திரத்தோடு கர்ஜித்தார்! “இதோ பார்! இதற்கு மேல் அலுவலகத்தில் கூட உன் முகத்தைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை. வேலையை நீயாக விட்டுவிட்டால் உனக்கு நல்லது. அல்லது உன் பிழைகளை எடுத்துச் சொல்லி நான் உன்னை விலக்கும்படி நேர்ந்தால், வேறு வேலை கிடைப்பது மிகவும் அரிதாகிவிடும்!”

“ஆங்!” என்று சுலேகா அதிர, அதிர்ச்சியில் மூச்செடுக்கும் வேறொரு மெல்லிய ஒலியில் பவதி பின்னே திரும்பிப் பார்த்தாள்.

ஆச்சரியமான ஆச்சரியம்! அங்கே தம்பியுடன் மதுமிதா நின்று கொண்டிருந்தாள்.

இந்தச் சரியான நேரத்தில் மது அக்கா இங்கே எப்படி வந்தாள்?

சற்று முன்பாகச் சாப்பாட்டு அறை வாசலில் நிகழ்ந்ததைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த பழைய காரோட்டி வேலுவின் முகம் பவதிக்கு நினைவு வந்தது.

விசுவாசமான பழைய பணியாளர் என்றால் இதுதான் போலும்!

குழந்தைக்குப் பிரச்சினை என்றதும் தந்தையான முதலாளிக்கு மட்டுமின்றித் தாயான பழைய எஜமானிக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்!

இப்போது மதுவின் முதுகெலும்புதான் வேலை செய்ய வேண்டும்! பார்த்தால் அது வேலையும் செய்தது எனலாம்.

முதலில் தயங்கியபோதும், உடனேயே ஒரு தலைச்

சிலுப்பலுடன் மதுமிதா அந்தப் பெரிய ஹாலுக்குள் நிமிர்வுடனேயே சென்றாள்.

உள்ளூர மனம் தவிக்கத் தன்னியல்பாய் பவதியை நெருங்கி அவளது ஒரு கையை சற்று இறுகவே பற்றி அருகே சேர்ந்து நின்று உள்ளே நடப்பதைக் கூர்ந்து கவனித்தான் ஜெகன். என்ன நடக்குமோ என்ற கவலை அவனுக்கும்தானே?

உள்ளே சென்ற மதுமிதாவை முதலில் பார்த்தவள் பிரேமிதாதான்.

“அம்மா!” என்று அவள் கூச்சலாய் அழைக்கவும் பிரதீபனின் முகம் கன்றிக் கறுக்கப் பக்கவாட்டில் எட்டிப் பார்த்த சுலேகாவின் முகம் எட்டுக் கோணலாக மாறியது.

யாருக்கும் தெரியாமல் அவள் ஏதோ திட்டமிட்டால், இந்த மொத்தக் கூட்டமும் அவளுக்கு எதிராகப் பெரிய சதியல்லவா செய்திருப்பதாகத் தெரிகிறது! பெண்டாட்டி, மச்சினன், மகளோடு பள்ளிக்கூடத்து டீச்சர், ஆயா . . அந்தத் தலைமை ஆசிரியை வேறு!

எல்லோருக்கும் வேலுதான் உளவோ? மற்றபடி அவள் இங்கே வந்தது இதுகளுக்கு எப்படித் தெரியும்? சீக்கிரமே அவனுக்கும் ஒரு வழி பண்ண வேண்டும்! அப்புறம் அந்தப் பிரின்சிக்கு!

அதிகாரப் பூர்வமாக அறிவிப்பு வரவில்லையாமா?

அந்தத் தம்பிக் கழுதை வேறு அந்த வாத்திச்சி கையைப் பிடித்துக்கொண்டு நிற்பதிலேயே தெரியவில்லையா, எல்லாரும் கூட்டுக் கள்ளர்கள் என்று?

ஆனால், இதற்காகவெல்லாம் பயந்து இந்த சுலேகா ஓடி விடுவாளா என்ன? ஆண்டுக் கணக்கில் திட்டமிட்டுப் படிப்படியாய்க் காய் நகர்த்தி, என்னமாய்ப் பாடுபட்டிருக்கிறாள்! விட முடியுமா?

ஆவேசத்துடன் பிரதீபனிடம் திரும்பி, “நீங்களே பாருங்கள் தீபு டார்லிங். எல்லாரும் கூடி சதி செய்து நம்மைப் பிரிக்கப் பார்க்கிறார்கள். அத்தனை பேரும் உங்களைப் பற்றி அறியாத முட்டாள்கள். எல்லோரையும் அடித்து விரட்டுங்கள் டார்லிங்! விரட்டிவிட்டு என்னோடு வாருங்கள், நான் உங்களுக்கு சொர்க்கத்தைக் காட்டுகிறேன்! என்னோடு வாருங்கள் டியர்!” என்று பிரதீபனின் கையைப் பிடித்து இழுத்தாள் அவள்.

“சீ, கையை விடு! இனி ஒரு தரம் என்னைத் தொட்டால் தொட்ட கையை முறித்து விடுவேன். ஓடு இங்கிருந்து. அலுவலகப் பக்கம் கூட எட்டிப் பார்க்கக் கூடாது. ஏற்கனவே சொன்னேன் அல்லவா? நீயாக ஓடிவிட்டால் எங்கேனும் போய்ப் பிழைக்க முடியும். நானாக விரட்ட நேர்ந்தால், அப்புறம் குடிக்கக் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல்

பண்ணிவிடுவேன்! ஓடு உடனே!” என்று கடுமையான குரலில் மிரட்டினார் பிரதீபன்.

வியப்பும் பிரமிப்புமாகப் பார்த்தாலும் முகத்தில் ஒரு வெறுப்பான சுளிப்புடனேயே மதுமிதா தலையைத் திருப்பிக்கொண்டாள்.

“செய்வதையெல்லாம் செய்துவிட்டு உன் பெண்டாட்டி நடிக்கிறாள் பார். அவளை விட்டு ஒழித்துவிட்டு, என்னோடு வா என் ஆசைக் காதல் மன்னா!” என்று கொஞ்சலாகப் பேசி மீண்டும் பிரதீபனை அணைக்க முயன்றாள் சுலேகா.

மதுமிதா அருவருப்புடன் திரும்ப, பிரேமிதாவின் கண்களில் கலக்கத்தைக் கவனித்து, ஒரு சிறு பார்வைப் பரிமாற்றத்துடன் ஜெகனும் பவதியும், மற்றவர்களை நெருங்கினர்.

“பிரேமிதா . . .” என்று அழைத்து, “வாம்மா, கையில் நகம் அழுந்திய காயம் இருக்கிறதல்லவா? “சிக்” ரூமுக்குப் போய் மருந்து போடலாம். வா.” என்று அவளை அழைத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறலானாள்.

“காயமா?” என்று கவலையுடன் திரும்பிய தமக்கையைக் கண்ணசைத்து நிறுத்தினான் ஜெகன்.

“தாங்க்ஸ் மேம்!” என்ற பிரதீபன் சுலேகாவை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளினார். “ஒரு தரம் சொன்னால் புரிந்து கொள்ளும் அறிவில்லை? இன்னும் எத்தனை தடவை கூறுவது? கடைசியாகச் சொல்லுகிறேன் கேள், உயிரோடு இருக்க வேண்டுமானால் முகத்தில் முழிக்காமல் ஓடிவிடு!” என்றார் உறுமலாக.

விலகிச் செல்லச் செல்ல ஒலி குறைந்து மறைந்தபோதும், காதில் விழுந்த அளவில் பவதிக்கு உள்ளூர ஆறுதலாக இருந்தது. மேலே என்ன நடக்குமோ என்று கவலைதான். ஆனால் எப்படியும் அந்த ராட்சசி விலகிப் போய்விடுவாள்!

அவளுக்கு இருந்த திடம் பிரேமிதாவுக்கு இருக்க வாய்ப்பில்லைதானே? தன் ஆசிரியையின் கரத்தை இறுகப் பற்றியபடி, திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே “மிஸ், அம்மா மறுபடியும் அழுவாங்களா? என்று கவலையுடன் வினவினாள்.

இடுப்போடு சேர்த்து அணைத்து, “அப்படி நடக்காது செல்லம். அப்பா, மாமா இரண்டு பேருமாக அந்த சுலேகாவை விரட்டிவிடுவார்கள். அப்பாவே அவளைப் போகச் சொன்னதை நீயுமே கேட்டாய்தானே? நாம் மருந்து போட்டுக்கொண்டு செல்லும்போது நிச்சயமாக அந்த சுலேகா ஓடியே போயிருப்பாள்!”

என்றாள் பவதி

“பிராமிஸ் மிஸ்?”

“காட் ப்ராமிஸ்!”

அவளுக்குமே அதில் உறுதி இருக்கத்தான் செய்தது. சுலேகாவிடம் பிரதீபன் பேசிய விதம் ஒரு புறமிருக்க, அவர் மனைவியைப் பார்த்த பார்வையே அவளுக்கு அந்த நிச்சயத்தைத் தந்தது எனலாம்!

மதுமிதா கணவனை மன்னிப்பாளா மாட்டாளா என்பது வேறு விஷயம். ஆனால் சுலேகாவுக்கு அவர்களிடையே இனி இடமில்லை! அது உறுதி!

பவதி ஊகித்தது போவேதான் நடக்கவும் செய்தது.

நோயாளி அறையில் பிரேமிதாவின் காயத்துக்கு மருந்து போட்டு, அவளை மீண்டும் பார்வையாளர் அறைக்குப் பவதி கூட்டி வந்தபோது, சிறுமியுடைய பெற்றோர் இருவருமே அங்கே இல்லை.

சுலேகா இருக்க மாட்டாள் என்பது பவதி எதிர்பார்த்ததுதான். ஆனால் மற்ற இருவரும் எங்கே போனார்கள்?

பவதி பார்வையால் கேட்டதையே பிரேமிதா வார்த்தைகளால் உரக்கக் கேட்டாள்.

“சுலேகாவை விரட்டி விட்டதால் கார்கள் இப்போது மூன்றாகி விட்டதில்லையா? ஒன்றை அனுப்பிவிட்டு வர இருவரும் சென்றிருக்கிறார்கள்.” எனற்னான் ஜெகன்.

“கூடவே பள்ளி விடுகிற நேரம் ஆகிவிட்டதால், நீ போய்ப் பள்ளிப் பை, சாப்பாட்டுப் பை எல்லாம் எடுத்து வந்துவிடு மித்திமா!” என்று அக்கா மகளை அனுப்பிவிட்டு ஜெகன் பவதியைப் பார்த்தான்.

“அத்தானைப் பிடித்திருந்த பேயை விரட்டிவிட்டோம், பவி. அவளும் லேசில் போகவில்லை. போலீசுக்குப் போவேன், மீடியாவில் சொல்லுவேன் அது இது என்று கூறி அச்சுறுத்த முயன்று பார்த்தாள். அப்படிச் செய்யாமல் இருக்க வேண்டுமானால், பெரும் பணம் தரவேண்டும் என்றும் வெளிப்படையாகவும் கேட்டு மிரட்டினாள். ஆனால் யார், யாரை மிரட்டுவது?

“அவளுக்கு முன்னே தான் போலீசுக்குப் போகப் போவதாக அத்தான் சொன்னதிலேயே அவள் பாதி அவுட்டு! மீடியா பற்றியும் அப்படியே. இதற்கெல்லாம் பயந்தால் இந்தக் காலத்தில் யாரேனும் தொழில் நடத்த முடியுமா? சொல்லுவதற்கு முதலில் நீ இருக்க வேண்டாமா என்று ஒரு பதில் மிரட்டலில் ஆள் அரண்டுவிட்டாள்.

“அத்தானும் நானும் சேர்ந்து அவளைக் கடுமையாகப்

பயமுறுத்தி அனுப்பி வைத்தோம். கடைசியில் செலவுக்குக் கொடு என்று அவள் கெஞ்சியதைக் கூட சம்பளக் கணக்கு முடிப்பதற்கு மேல் பைசா கிடையாது என்று அத்தான் கறாராகப் பேசி முடித்துவிட்டார்!" என்றான் ஜெகன்.

"ஆனால் மது அக்கா, அவர்கள் கணவரை எளப்படி . .?"

"அவளும் எல்லாம் பார்த்தாள்தானே? ஆனால் அத்தானிடம் அக்கா பேசவே இல்லை. தன்னால் அவரை மன்னிக்க முடியாது, மாட்டவே மாட்டேன். என்று என்னிடம்தான் சொன்னாள். ஆனால் அத்தான் அக்காவின் காலில் விழாத குறைதான். "மன்னிப்புக்கு நான் தகுதியானவனும் இல்லை, கண்மணி. பெரிய தப்பு செய்திருக்கிறேன். ஆனால் தயவு பண்ணி நம் வீட்டுக்குத் திரும்பி வந்துவிடு நீயும் மித்திச் செல்லமும் இல்லாமல் அது கொடும் பாலைவனம் போல இருக்கிறது மதும்மா" என்று அத்தான் கெஞ்சினார். அப்புறம் ரொம்பத் தனியாக எதையோ தெரிவிக்க நினைத்தார் போலும். மெய்யாகவே காலைக் கூடப் பிடிக்க எண்ணியிருக்கலாம்.! கொஞ்ச நேரம் சும்மாப் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கும்படி கேட்டு அக்காவைக் காருக்குக் கூட்டிப் போனார். . . ." என்று ஜெகன் சொல்லும்போதே அவர்கள் இருவரும் அங்கே திரும்பி வந்தனர்.

இருவரின் விழிகளும் சிவந்திருப்பதைக் கவனித்து மற்ற இருவரும் ஒருவரை ஒருவர பார்த்துக் கொண்டனர்.

பள்ளி விடும் இறுதி மணி அடித்துவிட, பிரேமிதா தோளில் புத்தகப் பையுடன் ஓடோடி வந்தாள். பெற்றோரைக் காணவும் முகம் மலர்ந்து விகசிக்க "அப்பா! அம்மா!" என்று பாய்ந்து சென்று அவர்களை அணைத்துக் கொண்டாள்.

மகளை அணைத்துத் தூக்கியபோதும், "இனிமேல் அம்மா வயிற்றில் போய் முட்டக் கூடாது செல்லம்!" என்றார் பிரதீபன் கனிந்த குரலில்.

கண்கள் கலங்கி இருந்தாலும் மதுமிதாவின் முகம் பவதிக்குத் தன் தாயின் பேச்சை நினைவுபடுத்தியது. மனித மனம் விசித்திரம்தான்!

எப்படியோ? பிரிந்த குடும்பம் ஒன்று சேர்ந்துவிட்டது., அதுவே சந்தோஷம் என்று எண்ணினாள் அவள்.

ஆனால் கூடவே ஏதோ ஒரு சிறு உறுத்தல்.

இனி . . . இனி அவர்கள் வீட்டில் எல்லாம் வழக்கம் போல இயல்புக்கு வந்துவிடும். அதனால் . . . ஜெகனை இனிமேல் பார்க்க முடியுமோ என்னவோ? அவசியம் என்று எதுவும் கிடையாது. ஆனால் . . .

இணைந்துவிட்ட குடும்பத்தில் பானகத் துரும்பாக இருக்க விரும்பாமல், "பபள்ளி முடிந்துவிட்டது. நான் கிளம்புகிறேன். " என்று பொதுவாகக் கூறிவிட்டு பவதி அங்கிருந்து செல்லலானாள்.

அவளது கையைப் பற்றித் தடுத்து, "பொறு பவதி. அப்படியே உன்னைக் கழற்றி விட்டுவிடுவேன் என்றா நினைத்தாய்? ஆன்டிக்கும் அங்கிளுக்கும் மனதார நன்றி சொல்லாவிட்டால் அப்புறம் நான் என்ன மனுஷி? எங்களுடனேயே வா. உன்னை வீட்டில் விட்டுவிட்டு உன் பெற்றோருடன் பேசிவிட்டுக் கிளம்புகிறோம். மித்திமா, நீ யாரோடு வருகிறாயடா? என்னோடா? மாமா காரிலா?" என்று மகளிடம் கேட்டாள் மதுமிதா.

சற்று யோசித்தாள் பிரேமிதா. "ம் ம் . .. அப்பா காரை ஓட்டுவாங்க. நீங்க வேலை பற்றிப் பேசிட்டே இருப்பீங்க. ஊகூம். நான் மிஸ் கூட வரேம்மா. மிஸ் வாங்க. நாம் இரண்டு பேரும் போய் உங்க சாப்பாட்டுப் பையை எல்லாம் எடுத்திட்டு வரலாம்." என்று மகிழ்ச்சியோடு குதித்தாள்.

கனிவோடு மகளைப் பார்த்துவிட்டுத் தம்பியிடம் மதுமதி பேசினாள்.

"ஜெகன் , உன் காரில் மித்தியையும் பவதியையும் கூட்டி வா. நாங்கள் முன்னே போய்க் கொஞ்சம் பழங்கள், ஸ்வீட் வாங்கிக்கொண்டு அங்கே வந்து சேருகிறோம்." என்றுவிட்டு முன்னே நடந்தாள் அவள்.

ஆனால் பவதியின் வீட்டில் மதுமிதா பேசியதே வேறு.

"முதலில் இந்த இனிப்பு சாப்பிடுங்களை." என்று கூறி எல்லோருக்கும் ஸ்வீட் எடுத்துக் கொடுத்துவிட்டு, தன் தம்பிக்குப் பவதியைப் பெண் கேட்டாள் அவள் !

# அத்தியாயம் -11

வரும்போதே பவதி ஓரளவு சொல்லியிருந்ததால் அவளுடைய குடும்பத்தினர் பிரதீபனின் வரவுக்குத் தயாராகவே இருந்தார்கள். இயல்பாக வரவேற்று உபசரித்தார்கள்.

பத்மாசனியின் ஸ்பெஷல் காஃபியோடு அவசரத் தயாரிப்பாகப் பஜ்ஜியும் தயாராக இருந்தது.

ஆனால் முதலில் தன் சார்பாக எல்லோருக்கும் மதுமிதா இனிப்பை எடுத்துக் கொடுத்தாள்.

ஒன்றை முடித்துவிட்டு இன்னொன்றை எடுத்துக்கொண்டு,

“இந்த இனிப்பு ரொம்ப நன்றாக இருக்கிறது மதுக்கா. இனிப்பு, நெய் இரண்டுமே குறைவாக, ஆனால் சுவையாக இருக்கிறது.” என்றாள் வாசந்தி.

“ஆக எல்லோருக்கும் பிடித்திருக்கிறதுதானே? ஏனென்றால் நான் கேட்கப் போகும் விஷயமும் அது போன்றுதான் எல்லோருக்கும் இருக்க வேண்டும்.” என்றாள் மதுமிதா புன்னகையோடு.

“கேட்கப் போவதா? சொல்லப் போவது என்று எண்ணினோமே!” என்றாள் வாசந்தி.

“சொல்லாமலே தெரிந்துவிட்டதை மீண்டும் என்ன சொல்வது? இது கேட்கப் போவதுதான். “ என்று நிறுத்தி எல்லோரையும் ஒரு தரம் பார்த்துவிட்டு, “என் தம்பி பூரி ஜெகன்னாதனுக்காகப் பவதியைப் பெண் கேட்கவே நான் வந்திருக்கிறேன்!” என்று புன்னகையோடு அறிவித்தாள் மதுமிதா.

விஷயத்தை ஏற்கனவே அறிந்ததிருந்ததால் பிரதீபன் முறுவலித்தபடி அமர்ந்திருக்க மற்ற எல்லோருக்குமே திகைப்புதான்!

தொடர்ந்த சிறு அமைதியைக் கலைத்து மதுமிதாவே பேசினாள்.

“என்ன அங்கிள், உங்களுக்குச் சந்தோஷம்தானே?” என்று சிவகுருவிடம் வினவினாள்.

அதிர்ச்சியை ஒருவாறு சமாளித்து, “ம் . ம். சசந்தோஷம்தான். எஎல்லாம் சரிதான். ஆனால் . . .” என்று இழுத்தார் அவர்.

“ஆனால் என்ன அங்கிள்? மறுப்பில்லை என்பதே எங்களுக்கு மகிழ்ச்சி. வேறு பிரச்சினை எதுவானாலும் தாராளமாகச் சொல்லுங்கள்.” என்றார் பிரதீபன்.

“அஅதாவது . . . பாபாருங்கள், எங்களுக்குத் தேவைக்கு அதிகமாகவே கடவுள் கொடுத்திருக்கிறார்தான். ஆனாலும், உங்கள் மாதிரியெல்லாம் கிடையாது! அது போல உங்கள் கிட்டே கூட நாங்கள் வர முடியாதே சார்.” என்றார் சிவகுரு.

தொடர்ந்து “மதும்மா, இது பற்றி உங்கள் பெற்றோருக்கும் வேறு நோக்கம் இருக்கக் கூடும் அல்லவா?” என்று அவளிடம் திரும்பிக் கேட்டார்.

சற்று வியப்புடன அவரைப் பார்த்தாள் அவள். “பெரியவர்கள் என்றால் நிச்சயமாக வேறுதான் அங்கிள்! நீங்கள் சொல்வது போலத்தான் என் அம்மாவும் முன்பு . . . முன்பு என்ற சொல்லை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள், முன்பெல்லாம் என் அம்மாவும் இதே போலத்தான் நூறு கோடிச் சொத்து உள்ள பெண்ணாக ஜெகனுக்கு பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு

இருந்தார்கள். . .” என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு “அதைத்தான் நானும் யோசித்தேன். சரியாகத்தான் யோசித்திருக்கிறேன் பார்த்தாயா?” என்றார் சிவகுரு.

“யோசித்தது ஓரளவு சரியே அங்கிள். ஆனால் என் பேச்சில் அந்த “முன்பை”க் கவனிக்கச் சொன்னேனே. முன்னொரு காலத்தில் என் அம்மா அப்படிப் பேசினார்கள்தான். ஆனால் கொஞ்ச காலமாக எங்கள் பேச்சினிடையே பவதியின் பெயர் அடிக்கடி வந்ததை அம்மாவும் அப்பாவும் கவனித்திருக்கிறார்கள். அப்புறம் பவதியும் மித்தியும் இருந்த ஒரு ஃபோட்டோவை அவர்களுக்கு அனுப்பினேனா? இவள்தான் மருமகள்., சீக்கிரமாகத் திருமணத்தைப் பேசி முடி. நாங்களும் உன் சித்தி வீட்டுத் தங்கலைக் குறைத்துக்கொண்டு விரைவிலே வந்து விடுகிறோம் என்று என்னை விரட்டுகிறார்கள. நேற்று இரவில் கூட இது விஷயமாக நான் மசமசவென்று நாளைக் கடத்துவதாக ஒரு டோஸ் எனக்கு விழுந்தது.” என்றாள் அவள்.

இவ்வளவு நடந்திருக்கிறதா என்று சிவகுரு சற்றுத் திகைத்து நிற்க பத்மாசனி கணவரின் அருகில் வந்தாள். “என்ன நீங்கள்? சரி என்று சொல்லி மேலே வேலைகளைப் பாராமல் சும்மா மசமசவென்று பழைய பொம்மை போலச் சும்மாவே நிற்கிறீர்களே!” என்று ஒரு போடு போட “அஅது சரி . .” என்று செய்வது அறியாதவர் போலக் கைகளை விரித்தார் அவர்.

புன்னகையோடு அவரது கைகளைப பற்றி இறக்கிவிட்டு, “பொதுவாகக் குடும்பங்களில் மதுரை ஆட்சிதான் சிறந்தது, அங்கிள். அதனால் பேசாமல் தலையாட்டி விடுங்கள்.” என்றார் பிரதீபன்.

அவரது பேச்சை ஏற்பதுபோல சிவகுருவின் தலை ஆடத்தான் செய்தது.

என்றாலும் ஒருபுறம் அவருக்குக் குழப்பமும் முழுதாகத் தீரவில்லை.

“அதில்லை சார், மகள்களுக்கு உரிமை கொடுத்து வளர்த்திருக்கிறோம். பவி என்ன சொல்லுவாளோ . . . என்று . . அதுதான் . . “ என்று அவர் மனைவியைப் பார்த்து இழுக்க, இப்போது அவள் முகத்திலும் திகைப்பு பரவியது.

உயர்ந்த சிறந்த வரனாக அவள் நினைத்தாலும், பவதி என்ன நினைக்கிறாளோ? திருமணம் வாழ்க்கை முழுதுக்கும் அல்லவா?

கணவனும் மனைவியும் தயக்கமும் குழப்பமுமாக மூத்த மகள் பக்கம் பார்க்க, வாசந்தி குறுக்கே புகுந்து பேசினாள்.

“என்ன மாதிரி அம்மா, அப்பா நீங்கள்? ம்? அதிலே ஜெகன் சார் பார்த்துவிட்டார் என்பதற்காக முதல் சம்பளத்தில் வாங்கியது என்று

பிடிவாதமாகப் போட்டுக் கொள்கிற கிழிந்த டீஷர்ட்டை அக்கா கிச்சன் துணிக்குக் கொடுத்ததிலேயே உங்கள் மூ . .த்த பெண்ணின் மனது தெரியவில்லையா?" என்று அழுத்தமான குரலில் கேட்டாள் சின்னவள்.

"அட ஆமாம் . . " என்று பத்மாசனி ஆறுதலோடு ஏதோ சொல்லத் தொடங்குமுன், முகம் பளிச்சிட "அது . . " என்று தொடங்கிவிட்டு ஜெகன், பவதி இருவரும் உடனே மௌனமாயினர்.

சுற்றிலும் பார்த்துவிட்டு, "சரிப்பா, எதற்கு அனாவசியக் குழப்பம்? ஜெகன், பவதி இருவரும் சற்று உலாவிவிட்டு வாருங்களேன். வந்து உங்கள் முடிவைச் சொல்லலாம்." எனறாள் மதுமதி.

ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு இருவரும் வெளியே நடந்தனர்.

மகிழ்ச்சி பொங்க, "தம்பி பற்றி எனக்கு நூறு சதவீத உறுதிதான், ஆன்ட்டி. உங்கள் மகளுடன் இருக்கும்போது என் மகளைப் பற்றிய கவலை சிறிதும் வேண்டாம் என்று அன்று அந்த முதல் நாளே எவ்வளவு உறுதியாகச் சொன்னான், தெரியுமா?. அத்தோடு பவதி இருக்கும் இந்த வீட்டைத்தான் வீடு என்று சொல்லலாமாம். பிறகும் பவி பற்றிப் பேசும்போது அவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஆயிரம் வாட் பல்ப் போட்ட மாதிரிப் பளபளக்கும்! அத்தோடு, சுற்றிலும் மற்ற எத்தனை பேர் இருந்தாலும் அவன் பார்வை பவி மேலேயேதானே இருக்கும்? அது மட்டுமா? பவதி அறையில் இல்லாதபோது கதவை யார் திறந்தாலும் என்ன ஆவலாக அங்கே பார்ப்பான் தெரியுமா? பவதி தவிர யார் வந்தாலும், முகம் சொத்தென்று ஆகிவிடும்! நான் நன்றாகக் கவனித்திருக்கிறேன்." என்றாள் அவள்.

"எதற்கும் இனிப்பாய் ஒரு கேசரி செய்து விடுகிறேனே! சந்தோஷத்துக்கு மேல் சந்தோஷமாக இருக்கிறதல்லவா?" என்று பத்மாசனி எழ, மதுவும் அவளுடன் சென்றாள்.

"அம்மா சொன்னது எனக்கு ஒண்ணுமே புரியலை. வசுக்கா. அதெப்படி முகத்திலே பல்ப் போட முடியும்? மாமாவுக்கு ஷாக் அடித்துவிடாது?" என்று கவலையாகக் கேட்டாள் சிறுமி.

சிரிப்பை அடக்கிக்கொண்டு, "அது வேறு மாதிரி பல்ப் பிரேம். அவர்களை விடு,

நாம் இருவருமாக நெயில் ஆர்ட் பண்ணலாமா?" என்று வாசந்தி கேட்க, "ஓகே அக்கா! " என்று குதித்த சின்னவளை, அவள் தன்னோடு கூட்டிச் சென்றாள்.

"என்னவோ? நீங்களும் பெண்ணைப் பெற்று

வைத்திருக்கிறீர்கள். பின்னாலே ஒரு சமயம் இப்படித் தலையாட்ட சீக்கிரமே தயாராகிக் கொள்ளுங்கள்." என்றார் சிவகுரு.

இரு புறங்களிலும் மரங்களுடன் கூடிய அழகிய தெரு அது.

இருவருமாகச் சற்று நேரம் அமைதியாகவே நடந்தனர்.

அன்றொரு நாள் காரை நிறுத்தி வைத்துக்கொண்டு பவதியின் வருகைக்காக ஜெகன் காத்திருந்த இடம் வந்தது.

திரும்பி அவளைப் பார்த்து, "அந்தக் கிழிந்த டீஷர்ட்! அது என்னவோ சொல்ல வந்தாயே . .என்ன அது?" என்று கேட்டான் அவன்.

சாலையை நேரே பார்த்து, "நான் மட்டுமா? நீங்களும்தானே? சொல்லுங்கள், நீங்கள் என்ன சொல்ல நினைத்தீர்கள்?" என்று அவள் விசாரித்தாள்.

"வந்து . . . அதுதான் தொடக்கம் பவி." என்றான் ஜெகன் சுருக்கமாக.

"என்ன தொடக்கம்?"

"பார் பவி, தயவு பண்ணி இதைத் தற்பெருமை என்று எண்ணவேண்டாம். ஆனால், பெரிய அளவில் சங்கிலித் தொடராக நாங்கள் தொடங்கி நடத்தும் சூப்பர் மார்க்கெட் நிறுவனங்கள் வெற்றிகரமாகவே நடப்பதால், ஒரே மகனாகவும் இருப்பதால் அவ்வப்போது பல முயற்சிகள் நடப்பதுதான். சிலர் எந்த அளவுக்குப் போவார்கள் என்று நீ கற்பனை கூடப் பண்ண இயலாது. அவ்வளவு மோசமாக இருக்கும். . . ."

சட்டென அவன் பேச்சில் குறுக்கிட்டு, "வாட்? நானும் அப்படி முயற்சிப்பதாகவா . . . எண்ணினீர்கள்?" என்று பவதி ஆத்திரத்துடன் தொடங்கச் சட்டென அவள் வாயைப் பொத்தினான் அவன்.

அவள் திகைத்து நிற்க, "நான் எனக்கல்லவா தொடக்கம் என்றேன். இப்போது சொன்னேனே, அது போன்ற சிலபல தோற்றங்கள் எல்லாம் என்னை எதுவும் செய்தது கிடையாது. சிறு சலனம் கூட நேர்ந்தது இல்லை. ஆனால், அன்று . .கிழிசலின் நடுவே தெரிந்த உன் தோளைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போலச் சட்டெனத் தோன்றிவிட்டது. என் கை கூட லேசாக உயர்ந்துவிட்டது. உயர்ந்த கையைப் பார்த்து எனக்கே . .நானே அதிர்ந்து போனேன், பவி! அதற்கு மேலே உன்னை நேரே பார்த்தால் என்ன ஆகிவிடுமோ என்று பயந்து உன்னை நிமிர்ந்து கூடப் பாராமலே பேசிவிட்டு ஓடிவிட்டேன்." என்றான் அவன்.

அன்றையத் தினம் என்னவெல்லாமோ நினைத்துக் கூசிக்

குறுகியது பவதிக்கு நினைவு வரக் “கடவுளே!” என்றாள் அவனது விரல்களுக்கிடையே.

அவளது வாயிலிருந்து கையை அகற்றி, “என்ன?” என்று கேட்டான் ஜெகன்.

“என்னவா? அன்று நான் என்ன நினைத்தேன் என்றால் வீட்டில் கிழிசலை அணிவதைப் பார்த்து ரொம்பக் கேவலமாக . .பிச்சைக்காரத்தனம் என்று எண்ணி விட்டீர்கள் போல என்று நினைத்து எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. அப்படி நீங்கள் என்னை மட்டமாக நினைப்பதை என்னால் தாங்கவே முடியவில்லை. அம்மா எத்தனையோ தடவை சொன்ன பிறகும் அததான் சுகம் என்று பிடிவாதமாக அணிந்து வந்த டீஷர்ட் அது. என் முதல் மாத ஊதியத்தில் வாங்கியது வேறு! அதைக் கழித்து விடுமாறு அன்றே அம்மாவிடம்  கொடுத்தேன், தெரியுமா?” என்ற விவரித்தாள் பவதி.

“அச்சோ, அது காதல் சின்னம் தாயே. பத்திரமாக லாக்கரில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய பொருள்! வீட்டுக்குப் போய் முதல் வேலையாக ஆன்ட்டியிடம் அதைப் பத்திரமாக வைத்திருக்கிறீர்களா என்று கேட்க வேண்டும்!” என்றான் அவன்.

“என்னது?!” என்று அதிர்ந்தாள் பவதி. “இதை மட்டும் என் தங்கை முன்னிலையில் கேட்டீர்கள் என்றால் அவ்வளவுதான்!” என்று கண்களை உருட்டினாள்.

“ஆனால் அது நம் காதல் சின்னமாயிற்றே! அது எனக்குக் கட்டாயம் வேண்டும் பவதி! வாசந்தி கேலி செய்தாலும் பரவாயில்லை! “ என்றான் அவன் பிடிவாதமாக.

“ஷ்! எனக்கு மட்டும் என்னவாம்? அதே போலத்தானே? ஆனால் அதை நானே தேடிப் பார்த்து எடுத்து வைக்கிறேன். இல்லாவிட்டால் வாழ்க்கை பூராவும் கிழிசல் சட்டைக் காதல் என்று வசு கிண்டலடித்துக் கொண்டே இருப்பாள்!”

அந்தக் காட்சி கற்பனையில் ஓட, “செய்வாள் செய்வாள்! உன் வாயாடித் தங்கை கட் . . . டாயம் செய்வாள்!” என்று அவன் மிரண்டவன் போலக் கூற, பவதிக்குச் சிரிப்புப் பொங்கியது. ஆசையுடன் பார்த்து அவனும் இணைந்து நகைத்தான்!